நன்றி - நூலகத்திட்டம்

SARINIHAR

ஸரிநிகர்

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ்-213 டிச.10-16, 2000 விலை ரூபா 12/-

**கொண்டு வாகொல்கருவி!**

சமாதானங் காணச் சண்டையிட்டோம்!: சண்டை விட்டு
சமாதானம் என்றால் சரியாமோ? - சமாதானம்
சண்டையின்றி ஆமோ? நாம்சாற்றியவை பொய்யாதோ?
கொண்டு வாகொல்கருவி! கொல்!!

ஈழமோகம்





**போர் என்றால் போர்! சமாதானம் என்றாலும் போர்!!**



**மலையகம்: புதிய தலைமையைத் தேடி...**

மட்டு, மேஜருக்கும் புலிக்கும் என்ன தொடர்பு?

**யாழ்: வவுனியா: காணாமல் போகும் இளைஞர்கள்!**

நாவல் உலகில் சர்ச்சையை ஏற்படுத்திய FUNNY BOY தொடராக

# எரிபொருள் விலை உயர்வை எதிர்த்து



ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை

நன்றி - நூலகத்திட்டம்



# இவ்வாரச் செய்திகள்

## நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தில் அஞ்சலினாவுக்கு மிரட்டல்

டிசம்பர் 3ம் திகதி இரவு 7.30 மணியளவில் நாரஹேன்பிட்டியிலுள்ள அஞ்சலினா றோசனாவின் வீட்டிற்கு வாகனமொன்றில் ஒரு கும்பல் வந்திறங்கியது. அஞ்சலினாவை கைது செய்து பொலிஸ் ஸ்ரேசனுக்கு அழைத்துச் செல்ல வந்திருப்பதாக இந்தக் கும்பல் கூறியது. வந்தவர்கள் யாரும் பொலிஸ் சீருடை அணிந்திருக்கவுமில்லை: வந்த வாகனம் பொலிஸ் வாகனமும் அல்ல என்பதுடன் அஞ்சலினாவை கைது செய்வதற்கான காரணத்தை அவர்கள் தெரிவிக்கவும் இல்லை. அஞ்சலினாவை பொலிஸ் ஸ்ரேசனுக்குத் தான் கூட்டிப் போகிறீர்கள் என்று எப்படி நம்புவது என்று அவரது குடும்பத்தினர் கேட்ட போது அவர்களது பற்களை உடைத்து விடுவோம் என்று மிரட்டி விட்டு அவரை வாகனத்தில் ஏற்றிச் சென்றது இக்கும்பல். இக்கும்பலில் இருந்தவர்களுள் ஒருவர் நாராஹென்பிட்டி பொலிஸ் நிலைய அதிகாரி என்று பின்னர் தெரியவந்தது.

உடுப்புக்கள் துவைத்துக் கொடுக்கும் பகுதி நேர வேலை செய்து வந்த அஞ்சலினா ஒரு வீட்டுக்கு கொண்டு செல்லப்பட்டாள். அங்கே பெறுமதி-வாய்ந்த மணிக்கூடொன்று உட்பட பல பொருட்களைக் காணவில்லை என்று அவளுக்குச் சொல்லப்பட்டது. அஞ்சலினா தனக்கு இதுபற்றி எதுவும் தெரியாது என்று சொன்ன போது, அவற்றைத் தேடி எடுக்குமாறு அவள் மிரட்டப்பட்டாள். அந்த வீட்டில் கிட்டத்தட்ட ஐந்து மணிநேரம் அவள் பலாத்காரமாக வைக்கப்பட்டிருந்தாள். இந்த நேரத்தில் பொலிஸ் நிலைய அதிகாரியும் வீட்டிலுள்ளவர்களுமாகச் சேர்ந்து மது அருந்தினார்கள்.

அதிகாலை 12.30 அளவில் அஞ்சலினா பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டாள். அங்கு அவள் கடுமையாகத் தாக்கப்பட்டதுடன் ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்திடுமாறு வற்புறுத்தவும் பட்டாள். டிசம்பர் 4ம் திகதியும் அவள் பொலிஸ் நிலையத்திலேயே தடுத்து வைக்கப்பட்டிருந்தாள். பொலிஸ் அடிக்கடி அவளை கட்டித் தூக்கி விட்டு அடிக்கப் போவதாக மிரட்டிக் கொண்டிருந்தது. வீட்டுச் சொந்தக்காரி பொலிஸ் நிலையத்திற்கு வந்த போதெல்லாம் அஞ்சலினா இவ்வாறு மிரட்டப்பட்டாள். அன்று பகல் மனித உரிமை நிறுவனத்திலிருந்து அங்கு போன சட்டத்தரணி சஞ்ஜீவ அஞ்சலினா பற்றி விசாரித்து விட்டு அவளை நீதிமன்றத்தில் ஆஜராக்கும்படி கூறினார். நாலிஸ்வாரிஸ் என்பவர், அஞ்சலினாவின் குடும்பத்தவர்களின் கோரிக்கைகளின் பேரில் சென்று பேசினார். அவளது சட்ட உரிமைகளை மதிக்குமாறு பொலிஸ் நிலைய அதிகாரியிடம் கேட்டுக் கொண்டார். இந்த நாட்டின் சட்டங்கள் மிகவும் பலவீனமானவை என்று அதற்குப் பதிலளித்தார் பொலிஸ் நிலைய அதிகாரி. எப்போது விடுவீர்கள் என்று கேட்ட போது நிலைய அதிகாரி எந்தப் பதிலும் சொல்லவில்லை. டிசம்பர் 5ம் திகதி வரை அஞ்சலினா விடுவிக்கப்படவில்லை. கடத்தல், சித்திரவதை சட்டவிரோத தடுத்து வைப்பு என்பவற்றுக்கு உள்ளாகியிருக்கும் அஞ்சலினாவை காப்பாற்ற உதவுமாறு கோரும் அறிக்கை ஒன்றை ஆசிய மனித உரிமைகள் அமைப்பு வெளியிட்டிருக்கிறது.

## தமிழ்நாடு விடுதலை முன்னணியின் புதிய இணையத் தளம்

சந்தனக் கடத்தல் வீரப்பனோடு தொடர்புடைய பிரிவினைகோரும் தமிழ்நாடு விடுதலை முன்னணி இணையதளம் ஒன்றை உருவாக்கியுள்ளது. அதில் தமிழ்நாடு விடுதலைப்படையின் கோரிக்கைகள் லட்சியங்கள் பற்றி விபரமாக வெளியிடப்பட்டுள்ளது.

இணையதளத்தில் நுழைந்தவுடன் 'மகா தமிழ்நாடு' என்கிற வரைபடம் காணப்படுகிறது. அதில் தமிழ்நாடு, யாழ்பாணம், கேரளா, ஆந்திரா, கர்நாடகத்தின் சில பகுதிகள் காணப்படுகின்றன.

தமிழ்நாடு விடுதலை முன்னணித் தலைவர் மாறனை உண்மையான தமிழ் போராளி என்றும், சந்தனக் கடத்தல் வீரப்பனை தமிழ் ராபின்ஹுட் என்றும் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

தமிழ்நாடு விடுதலைப் படை அமைப்பு பற்றிய வரலாறும் அதில் இடம் பெற்று இருக்கிறது. வீரப்பனை பற்றி பல்வேறு பத்திரிகைகளில் வந்த செய்திகள் இணைய தளத்தில் வந்த செய்திகள், கட்டுரைகள் (ராஜ்குமார் கடத்தல் வரை) அதில் இடம் பெற்று இருக்கின்றன.

எல்லாவற்றுக்கும் மேலாக அதிர்ச்சியளிக்கக்கூடிய ஒரு அறிக்கையும் அதில் இடம் பெற்று இருக்கிறது. 'வீரப்பன்-மாறன் ஆகியோரைப் பிடிப்பதற்கான சிறப்பு அதிரடிப் படையின் ரகசிய அறிக்கையும் (மே.22, 2000) அதில் இடம்பெற்றுள்ளது.

## நோர்வேயிடம் இன்னொரு கோரிக்கை!

யாழ்ப்பாணத்தில் கைதாகி சிறிலங்கா படைமுகாம்களிலும் தென்பகுதி சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களின் விடுதலைக்கு உதவுமாறு கைதாகி காணாமல் போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்கம் நோர்வே நாட்டின் இலங்கைக்கான துாதுவரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக நோர்வே துாதுவருக்கு இச்சங்கம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: 'சிறிலங்கா படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்களை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதியிடமும் பாதுகாப்பு அமைச்சிடமும் எமது சங்கம் பலமுறை கோரியது. இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு இவ்வாறானவர்களைப் படையினர் கைது செய்யவில்லையெனவும் அவர்களைக் கண்டு பிடிக்க முடியவில்லையெனவும் தெரிவித்தது. ஆனால் கைதான சுமார் 1500 பேர் அரச படைகளின் பாதுகாப்பிலும் சிறைகளிலும் உள்ளதாக அறிகின்றோம். இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களையும் இளம் பெண்களையும் அவர்களுடைய நீதிமன்ற விசாரணைகளை விரைவில் மேற்கொண்டு விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் குற்றமற்றவர்களை உடனடியாக விடுதலை செய்ய தாங்கள் ஆவன செய்யுமாறும் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்' என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாகிஸ்தானில் இருந்து வருவதை விட கொழும்பிலிருந்து வருவதற்கு மூன்று மடங்கு கூலி!

"கப்பலில் இலங்கைக்கு பொருட்களை இறக்குமதி செய்வதற்கான கப்பல் சுமை கூலியாக மெற்றிக் தொன் ஒன்றிற்கு அதிக பட்சம் 30 அமெரிக்க டொலர்களே செலவாகின்றன. பிறேசிலில் இருந்து கொழுப்புக்கு கொண்டுவர 30 அமெரிக்க டொலர்களும், பம்பாயிலிருந்து கொண்டுவர 24 அமெரிக்க டொலர்களும், சென்னை, பாகிஸ்தான் ஆகிய இடங்களில் இருந்து கொண்டு வர முறையே 20, 12 அமெரிக்க டொலர்களும் செலவாகையில், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பொருட்களை எடுத்துச் செல்ல 50 அமெரிக்க டொலர்கள் அறவிடப்படுகின்றன.

மேரிஸ் ஷிப்பிங் லிமிட்டெட் என்ற கம்பனியே இந்த சரக்குக் கப்பல் சேவையின் தனிக்காட்டு ராஜாவாக விளங்குகிறது. இந்தக் கட்டணம் நம்ப முடியாத ஒரு விலையாக இருப்பினும் அதுதான் நடந்து வருகின்றது. சர்வதேச விலையை விட இரண்டரை மடங்கு அதிக கூலி இந்தக் கம்பனியால் அறவிடப்படுகின்றது.

உண்மையில் தரை மார்க்கமாக பொருட்களை எடுத்துச் செல்வதானால் ஒரு மெற்றிக் தொன்னுக்கு ரூபா 600 மட்டுமே செலவாகும். ஒரு லொறியில் 10 மெற்றிக் தொன் பொருட்களை கொண்டு செல்ல முடியும். அதற்கு மொத்தம் 6,000 ரூபா மட்டுமே தேவை. ஆனால் 10 மெற்றிக் தொன் பொருட்களை அனுப்ப இப்போது (இப்போதைய டொலர் விலையில்) 40,000 ரூபா செலவாகின்றது. இந்தச் செலவும் GST வரியும், ஆவணக் கட்டணமாக ஒரு வீதமும் சேர்ந்து பொருட்களின் விலையை அசாதாரணமாக உயர்த்துகின்றன. இதனால் பெருமளவுக்கு பாதிக்கப்படுவது அங்கு வாழும் அப்பாவி மக்களே.

இந்த அநியாயமான நிலையில் இருந்து மக்களை விடுவிக்க ஏதாவது செய்யும் படி நாம் ஜனாதிபதி முதல் மந்திரிமார்கள் பலரிடமும் கேட்டும் எந்தப் பயனும் இல்லை. யாரும் இவ்விடயத்தை ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

இவ்வாறு யாழ் மாவட்ட எம்.பி. ரி.மகேஸ்வரனுக்கு அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு பொருட்களை கப்பலில் ஏற்றும் வணிகர் கழக அமைப்பின் சார்பில் அதன் தலைவர் என்.குணரத்தினத்தால் அனுப்பப்பட்ட கடிதம் ஒன்றில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

யாழ் மாவட்ட மக்களின் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டவர் என்ற முறையில் இவ்விடயத்தில் அக்கறை காட்டி அம்மக்களின் துயர் துடைக்க உதவுங்கள் என்று அக்கடிதத்தில் மேலும் கேட்கப்பட்டுள்ளது.

எரிபொருள், மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி அதிகரிப்பைக் கண்டித்தும் மேற்குறித்த கோரிக்கைகளை உள்ளடக்கியும் டிச.6ம் திகதி ஐ.தே.கவின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரான ரி.மகேஸ்வரன் தலைமையில் ஐ.தே.கவினர் மாட்டு வண்டியில் பாராளுமன்றத்திற்குச் சென்று தமது எதிர்ப்பை வெளிக்காட்டினர்.

## யாழ். வைத்தியசாலைக்கு மருந்து வருவதில் இழுபறி

யாழ். வைத்தியசாலைக்கு கொழும்பிலிருந்து பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றி மருந்து வகைகளை எடுத்து வருவதற்கு நடடிக்கை எடுக்க வேண்டுமென யாழ். போதனா வைத்தியசாலை நிருவாகம் சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடித்தில் தெரிவித்துள்ளது.

இக்கடித்தில் வைத்திய நிபுணர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் ஒப்பமிட்டு ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

யாழ். வைத்தியசாலைக்குக் கொழும்பிலிருந்து மருந்து வகைகளை எடுத்து வருவதற்குப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறவேண்டியுள்ளது. இந்த அனுமதியைப் பெறுவதற்கு விண்ணப்பித்து விட்டு நீண்ட நாட்களுக்குக் காத்திருக்க வேண்டியுள்ளது. இதனால் காலதாமதம் ஏற்படுகின்றது. தற்போது மருந்து வகைகளுக்கு வைத்தியசாலையில் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. முக்கிய மருந்து வகைகள் முற்றாக முடிவடைந்துள்ளன. இதனால் நோயாளிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர். பலர் தனியார் கடைகளில் கூடிய பணத்தைக் கொடுத்து மருந்து வகைகளை வாங்க வேண்டியுள்ளது. இதனால் வறுமையில் வாடும் நோயாளிகளும் சிரமத்தை அனுபவிக்கின்றனர். எனவே பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றி மருந்து வகைகளை எடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்க வேண்டுமென இக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'பேசாப் பொருள்' பேசிய பொருள் டக்ளஸ்?

யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பிரிவு மாணவர்களினால் டிச.4ம் திகதியன்று மாலை 4.30 மணியளவில் 'பேசாப்பொருள்' என்ற பெயரில் தெரு நாடகமொன்று நடத்தப்பட்டது. இதில் யாழ்ப்பாணத்தில் இடம் பெறும் பல்வேறு ஒடுக்குமுறைகள் தொடர்பான காட்சிகள் காண்பிக்கப்பட்டன.

பல்கலைக்கழத்தின் உள்ளே வீதியில் இந்த நாடகம் நடத்தப்பட்டது. இதை நூற்றுக்கணக்கான பொதுமக்களும் கண்டு களித்தனர். இந்தத் தெருநாடகம் தொடர்பாகக் கட்டப்பட்டிருந்த பதாதையொன்றை கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ்.பாலச்சந்திரன் கிழித்தெறிந்து தனது எதிர்ப்பைக் காட்டியுள்ளார். மாணவர்கள் எந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாது நாடகத்தை நடத்தி முடித்துள்ளனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை மிகக்கொடூரமான முறையில் சித்திரிக்கும் வகையில் உருவம் அமைத்து அவருடன் பொதுமக்கள் போர் புரியும் ஒரு காட்சி இந்த நாடகத்தில் இடம் பெற்றது.

இந்தத் தெருநாடக நிகழ்ச்சியை முன்னிட்டு பதாகைகளும் கட்டப்பட்டிருந்தன. அதில் பின்வரும் வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன.

'ஒழுக்குமுறையைப் பார்க்காதே, ஒடுக்குமுறையைப் பேசாதே, ஒடுக்குமுறையை கேளாதே, ஒடுக்குமுறையை உணராதே' , 'செம்மணியில் அம்பலமாகிய அம்மணிக்கு ஆடை வழங்கியவரைப் பாராட்டுகிறோம்', 'எங்கள் மீது சவாரி விடும் இனியவரே வருக', 'பதவி வீசி ஆள் பிடிக்கும் கௌரவத்துக்குரியவரை வாழ்த்துகிறோம்'.

இத்தெரு நாடகத்தின் தொனிப்பொருளாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீதான தீவிர விமர்சனமே அமைந்திருந்தது. இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகன் 'ஈ.பி.டி.பி. கட்சி ஜனநாயகத்தைக் கடைப்பிடிப்பதால் தான் இவர்கள் எமது கட்சிக்கு எதிராக இவ்வாறான நடவடிக்கைகளை செய்ய முடிகின்றது' என்றார்.

## டக்ளஸ்க்கு அமைச்சர் பதவி வாங்கிக் கொடுத்தது யார்?

ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் பங்கேற்றுள்ள ஈழமக்கள் ஜனநாயக கட்சி (ஈ.பி.டி.பி.) தலைவர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு வழங்கப்பட்டுள்ள அமைச்சுக்களில் இந்து கலாசார அமைச்சும் ஒன்றாகும்.

இந்து கலாசார அமைச்சராக டக்ளஸ் தேவானந்தா பொறுப்பேற்றதையடுத்து இடம்பெற்ற இந்துமத குருமார்களுடனான சந்திப்பில் உரையாற்றிய ஸ்ரீ ஐயப்பதாசன், 'இந்த அமைச்சு டக்ளஸ் தேவானந்தாவிற்குக் கிடைப்பதற்கு 'நானே' காரணம். அவர் அமைச்சராக ஆனதற்கும் நானே காரணம். நானே இதனை அவருக்குக் கொடுக்கச் சொன்னேன் என எல்லாவற்றுக்கும் 'நானே' புராணம் பாடிக் கொண்டிருந்தார். இந்த நானே புராணத்தை டக்ளஸ் சகித்தாரோ என்னவோ அங்கிருந்த பேராசிரியர் ஒருவரால் சகிக்க முடியவில்லை. ஐயா, 'நான்' என்பது ஆணவத்தைக் குறிப்பது, நீங்களோ எல்லாவற்றுக்கும் நானே காரணம், நானே காரணம் எனப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். இந்து மதகுருவாகிய நீங்களே அவ்வாறு பேசாலாமா? என்றார்.

சுவாமி ஐயப்பதாசன் திரும்பவும் தொடங்கினார். 'நான் அதற்காகச் சொல்லவில்லை...

இது நடந்து சில நாட்களில் இந்த விடயத்தை ஒரு தினசரி பூடகமாக எழுதி விட்டது. விட்டாரா சாமியார். தொலைபேசி எடுத்து ஒரு வாங்கு வாங்கி விட்டார் பத்திரிகைக்காரர்களை. சாபம் வேறு போடுவேன். பத்திரிகைக் காரியாலயத்திற்கு முன்னால் உண்ணாவிரதமிருப்பேன் என்றெல்லாம் கடும் மிரட்டல் விடுத்தார் அவர்.

இது தவிர இந்து கலாசார அமைச்சின் ஊடாக வழங்கப்படும் அடையாள அட்டைக்கு ஒப்பமிடுவது தொடக்கம், யார் யாருக்கு அடையாள அட்டை வழங்க வேண்டுமென்பதை 'நானே' தீர்மானிப்பேன் எனவும் இவர் கூறி வருகின்றமை இந்து கலாசார அமைச்சு அதிகாரிகள் உட்பட சகல இந்துமத குருமார்கள் மத்தியிலும் எரிச்சலை உண்டு பண்ணியுள்ளதாகவும் தெரிய வருகிறது.

நன்றி - நூலகத்திட்டம்



# ஈழ விடுதலைப் போரும் எதிர்கெரில்லாப் போரியலும்


– டி.சிவராம்

தென் அமெரிக்க நாடான குவாத்தமாலாவில் கொத்தடிமை முறைக்கெதிராகவும், அநீதியான பெருநிலவுடமைக்கு எதிராகவும், மிகக் கொடூரமான இராணுவ ஆட்சிக்கெதிராகவும் அந்நாட்டினை போர்த்துக்கீசரின் வருகைக்கு முன்னர் ஆண்ட இன்கா, அஸ்டெக் போன்ற இனங்களின் வழித்தோன்றிய பூர்வீகக் குடிகளும், ஏழைவிவசாயிகளும், நகர்புறத் தொழிலாளர்களும் 30 ஆண்டுகளுக்கு மேலாக அமைதியாகவும் ஆயுதமேந்தியும் போராடி வந்துள்ளனர். இவர்களுடைய போராட்டங்களை மிகப்பயங்கரமான முறையில் நசுக்குவதற்கு தனது கைப்பொம்மையாக இருந்து வரும் குவாத்தமாலாவின் படைத்துறையினருக்கும் தன் தயவில் ஆட்சிபீடமேறிய அரசியலாளருக்கும் அமெரிக்கா 30 வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்து உதவி வருகின்றது. இலட்சக் கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் இங்கே எதிர் கெரில்லாப் போர் நடவடிக்கைகள் என்ற பெயரில் கொன்றொழிக்கப்பட்டுள்ளனர்.

தனது நவீன எதிர்கெரில்லாப் போர் முறைகளை குவாத்தமாலாவில் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் செம்மைப்படுத்தி விரிவாக்கியதாக அமெரிக்கப் படைத்துறை கூறுகிறது. இதைப் பற்றி பல நூல்கள் வெளிவந்துள்ளன. ஆனால், அண்மையில் இணையத்தில் ஒரு அமெரிக்கர் குவாத்தமாலாவில் தனது நாடு செய்த பயங்கரமான அட்டூழியங்களைப் பற்றி எழுதிய ஒரு நுட்பமான கட்டுரையில் மிக முக்கியமான விடயமொன்றை சுட்டிக் காட்டியுள்ளார். அவர் எழுதியுள்ளதை நமது பிரச்சினையுடன் ஒப்பிட்டுப் பார்த்த போது பல விடயங்கள் தெளிவாகின. அதாவது 30 வருடங்களாக நடைபெற்று வரும் போராட்டங்கள், பேச்சு வார்த்தைகள் என்பவற்றின் விளைவாக மனித உரிமை ஆணைக் குழுக்கள் ஜன-நாயக உரிமைகள், பொருளாதார சுபீட்சம் என தற்போது குவாத்தமாலாவில் முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாக கூறப்படுகிறது. அது பரவலாக ஏற்றுக் கொள்ளவும் படுகிறது.


இதில் மேற்படி கட்டுரையாளர் சுட்டிக் காட்டியுள்ள விடயம் என்னவெனில் 1950களின் நடுப்பகுதியிலிருந்து எந்த அநீதிகளுக்கு எதிராகப் போராட்டங்கள் நடைபெற்று வந்துள்ளனவோ அத்தனையும் இன்றும் அப்படியே உள்ளன என்பது தான். காணிப் பங்கீடு மக்களை அடக்கி ஒடுக்கும் கொடூரமான சட்டங்கள் எனப் பலவும் அடிப்படையில் 30 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தவாறே இன்றும் மாறாதுள்ளன. அமெரிக்காவின் மேற்பார்வையின் கீழ் நேரடியாகவும், மறைமுகமாகவும் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசியல் இராணுவ எதிர் கெரில்லாப் போர் முறைகள் இந்த அநீதிகளுக்கு எதிரான போராட்டங்களின் வீச்சையும் வலுவையும் முறியடித்து அடிப்படைப் பிரச்சினைகளே வேறு என்ற மாயையைத் தோற்றுவித்து அமெரிக்கச் சார்பு ஆளும் வர்க்கத்திற்கு சாதகமான முரண் தவிப்பை தோற்றுவித்துள்ளன. அடிப்படை அநீதிகள் இருந்தவாறே இருக்க அவற்றுக்கெதிரான போராட்டங்களை அரசியல் இராணுவ வழிமுறைகளினூடாக முறியடித்து அல்லது கட்டுப்படுத்தி செயல்படுவதற்கான ஒரு விஞ்ஞானமாகவே மேற்கத்திய எதிர் கெரில்லாப் போரியல் அமைந்துள்ளது.

இந்த வகையில் நாம் எமது பிரச்சினைகளை ஒப்பிட்டு நோக்கும் போது பல உண்மைகள் புலனாகும். இதில் முதலாவது எமது அமைதிவழி மற்றும் வன்முறை வழிப்போராட்டங்கள் எந்த அநீதிகளுக்கெதிராக 40 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்தனவோ அந்த அநீதிகள் இன்னும் அப்படியே இருந்தது இருந்தபடியே உள்ளன. குடியேற்றம் காணிப்பறிப்பு வேலைவாய்ப்பு, சிங்கள மொழி மேலாட்சி, பௌத்த மத மேலாட்சி என்பனவெல்லாம் மாறிகளாக உள்ளன. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் கிடைத்த உப்புச் சப்பற்ற மாகாணசபை கூட




சாகடிக்கப்பட்டு இப்போது பத்து வருடங்களுக்கு மேலாகி விட்டது.

வடகிழக்கில் மூன்று ஜனாதிபதித் தேர்தல்களும், மூன்று நாடாளுமன்றத் தேர்தல்களும் வைத்து விட்டார்கள். ஆனால், வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு மட்டும் தேர்தல் வைக்க முடியாதென்கிறார்கள். குறைந்தபட்ச மாகாண சுயாட்சியைக் கொடுக்காமல் 40 ஆண்டுகளுக்கு மேலாக எம்மை அழித்து வரும் அநீதிகளை திருத்திடாமல் எமது போராட்ட வலுவை எங்ஙனம் முறியடிப்பது என்பதிலும், இலங்கைக்குள்ள பிரச்சினை புலிகளின் பயங்கரவாதம் மட்டுமே என்னும் ஒரு மாயைத் தோற்றுவிப்பதிலும் சந்திரிகா அரசு மிகத் திறமையாகவே செயற்பட்டு வருகிறது.



அமைச்சுக்களுக்கிடையிலான ஒருங்கிணைக்கப்பட்ட மனித உரிமைகள் கண்காணிப்பிற்கான அமைப்பொன்றை தனது அரசு ஏற்படுத்தியுள்ளதாக கதிர்காமர் அமெரிக்காவிற் சென்று விதந்துரைத்துள்ளார். அமெரிக்க அரசும் இது ஏதே தமிழர் பிரச்சினையில் ஏற்பட்ட புரட்சிகர முன்னேற்றம் என்பது போல் கருத்து வெளியிட்டுள்ளது.

இலங்கையில் மனித உரிமை மீறல்களை கட்டுப்படுத்துவதற்கான வழிகளைச் செய்து விட்டால், தமிழர் பகுதிகளில் பிரச்சினை தீர்ந்து விடும் என்ற பாணியில் மேற்கு நாடுகளின் சில அணுகுமுறைகளும் பிரச்சாரங்களும் அமைந்துள்ளன. சிறிலங்கா அரசின் மனிதநேய முகம் காட்டும் சில காருண்யர்களும் அதையே கூறுகின்றனர்.

தமிழ்ப் பகுதிகளிலும் கொழும்பிலும் இயங்கும் மனித உரிமை நிறுவனங்களும் இந்த மாற்றங்களை வரவேற்றுப் பேசுகின்றன. அத்துடன் இவை மக்களுக்கு செயலூக்கம் வழங்கவும் வழி வகுத்திருக்கின்றன எனக் கூறுகின்றனர்.


ஆனால், உண்மை என்ன? பயங்கரவாதச் தடைச்சட்டம், அவசரகால விதிகள், புலிகள் தடைச்சட்டம் ஆகிய ஒடுக்குமுறைச் சட்டங்கள் அப்படியே தான் இருக்கின்றன. கடந்த மே மாதம் அவசரகால விதிகள் மேலும் கடுமையாக இறுக்கப்பட்டுள்ளன.

இந்தச் சட்டங்கள் அப்படியே இருக்க அவற்றின் வரையறைக்குள்ளேயே உரிமைகள் பற்றிப் பேசுவதற்கு இடம் வழங்கப்படுகின்றது. சிறி லங்கா அரசுக்கு மீண்டும் ஒரு தேவை ஏற்படும் போது மீண்டும் மேற்படி சட்டங்களை தமிழ் மக்களின் கழுத்தை நெரிப்பதற்கு தங்கு தடையின்றிப் பயன்படுத்த மாட்டாது என்பதற்கு எதுவித உத்தரவாதமும் இல்லை. இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் கடுமையான இந்தச் சட்டங்களும் சரி, அவற்றிலிருந்து எமக்கு சற்று சலுகை தரும் மனித உரிமை சம்பந்தப்பட்ட ஒழுங்குகளும் சரி, எதிர் கெரில்லாப் போரியலாளர்கள் கூறும் முறைகளுக்கமையவே உள்ளன என்பதாகும்.

அயர்லாந்தில் பிரிட்டிஸ் படையினரால் நடைமுறைப்படுத்தப்பட்ட எதிர்க்கெரில்லாப் போரியலின் பிதாமகரான பிரிகேடியர் பிராங்க் கிற்சன் இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்ற சட்டங்கள் எவ்வாறு ஒரு போராட்டத்தை நசுக்கும் இராணுவத்திற்கு தேவையாகவும் பிரச்சாரக் கருவிகளாகவும், அமைகின்றன என விளக்குகிறார். (இப்படியான சட்டங்கள் 'Just another weapon in the government's arsenal… ' which ' … becomes little more than a propaganda cover for the disposal of unwanted members of the public' என கிற்சன் தமது நூலில் கூறுகின்றார். அவர் எழுதிய Law Intensity Operations எனும் கை நூல் இலங்கையின் மூத்த படையதிகாரிகள் அனைவரும் கற்றுத் தெளிந்த ஒன்றாகும். 1993ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் தனது அரசின் எதிர் கெரில்லா நடவடிக்கைகள் எங்ஙனம் வெற்றி பெறுகின்றன என்பதைப் பற்றி நாடாளுமன்றில் அன்றைய பிரதமர் ரணில் விக்ரமசிங்க விளக்குகையில் இந்நூலின் ஒரு பகுதியை சபையில் வாசித்துக் காட்டினார்.)

குவாத்தமாலாவிலும் பல சட்டங்கள் எதிர் கெரில்லாப் போர் நடவடிக்கைகளுக்கு ஏற்ற வகையில் அறிமுகப்படுத்தப்பட்டன. பின்னர் மக்களுக்கு ஒரு விடிவைத் தருவது போன்ற மாயையை ஏற்படுத்துவதற்காக அவை அப்படியே இருக்க மனித உரிமை விசாரணைக் குழுக்கள், உண்மை அறியும் ஆணைக் குழுக்கள் என்பன ஏற்படுத்தப்பட்டன. இவை எல்லாம் அடக்குமுறை இயந்திரத்தை இருந்தபடியே ஒரு புறம் வைத்துக் கொண்டு மறுபுறம் மனித நேய முகத்தை மக்களுக்குக் காட்டி அவர்களை போராட்டத்தின் அடிப்படைகளிலிருந்து திசை திருப்பி போராட்ட இயக்கத்திலிருந்து அந்நியப்படுத்துவதற்கான எதிர் கெரில்லா வழி முறைகளாகும்.

இந்த வேலையைச் செய்வதற்கு



வன்முறையை நிராகரிக்கின்ற வெளிநாட்டு நிதியுதவியுடனும் ஓரளவிற்கு அரச இயந்திர ஒத்துழைப்புடனும் இயங்குகின்ற அரசு சாரா நிறுவனங்களுடைய உதவி முக்கியம் என அமெரிக்க இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர். எதிர் கெரில்லாப் போர் முறைகளின் கொடுரங்கள் பெரும் மனித அழிவுகளை ஏற்படுத்திய இடங்களில் மக்களை மனித உரிமைகள், சிறு கடனுதவித் திட்டங்கள், சிறு அபிவிருத்தி நடவடிக்கைகள், பொதுப்படையான வன்முறைக்கெதிரான அணி திரட்டல்கள் என்பவற்றின் அடிப்படையில் அணுகி, அவர்கள் மத்தியில் ஆயுதப் போராட்டத்தின்பாலுள்ள நாட்டத்தைக் குறைத்தும், அவர்களது போராட்டத்தின் அடிப்படைக் காரணங்களை வேறு தளத்திற்கு மாற்றியும் முரண் தணிப்பை ஏற்படுத்துவதற்கு இன்றைய உலகில் அரச சார்பற்ற நிறுவனங்கள் இன்றியமையாதவை எனவும் அவர்கள் கூறுகின்றனர்.

அதாவது ஒரு மக்களின் போராட்டத்தை நசுக்குவதற்கு மேற்கத்தைய எதிர் கெரில்லாப் போரியல் கூறும் வழிமுறைகளில் ஒட்டு மொத்தமான கொலைகளும் பயங்கரப்படுத்தலும் முதற்கட்டமாயின் இறுதிக்கட்டம் முரண் தணிப்பாகும். இந்தக் கட்டத்திலேயே மனித உரிமைகள், அபிவிருத்தி, வன்முறை எதிர்ப்பு என்பனவற்றிற்கு முதன்மை கொடுக்க வேண்டும் என எதிர் கெரில்லாப் போரியல் கூறுகின்றது.

குவாத்தமாலாவில் அமெரிக்காவின் உதவி வழங்கும் நிறுவனமான AID எவ்வாறு அந்நாட்டு இராணுவத்துடனும் CIA உடனும் இணைந்து செயற்பட்டது என்பதைப் பற்றி அந்நிறுவனத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி ஒருவர் எழுதியுள்ளார். ("At one time, many AID field offices were infiltrated from top to bottom with CIA people," disclosed John Gilligan, Director of AID during the Carter administration. "The idea was to plant operatives in every kind of activity we had overseas, government, volunteer, religious, every kind.")

இந்தக் கட்டத்தின் கால எல்லையை நீடித்து எதிர் கெரில்லாப் போர் நடவடிக்கைகள் காரணமாக ஏனைய கட்டங்களில் கிடைத்த பலாபலன்களை நிலைப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட போராட்ட இயக்கங்களுடன் பேச்சுவார்த்-தைகள் அவசியம் தேவையென நவீன எதிர் கெரில்லாப் போரியலாளர்கள் கூறுகின்றார்-கள். இவற்றையெல்லாம் நமது சூழலுடன் நாம் ஒப்பிட்டுப் பார்ப்பது அவசியம். ஏனெனில் குவாத்தமாலா, வியட்நாம், அயர்லாந்து எனப்பல நாடுகளில் அந்நாட்டுப் படைத்துறையினர் பயன்படுத்-திய அமெரிக்க பிரிட்டிஸ் எதிர் கெரில்லாக் கை நூல்களையே சிறிலங்கா அரசும் படையினரும் 20 வருடங்களுக்கு மேலாகப் பய்ன்படுத்தி வருகிறார்கள் நம்மில் பலர் அறியாமலேயே எமது பிரச்சினையைப் பற்றிப் பேசித்திரிகிறோம்.

நன்றி - நூலகத்திட்டம்



# வீரப்பனைப் பிடிக்க முடியாத இந்தியா பிரபாகரனைப் பிடிக்கப் போகிறது!

– விவேகி

கூரை ஏறி கோழிபிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போவதற்கான முயற்சிகளில் இறங்கியது மாதிரித் தான் இந்திய அரசாங்கம் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நாடு கடத்துவது பற்றி இலங்கை அரசுடன் கடந்த வாரம் பேசியிருக்கிறது.

இலங்கை அரசாங்கத்தின் அமைச்சர்களோ, படைத் தலைவர்களோ இதுவரை நேரில் காணாத பிரபாகரனை பிடித்துத் தருமாறு சந்தன மரக்கடத்தல் வீரப்பனைப் பிடிக்க வக்கில்லாத வல்லாட்சி மிகு இந்தியா சட்ட வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த வேண்டுகோள், உண்மையில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதற்கான இந்திய அரசின் ஆர்வமா அல்லது இலங்கையில் தனது மேலாட்சி விலகிவிடப் போகிறதே என்ற அச்சத்தின் காரணமாக எழுந்த குழப்பமா என்பதைக் காலம் தான் காட்ட வேண்டும்.

எதுவாக இருந்தாலும் இலங்கை மாத்திரமல்ல இந்தியா கூட விடுதலைப் புலிகளை வைத்துத் தான் அரசியல் நடத்துகிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது. இல்லாவிடில் இவ்வளவு காலமும் வாய்மூடிக் கிடந்த இந்திய அரசு இலங்கையில் பேச்சுவார்த்தைக்கான சூழல் ஒன்று உருவாகி வரும் வேளையில் பிரபாகரனை நாடு கடத்துமாறு கேட்பதில் பேச்சுவார்த்தையில் சிக்கலான நிலைமையைத் தோற்றுவிக்க வேண்டும் என்கிற மோசமான எண்ணத்தைத் தவிர வேறென்ன இருக்க முடியும்?

தெற்காசியாவுக்குத் தன்னை ஒரு '"விதானை"யாகப் பாவித்து நடந்து கொள்ளும் இந்தியா இலங்கையில் நடைபெறும் போரில் குளிர்காய முயல்வது அபத்தமானது. இந்தியத் தமிழர்களுடன் ஒன்றுபட்டு இலங்கைத் தமிழர்களின் துன்பங்களைத் துடைக்க மனிதாபிமான ரீதியில் மாத்திரமல்ல பூகோள அரசியல் கலாசார ரீதியாகவும் இந்தியாவுக்கு ஒரு பொறுப்பு இருந்தது.

ஆனால், அவற்றுக்கு மாறாக, இந்தியாவில் தமிழகம் கொந்தளித்து விடாதபடி தாஜா பண்ணுவதும், மறைமுகமாக இலங்கை அரசுக்கு யுத்த தளபாடங்களை விநியோகிப்பதும் இந்திய அரசுக்கு கைவந்த கலை.

இந்தியப் படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கையில் போர் மூண்ட காலத்தில் இந்தியப் படையினருக்காக மானசீகமாக அழுத ஏராளமான தமிழர்கள் கூட இன்று இந்தியாவை வெறுக்கும் அளவுக்கு இந்தியா, இலங்கைத் தமிழர் விசயத்தில் கபடத்தன- மாகவே செயல்பட்டு வருகிறது.

இலங்கையில் தமிழர்களுக்கென ஒரு அரசு தோன்றி விடக் கூடாது என்பதில் இந்தியா கரிசனை கொண்டிருப்பது அவர்களுடைய அரசியல் சூழலில் அவர்களுக்கு நியாயமான ஒன்றாக இருக்கலாம். ஆனால் இலங்கையில் அமைதி தோன்றி விடக் கூடாது என்று இந்தியா செயல்படுவதற்கு எந்தக் காரணமும் இருக்க முடியாது. மாறாக அப்பட்டமான மேலாடசி வாதமே இதில் தெரிகிறது.

இலங்கையில் போர் சுமார் இருபது வருடங்களாக தொடர்கி- றது. போரின் காரணங்கள் எவையாக இருந்தாலும் போரி- னால் இலங்கைத் தமிழர்களும் சிங்களவர்களும் மட்டும் தான் பாதிக்கப்படுகிறார்கள் என்றில்லை. இந்தப் போர் இன்னும் ஓரிரண்டு தசாப்தங்களுக்குத் தொடருமானால் பிராந்திய அமைதிக்கு அச்சுறுத்த- லாகவும் மாறி விடக்கூடும்.

இந்த விடயத்தில் இந்தயா செய்திருக்க வேண்டியது என்ன? அண்டை நாடு என்ற வகையில் தமிழ் மக்களின் நியாயமான தேவைக்கு மதிப்பளித்து சிங்களப் பேரினவாதத்துடன் பேசி தமிழர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வைப் பெறுவதற்கு உதவியிருக்க வேண்டும். அரசியலில் நிரந்தர நட்பும் பகையும் கிடையாது என்பதற்காகவே இலங்கை - இந்திய ஒப்பந்தம், இந்திய அமைதிப் படை வருகை அதன் விளைவுகள் போன்ற விடயங்கள் பிராந்திய அமைதிக்காகவும் தெற்காசியாவில் தனது அரசியல் ஸ்திரத்துக்காகவும் இந்தியத் தமிழகத்தின் ஆதரவை வெல்வதற்காகவும் இரண்டாம் பட்சமாக்கி தமிழர்களுக்கு ஒரு நல்ல தீர்வு கிடைக்க உதவியிருக்க வேண்டும்.

மாறாக, இலங்கை அரசுக்கு உதவுவதிலும், இலங்கை ராணுவத்- துக்கு இன்னல் நேர்ந்துவிடாது பாதுகாப்பதற்கும் தான் தமது ராஜதந்திரத்தையும் சக்தியையும் பயன்படுத்தி வந்திருக்கிறது. ராஜீவ் காந்தியின் கொலையை மனதில் வைத்துக் கொண்டு, பிரபாகரனைப் பழிவாங்குவதாக நினைத்துக் கொண்டு, ஈழத் தமிழர்களின் நியாயமான போராட்டத்தை நசுக்குவதற்கு தனது செல்வாக்கைப் பயன்படுத்தி வருகிறது அது.

பிரபாகரன் பேச்சுவார்த்தைக்கு வரமாட்டார் என்ற நம்பிக்கையோ என்னவோ, நோர்வே சமாதான முயற்சிகளை ஒவ்வொன்றாக உன்னிப்பாகக் கேட்டறிந்து ஆராய்ந்து ஆதரவு நல்குவது போல் முயற்சிகளை முன்னெடுக்க, இந்திய அரசு பேச்சுவார்த்தை நிகழலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டு வரும் இந்த காலகட்டத்தில் திடுதிப்பென்று பிரபாகரனை நாடுகடத்துவது பற்றி இலங்கைச் சட்டத்துறையுடன் ஆழமாகவே பேசியிருக்கிறது.

பேச்சுவார்த்தை நிகழ்ந்தால் நோர்வே புகழ் பெற்று விடும், பிரிட்டிஷாரின் செல்வாக்கு வளர்ந்து விடும், மேற்கின் கை இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஓங்கி விடும், அதனைத் தடுத்தாக வேண்டும் என்ற தனது சுயலாப எண்ணங்கள் தான் இந்திய அரசை மோசமான அரசியல் நிலைப்பாட்டை எடுக்கத் தூண்டி விட்டிருக்கிறது என்று எண்ணத் தோன்றுகிறது.

பிரபாகரன் அவர்கள் பேச்சுவார்த்தைக்காக வெளிப்படு- மிடத்து, அவரைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு இந்தியா இலங்கையை வற்புறுத்தலாம். அல்லது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு இப்பிரச்சினையை எடுத்துச் செல்லலாம். எது நடந்தாலும் மீண்டும் அவமானப்படப் போவது இந்திய அரசு தான்.

அரசாங்கங்கள் எல்லாம் தர்மர்களாகவோ நீதிமான்க- ளாகவோ இருப்பதில்லை. அமெரிக்கச் சட்டம் சதாம் ஹுசைனைக் குற்றவாளியென்று கூறினாலும் ஈராக்கின் இதய தீபம் அவர் தான். கட்டபொம்மனை வெள்ளையர் அரசு தண்டித்ததை எந்த இந்தியரும் இன்றும் கூட ஏற்றுக் கொள்ளவில்லை. இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஆயுதம் ஏந்திப் போராடிய நேதாஜி இந்திய நாட்டின் தலைவராகக் கொண்டாடப்பட முடியுமானால் தமது உரிமைக்காக போராடும் பிரபாகரன் ஈழத்- தமிழர்கள் எந்த அளவுக்கு மனச் சிம்மாசனத்தில் வைத்திருப்பார்கள் என்பதை இந்திய அரசியல்வாதி- கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்தியா அரசியல் வழியில் தனது தற்காலிக அரசியல் தேவை கருதி பிரபாகரன் மேல் சட்டத்தை உயர்த்திப் பிடித்துக் கொண்டு கைது செய், நாடு கடத்து என்று குதிக்க முற்படுபவர்களால் தங்கள் முயற்சியில் தோல்வியைத் தழுவு- வது மாத்திரமல்ல, வரலாற்றில் பழியையும் தேடிக் கொள்ளப் போகிறார்கள் என்பது தான் உண்மை.

## பெருமையைப் பேணுவோம்!

ஒரு காலம் இருந்தது. நீண்ட காலம் அல்ல ஒரு பத்து வருடத்துக்கு முந்திய காலம் தான்.

நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்ற உண்மையை அறிந்து கொள்ள தமிழில் வீரகேசரியை விட்டால் வேறு பத்திரிகைகளே கொழும்பிலிருந்து வருவதில்லை என்ற நிலை.

தினகரன் பற்றிச் சொல்லவே வேண்டாம். அதிலிருந்து நாம் தகவல்களை அறிவதை விட, நேரடியாக இலங்கை வானொலியின் அரசாங்கச் செய்திகளை கேட்டு விடலாம்.

வீரகேசரியும் உண்மைகளை எழுத அஞ்சிக் கொண்டிருந்தது. உயிர்ப் பயத்தால் அல்ல: ஏன் அரசாங்கத்துடன் முண்டிக் கொள்வான் என்ற காரியார்த்தப் பயத்தால்.

அப்போது சரிநிகர் வெளிவரத் தொடங்கியது. உண்மையைச் சொல்வதற்காக அது பல நெருக்கடிகளை எதிர்நோக்கியது. மிரட்டல்களை விசாரணைகளை, வழக்குகளை எதிர் கொண்டது. ஆியனும் அது தன் பணியை விடவில்லை.

சரிநிகரின் தொடர்ச்சியான தீவிரமான பணி மற்றைய பத்திரிகையாளர்களுக்கு தெம்பும் துணிவும் ஊட்டியது.

இன்று படிக்க நிறையப் பத்திரிகைகள் வெளிவருகின்றன. அரசியல் விடயங்கள் காரசாரமாக பேசப்படுகின்றன.

புதிதாக சுடரொளி நாளிதழாக வரவிருப்பதாக அறியப்படுகிறது.

நல்லது: ஆயிரம் பூக்கள் மலரட்டும் என்று இவற்றை வரவேற்க வேண்டும்.

ஆனால், பத்திரிகைகள் வெறுமனே வியாபாரத்தை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு செயற்படக் கூடாது. மூன்றாம் நாலாம் தர விடயங்களை சக்தி ரீவி, வானொலி, சூரியன் எப்.எம், சுவர்ணஒலி ஆகியவை பரப்புவது போதாதென்று பத்திரிகைகளும் அதில் இறங்கிவிட எத்தனிக்கின்றன. குமுதம், விகடன், இதயம் என்று தொடரும் தமிழ் நாட்டு ஜனரஞ்சகப் பத்திரிகைத் துறையை இங்கே கொண்டுவர முயலும் போக்கு சுடரொளியிலும் வேறுசில பத்திரிகைகளிலும் வெளிப்படுகின்றன. இது ஒரு மோசமான போக்கு. மக்களுக்கு சந்தோசமும் பொழுதுபோக்கும் தரும் விடயங்களும் முக்கியம் தான். ஆனால், பொய்மையையும், மயக்கத்தையும் பத்திரிகைகள் விற்க முயலக்கூடாது.

ஈழத்தமிழ் இலக்கியத்தினதும், பத்திரிகைத் துறையினதும் தரத்துக்கு ஒரு தனித்துவம் இருப்பதை அழித்துவிட முயல்வது முதலாவதாக வெற்றி பெறப் போவதில்லை: இரண்டாவதாக அது ஒரு கேவலமான வியாபாரம்.

உண்மையை சொல்வதானால், வீரகேசரி, தினக்குரல் தரத்துக்கு கூட தமிழ் நாட்டில் ஒரு தமிழ் பத்திரிகையை உதாரணம் காட்ட முடியாது!

ஈழத்து எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், வாசகர்கள், பத்திரிகை உரிமையாளர்கள் அனைவரும் பெருமைப்பட வேண்டிய விடயம் இது.

இந்தப் பெருமையை பேணுவதும் கூட முக்கியம் அல்லவா?

## சமாதான முயற்சிக்கான சமாதி!

நீண்ட நாள் இழுபறிக்குப் பிறகு திரும்பவும் ரத்வத்தை பதவி ஏற்று விட்டார்.

அடுத்த ஆறாண்டு காலத்துக்கும் யுத்தத்தைத் தொடருவதற்கு அவரை விடப் பொருத்தமான ஒருவரைக் கட்சிக்குள் கண்டு பிடிக்க அம்மணிக்கு முடியவில்லை.

யுத்தத்தையா சமாதானத்தையா அரசாங்கம் விரும்புகிறது என்ற கேள்விக்கு பதிலளிப்பது போல இந்த நியமனம் நடந்து முடிந்திருக்கிறது. சமாதானத்துக்கான பேச்சுக்கு பிரபாகரன் கோரிக்கை விடுத்தால், அது அவர் பலவீனப்பட்டிருக்கிறார் என்று அர்த்தம் என்று நினைக்கிற அமைச்சர் மீண்டும் பதவிக்கு வந்திருக்கிறார்.

யுத்தத்தில் தோல்விக்கு மேல் தோல்வியை சந்தித்துக் கொண்டே மாபெரும் வெற்றி பெற்று விட்டதாக முழு நாட்டுக்கும் கூசாமல் சொல்லும் துணிச்சல் மிக்க ஒருவர் மீண்டும் பதவிக்கு வந்து விட்டார்.

மீண்டும் யுத்தம் புதிய வேகத்துடன் தொடங்குகிறது. தென்மராட்சிச் சண்டை இதற்கான ஆரம்பம்.

துப்பாக்கிக் குழலிலிருந்து அதிகாரம் பிறக்கிறது என்றார் மாவோ.

அதிலிருந்து சமாதானம் பிறக்கும் என்கிறார் சந்திரிகா.

இரண்டுமில்லை, நோய்வாய்ப்பட்ட சந்ததி தான் பிறக்கும் என்கிறார்கள் கடந்தகால யுத்தங்களைப் படித்தறிந்த அறிஞர்கள். அதிலும் எம்மைப் போன்ற மூன்றாம் உலக நாடுகளில் இதைத் தவிர வேறு எதுவும் பிறக்காது என்பது அவர்களது வாதம்.

ஒன்றுமட்டும் தெளிவாகத் தெரிகிறது. உடனடியாகப் பிறக்கப் போவது இது தான்.

சமாதான முயற்சிக்கான சமாதி.

நன்றி - நூலகத்திட்டம்



# போர் என்றால் போர்! சமாதானம் என்றாலும் போர்!!

## ஜனநாயக ஆட்சியும் தேசிய இனங்களுடனான பேச்சுவார்த்தை முயற்சிகளும்

– சிசைரோ

ஜனநாயக ஆட்சி என்றால் என்ன? அதன் இன்றிமையாத அம்சங்கள் பூரணமாகப் பிரகாசிக்காத ஆட்சி ஒன்றினை ஜனநாயகம் எனப் பெயரிடுவதால் மட்டும் ஏதேனும் பிரயோசனம் கிட்டி விடுமா? ஜனநாயக ஆட்சியின் நலன்கள் மறுக்கப்படும் ஒரு குழு அதற்கு நிவாரணமாக எதையாவது கோரிப் பெற முடியுமா? அத்தகைய நிவாரணங்களின் தன்மை எதனால் நிர்ணயிக்கப்படுகின்றது? என்பவற்றை ஆராய்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

எங்களது வாழ்நாள் பூராவுமே நாங்கள் வேறுபட்ட பல குழுக்களின் உறுப்பினர்களாகவே இருந்து வருகின்றோம். இன்னும் சொல்லப் போனால் எல்லோருமே ஒரே குழுவின் உறுப்பினர்களாக இருப்பதில்லை. குடும்பங்கள், சங்கங்கள், கழகங்கள், அமைப்புக்கள் என்று இந்தக் குழுக்கள் பன்மாதிரியாக அமையலாம். நலன்களையும் பொறுப்புக்களையும் பங்கிடும் வகையிலும் தீர்மானங்கள் எடுக்கப்படுகையில் அவை கூட்டாகவே எடுக்கப்படுகின்றன. எவ்விதத்திலும் தனியான ஒருவரின் தீர்மானமாக அவை அமைவதில்லை. ஆக, ஒவ்வொருவருடைய வாழ்விலும் தனிப்பட்ட ரீதியிலும் சில வேளைகளில் கூட்டாகவும் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படும். இவ்வகையில் ஜனநாயகம் என்பதும் கூட்டாகத் தீர்மானம் எடுப்பதைத் தேவைப்படுத்தும் ஒரு சந்தர்ப்பம் என்பதை முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும்.

முழுச் சமூகத்தையுமே பாதிக்கும் தீர்மானம் என்றளவில் அச்சமூகத்தின் எல்லா உறுப்பினர்களும் பங்கு பற்றும் விதத்தில் தீர்மானம் எடுத்தல் என்பது ஜனநாயகத்தில் அவசியமாகின்றது. அங்ஙனம் தீர்மானம் எடுக்கும் போது அவர்கள் யாவருமே அதில் சமமான முறையில் பங்கு பற்றுவதற்கான உரிமையினையும் கொண்டிருக்கின்றார்கள் என்று பொருள் கொள்ளப்பட வேண்டும். இங்கே ஜனநாயகத்தை இரண்டு கோட்பாடுகளின் அடிப்படையில் பார்க்கின்றார்கள். கூட்டாகத் தீர்மானம் எடுத்தல் மீதான கூட்டுக் கட்டுப்பாடு (popular control)



என்பதும், அக்கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதில் உள்ள உரிமைகளின் சமத்துவம் (equality of rights) என்பதுமே அந்த இரண்டு கோட்பாடுகளுமாகும். எந்தவொரு அமைப்பிலும் இந்த இரு கோட்பாடுகளும் பின்பற்றப்படும் போது அதனை ஜனநாயக அமைப்பென்று தயக்கமின்றிக் கூறலாம்.

இது பற்றி அக்காலத்தில் எழுதிய ஜெரமி பெந்தம் என்பவர் "ஒவ்வொருவரும் தமக்கெதிரான ஒவ்வொருவருக்கும்" என்றவாறாக சமமாக இக்குழு நிலையை வலியுறுத்திப் போயுள்ளார். சமத்துவம் தேவைப்படுத்துவது யாதெனில் பொதுப் பதவிகள் தேர்தல்கள் மூலம் நிரப்பப்பட வேண்டும், வயது வந்த யாவரும் அத்தகைய தேர்தல்களில் போட்டியிடக் கூடிய வாய்ப்பிருத்தல் வேண்டும் என்றவாறாக நீட்டித்துச் செல்லும். ஆனால் இன்று ஜனநாயகம் என்ற பெயரில் இருக்கும் எந்தவொரு அரசிலும் மேற்சொன்ன இரு கோட்பாடுகளுமே நூற்றுக்குநூறு வீதம் நடைமுறையிலிருப்பதாகக் கூறமுடியாது. பொதுமக்களது நலன்கள் மட்டுமன்றி அவர்களின் கருத்துக்களும் சமமான முறையில் கருத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றனவா? பொதுக் கொள்கை விடயங்களில் தீர்மானம் எடுப்பதற்கு மக்கள் யாவருமே பக்குவப்பட்டவர்கள் என்று கூறிவிடுவதற்கில்லை. எனவே தான் அவர்களுக்குத் தகவல் சுதந்திரம் போன்றவை அத்தியாவசியமாகின்றன. எல்லோரும் பங்கெடுத்தல் என்று வரும் போது பன்மைத்துவ சமூக அமைப்பில் இது பல்வேறு குழுக்களையே சுட்டி நிற்பதாகின்றது.

எல்லாவற்றுக்கும் மேலாக, ஜனநாயகம் என்பது பகிரங்கமாக நடக்கின்ற விவாதம், தூண்டுவிப்பு, மற்றும் சமரசம் என்பவற்றோடு தொடர்புடையதாகின்றது, பன்மைத்துவ சமூகத்தில் இத்தகைய விவாதம் என்பது பல்வேறு கருத்துக்களும் நலன்களும் கொள்கைவழிப்பட்ட விடயங்களில் உள்ளன என்பது மட்டுமன்றி அதே கொள்கை விடயங்களிலுள்ள வேற்றுமைகள் வெளிப்படுத்தப்படுவதற்கான உரிமைகளும் அந்தச் சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஜனநாயகம் முற்று முழுதாகத் தங்கியிருக்கும் மூன்று விடயங்களும் உள்ளன. அவை தான்: பகிரங்கமான கருத்தாடல், கருத்துத் தூண்டல், மற்றும் சமரசம் என்பனவாகும். அதாவது ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் உள்ளன. அவை வெளிப்படுத்தப்படுகின்றன. சமமான முறையில் முன்வைக்கப்படுகின்றன, விவாதிக்கப்படுகின்றன, ஏற்றவை ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இப்படிப் பார்க்கையிலும் ஜனநாயகம் தன்னளவில் தேவைப்படுத்தி நிற்கும் இரு விடயங்களும் தெளிவாகவே தெரிகின்றன. அதாவது ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் இருக்க முடியும் என்பதும் அவற்றைச் சமமான முறையில் விவாதித்து ஏற்றிட முடியும் என்பதுமாகும். எனவே ஜனநாயகம் என்பதே பன்மைத்துவந் தான் (pluralism). வெவ்வேறுபட்ட கருத்துக்களிடையே சமரசங்காணல் தான் என்றும் கூறிடலாம்.

### இவ்வளவு பீடிகையும் எதற்கு?

இவ்வளவு பீடிகையும் எதற்கு என நினைப்பீர்கள். பேச்சுவார்த்தை என்றால் பிரபாகரனுக்குப் பயம். ஆயுதங்களின் மத்தியில் வாழ்ந்து பழக்கப்பட்ட அவரால் சமாதான சமூகத்தில் வாழ முடியாது என்றெல்லாம் வாய்க்கு வந்தபடி பிரச்சாரம் செய்து வந்த அரசாங்கத்துக்கும் அதன் பின்னால் மறைந்திருக்கும் பேரினவாத சக்திகளுக்கும் பிரபாகரனின் அண்மைக்கால அரசியல் நகர்த்தல்கள் 'செக் மேற்' வைத்து விட்டன. நிபந்தனை விதிப்பார் என்று எதிர்பார்த்து, கடைசியில் மாவீரர் தின உரையின் பின்னர் அதிலும் ஏமாந்து போன சக்திகள் தற்போது பேச்சுவார்த்தை தேவை தானா என்ற பல்லவியைப் பாட ஆரம்பித்துள்ளன. யுத்தம் என்றால் யுத்தம்! சமாதானம் என்றால் சமாதானம் என்று பேசிவந்தவர்கள், சமாதானம் என்றாலும் யுத்தந்தான் என்பதை எப்படிச் சொல்லலாம் என்பதற்கு வழி தேடிக் கொண்டிருக்கின்றார்கள். இதற்காக அவர்கள் விடுதலைப் புலிகளின் வரலாற்றை மீண்டும் ஒரு தடவை அரச செலவில் எழுதித் தரக்கூடத் தயாராக இருப்பார்கள்.


### மக்களின் தேவை என்ன?

அரசாங்கம் தன்னை எதிர்கொள்ளும் வேறு பாரிய நெருக்கடிகளிலிருந்து விடுவித்துக் கொள்வதற்காக யுத்தம் என்ற கவசத்தை மிகத் தந்திரோபாயமாகப் பாவித்து வருகின்றது என்பதை எத்தனையோ தடவைகள் எத்தனையோ பேர் சுட்டிக் காட்டியும் ஸ்ரீமான பொதுஜனம் தான் ஏமாந்தே தீருவேன் என்று அடம் பிடித்து இந்த ஆட்சிக்கு இரு தடவைகள் வாய்ப்பளித்துள்ளார். இப்போது யுத்தப் பல்லவியை விடுத்துச் சமாதான சங்கீதம் இசைத்தல் என்பது, தான் உருவாக்கிய இனவாதப் பூதத்துக்கு எப்படித் தீனி போடுவது என்ற புதுப் பிரச்சனையை உருவாக்குவதாகிவிடும் என்ற அச்சமே அரசாங்கத்தை ஆட்டிப் படைக்கின்றது.

1948 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை இலங்கையின் அரசியல் என்பது ஆட்சியதிகாரத்தில் சிறுபான்மையினரை உள்ளடக்குவதா இல்லையா என்பதைச் சுற்றிய பிரச்சினையாகவே இருந்து வருகின்றது. ஆனாலும் ஜனநாயகம் இந்த நாட்டில் நிலவுவதாகக் கூறித்தான் அந்நிய நாடுகளிலிருந்த கடன் பெற்றுக்கூட காலம் கடத்தப்படுகின்றது. அப்படியிருந்தும் இதுவரை பேரினவாதம் என்பது தனது முகமூடியை மிகக் கச்சிதமாக அணிந்து கொண்டு சிறுபான்மை மக்களை மட்டும் இனவாதிகளாகச் சித்திரித்துக் காட்டுவதிலேயே வெற்றி கண்டு வந்துள்ளது. ஜனநாயகத்தின் அஸ்திவாரத்தையே கேலி செய்வது போல அல்லது அதனை விளங்கிக் கொள்ளாதது போல நடிப்பதாகக் காட்டிக் கொண்டு இலங்கையில் இனவாதம் ஜி.ஜி.யின் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையுடனேயே ஆரம்பித்ததாக சிங்களப் பேரினவாதிகள் கூறிவருகின்றார்கள். ஆக, பிரச்சினை என்பதும் பேச்சுவார்த்தை என்பதும் பிரபாகரனுடன் ஆரம்பித்த ஒன்றல்ல என்பதை மட்டும் தெளிவாகக் கூறமுடியும். உண்மையில் பேச்சுவார்த்தையில் நம்பிக்கையுள்ளவர்களாகவும் அரசியலமைப்பு வழித் தீர்வில் அக்கறையுள்ளவர்களாகவும் ஆட்சியாளர் இருந்திருந்தால் பிரபாகரன் எப்படித் தோன்றியிருக்க முடியும் என்பதைக்கூட இவர்கள் எண்ணிப் பார்க்கத் தவறி விடுகின்றார்கள்.

48க்குப் பின்னர் என்று பார்த்தாலும்கூட எத்தனை தடவைகள் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன? எத்தனை ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டன? பொன்னம்பலமும் செல்வநாயகமும் பேச்சுவார்த்தை மேசைக்கு வர மறுத்து பீரங்கியையா சுமந்து கொண்டு திரிந்தார்கள்? அல்லது அமிர்தலிங்கம்கூட ஏவுகணைகளை வாங்கி அடுக்கி வைத்து விட்டு பேசித் தீர்க்க முடியாது என்று அடம்பிடித்தாரா? வட்ட மேசை மகாநாடுகள் என்னாச்சு? சர்வகட்சிக் கூட்டங்கள் சந்தித்தவை தான் என்ன? தமிழ்ப் பிரதிநிதிகளுடன் பேசிக் கண்டவற்றுக் கெல்லாம் நடந்ததென்ன? 48க்குப் பின்னரான ஆட்சியாளர்கள் சிறுபான்மை இனங்கள் இந்த நாட்டில் உள்ளதென்றோ அவர்களுக்கும் அரசியல் அபிலாஷைகள் உள்ளதென்றோ கருதிச் செயற்பட்டதான சந்தர்ப்பம் ஒன்றுகூட இல்லை என்றாகும் போது இனவாதம் எங்கே உறைகின்றது என்பதைக் கண்டறிதல் கடினமான விடயமாகுமா?

நாட்டின் குடியரசு அரசியலமைப்புக்கள் இரண்டும் ஆக்கப்பட்ட போது பேச்சுவார்த்தை பற்றி யாரேனும் முணுமுணுத்தார்களா? கறுப்புக்கொடி காட்டியவர்களைச் சிறைகளிலே தள்ளி நிரப்பிய போது சமாதானத் தீர்வு பற்றி ஆட்சியாளர்கள் அக்கறை காட்டினார்களா? அதையும் விடுங்கள், மாகாணசபை முறைமைக்கும் 13வது அரசியலமைப்புச் சீர்திருத்தத்துக்கும் என்ன நடந்தது? இவையெல்லாவற்றையும் ஞாபகத்தில் கொள்ளக்கூடாது என்று நினைப்பவர்கள் மட்டுமே பிரபாகரனை நம்பக் கூடாது. அவர் சமாதானத் தீர்வில் நம்பிக்கையற்றவர் என்று பிரகடனப்படுத்தி வருகின்றனர். விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் இடம் பெற்றதான கடிதப் போக்குவரத்துச் சம்பந்தமாக (25) அன்ரன் பாலசிங்கம் எழுதி அண்மையில் இலண்டனில் வெளியிட்ட நூலின் அமோக விற்பனைக்குப் பின்னர் முகமூடி கிழிந்த நிலையிலுள்ள அரசாங்கம் சமாதானம் என்ற சொல்லும் தன்னால் மட்டுமே உச்சரிக்கப்பட முடியும் என்ற மாயையிலிருந்து விடுபட முடியாமல் தவிப்பதையே அண்மைக்கால அவலங்கள் எடுத்துக் காட்டுகின்றன.



ஏரிக்கரைப் பத்திரிகை ஒன்று அண்மையில் இது பற்றி எழுதும் போது புலிகள் மீண்டும் ஐரோப்பாவில் பணஞ் சேர்த்து வருவதாகவும் சமாதானத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் பணஞ் சேர்ப்பது எதற்கு என்றும் கேள்வி எழுப்பியுள்ளது. ஆனால் இதே பத்திரிகை இலங்கை அரசுக்கு இந்தியா கொடுத்துதவும் 2 ஹெலிகொப்டர்கள், யுத்தக் கப்பல்கள் எல்லாம் யாருடன் சமாதானம் பேசுவதற்கு என்பது பற்றி மூச்சும் விடவில்லை. ஆக, வசதியும் பிரச்சாரச் சாதனங்களும் தங்கள் வசம் இருக்கின்றதென்ற ஒரே காரணத்துக்காக தாங்கள் சமாதானப் பிரியர்கள் ஆக மாறி விட்டதாக அரசாங்கம் காட்ட முனைகின்றது. இதை முறியடிக்கவே பிரபாகரனும் சமாதானத்துக்குத் தயார் என்று அறிவிப்புச் செய்துள்ளார். இப்போது அரசின் உண்மைத் தன்மைக்குச் சவால் விடுக்கப்பட்டுள்ளது. இதில் அது எப்படி வெற்றி பெறப் போகின்றது என்பது ஒருபுறமிருக்க, ஜனநாயகத்தைக் காப்பாற்றும் ஆவல் இந்த நாட்டு மக்களுக்கு உள்ளதா என்பது தொடர்பிலும் சவால் விடுக்கப்பட்டுள்ளதாகவே நான் கருதுகின்றேன்.

புலிகள் மட்டும் ஆயுதம் வாங்கிக் குவித்து விடுவார்கள், புலிகள் மட்டும் ஒய்வெடுத்துக் கொள்வார்கள், புலிகள் மட்டும் ஏமாற்றத் தெரிந்தவர்கள் என்ற பல்லவியை ஓங்கிப் பாடுவதன் மூலம் சமுதாயத்தில் சமாதானத்தைக் கொண்டுவர முடியாது, உண்மையான மனச்சுத்தம் என்பது இருதரப்பினருக்கும் மிகமிகக் கட்டாயமாகத் தேவைப்படுகின்ற ஒன்றாகும்.

நன்றி - நூலகத்திட்டம்



# தும்பளை இளைஞர் கைதுக்கு காரணம் எந்த இயக்கம்?

வடமராட்சி தும்பளைப் பகுதியில் மூன்று இளைஞர்கள் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட சம்பவம் அந்தப் பிரதேசத்து வாசிகளிடையே பீதியை உருவாக்கி இருப்பதோடு புலி பிடிக்கும் பணியில் தமிழ்க் குழு ஒன்றும் படையினருடன் வெளிப்படையாக இணைந்து செயற்படத் தொடங்கி விட்டதா என்ற ஐயத்தையும் அவர்களிடையே ஏற்படுத்தி உள்ளது.

அருமைத்துரை றொனால்ட் (20), செல்வரட்ணம் அஜந்தன் (வயது 18) தம்பிராசா ஆதவன் (வயது 23) ஆகிய மூவருமே கடந்த நவம்பர் 30ஆம் திகதி கடத்தப்பட்டனர். இவர்களில் அருமைத்துரை றொனால்ட், செல்வரட்ணம் அஜந்தன் ஆகிய இருவரும் மட்டும் கடந்த டிச.2ஆம் திகதி இரவு 9 மணியளவில் கண்கள் கட்டப்பட்ட நிலையில் வாகனம் ஒன்றில் ஏற்றி வரப்பட்டு வீதியில் இறக்கி விடப்பட்டுள்ளனர். மூன்றாவது இளைஞரின் கதி தெரியவில்லை.

இந்தக் கடத்தல் தொடர்பாக ஊர்மக்கள் தும்பளை மணியகாரன் சந்திக்கு அருகில் உள்ள படை முகாமுக்கு முன்பாகக் கூடி நியாயம் கேட்டதைத் தொடர்ந்தே மறுநாள் இருவர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தங்களைக் கடத்தியவர்கள் தமிழ் இயக்க உறுப்பினர்களைப் போன்று காணப்பட்டதாகவும் அவர்களில் பெரும்பாலானோர் சுத்தத் தமிழில் கதைத்ததாகவும் "புலிகளுக்கு உதவி செய்வீர்களா?" எனக் கேட்டு தம்மைக் கண்டபடி அவர்கள் தாக்கியதாகவும் விடுதலையான இரு இளைஞர்களும் கூறியுள்ளனர்.

கண்கள் கட்டப்பட்ட நிலையில் அறை ஒன்றினுள் பூட்டி வைக்கப்பட்ட இவர்கள் சித்திரவதைக்கு உள்ளாகியுமுள்ளனர்.

இளைஞர்கள் குறிப்பாக மாணவர்கள் புலிகளுக்கு உதவுவதைத் தடுக்க இவ்வாறு கைது செய்து கடுமையாகத் தாக்கி அச்சுறுத்தி விடுவிக்கும் நடவடிக்கைகளைப் படையினர் தற்போது பரவலாக மேற்கொண்டு வருகின்றனர். புலி பிடிப்பது என்ற பேரில் கைதுகள் அதிகரித்துள்ளன. படையினரிடம் ஆட்களைப் பிடித்துக் கொடுப்பதில் யாழ்ப்பாணத்தில் செயற்பட்டு வரும் தமிழ்க் குழு ஒன்று நேரடியாக உதவி வருவதாகவும் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி மாணவனான இராசையா ஸ்ரீரங்கநாதன் என்பவர் கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் மந்துவில் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார். இவரது கைதுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் கடந்த 15 நாள்களுக்கும் மேலாக வகுப்புகளைப் பகிஷ்கரித்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். காங்கேசன்துறை தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்த இந்த மாணவன் கடந்த 4 ஆம் திகதி யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார். மாணவர் நடத்திய போராட்டம் காரணமாக எழுந்த நிர்ப்பந்தங்களை அடுத்து இவரை விடுதலை செய்யவேண்டிய கட்டாயம் படையினருக்கு ஏற்பட்டது. ஆயினும் கடந்த சில வாரங்களில் மேலும் பலர் கைதாகி உள்ளனர்.

**அண்மையில் கைதுசெய்யப்பட்ட சிலரது விபரங்கள்**

| பெயர் | கைதான திகதி | கைதான இடம் |
|---|---|---|
| கணபதி பொன்னம்பலம் (35) மந்துவில் | 12.11 | கொடிகாமம் |
| இராசையா ஸ்ரீரங்கநாதன் (25) - கொக்குவில் மேற்கு | 15.11 | கொடிகாமம் |
| சிவசுப்பிரமணியம் சிவசுதன் (25) கொக்குவில் மேற்கு | 12.11 | கொக்குவில் |
| தங்கவேலு ஜெயகாந்தன் (15) - சாவகச்சேரி | 12.11 | வல்வெட்டி |
| சீனித்தம்பி ஈஸ்வரன் (49) - நீர்வேலி வடக்கு. இவர் விடுவிக்கப்பட்டார். | 20.11 | நீர்வேலி |
| பத்மநாதன் கருணாநிதி (39) - கல்வியங்காடு | 19.11 | யாழ்ப்பாணம் |
| இரு இளைஞர்கள் (பெயர் விபரமில்லை) | 19.11 | யாழ் நகரம் |
| இராசையா சிவகுமாரன் (33) நீராவியடி | 19.11 | யாழ்ப்பாணம் |
| சுப்பையா துயஞானச் செல்வம் (44) இருபாலை | 19.11 | சங்கானை |
| கந்தசாமி சிவராசா (22) கொடிகாமம் | 19.11 | கொடிகாமம் |
| சபாரத்தினம் இளையராஜா (18) - சரசாலை தெற்கு | 16.11 | வல்வெட்டி |

# புளொட் ரங்கனும் ஈ.பி.ஆர்.எல்.எஃப்பும்! அரச படைகளும்!!

– வி.ஜே.கே

மட்டக்களப்பில் மீண்டும் ஒரு தடவை தனிப்பட்ட தேவைகளுக்காக புலிச்சாயம் பூசப்பட்டு கைதொன்று நடைபெற்றிருக்கின்றது. கடந்த வாரம் மட்டக்களப்பு புதுநகர்ப் பகுதியில் வைத்து முன்னை நாள் புளொட் உறுப்பினரும் இந்நாள் வரதர் அணி உறுப்பினருமான வேலாயுதம் (ரங்கன்) உட்பட சிலர் புளொட் மோகன், புளொட் ரகுபதி குழுவினரால் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். இந்தக் கைது தொடர்பாகவும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டது தொடர்பாகவும் பலரும் பல கருத்தைக் கூறினாலும் இதன் உண்மைத் தன்மையை சற்று கூர்ந்து கவனிப்போம்.

வேலாயுதம்(ரங்கன்) ஆரம்ப காலகட்ட புளொட் உறுப்பினரும் முன்னைநாள் வவுணதீவு பிரதேச சபைத் தலைவருமாவார். இவர் பாக்கியராசா(மாமா) புளொட் மாவட்டப் பொறுப்பாளராக இருந்த காலகட்டத்தில் மாணிக்கதாசனுடன் சேர்ந்து மாமாவுக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டார். மாணிக்கதாசனின் கை மேலோங்கிய வேளையில் வேலாயுதம் ரங்கனே மாவட்டப் பொறுப்பாளரானார். அந்தக் கால கட்டத்தில் மாமா ரங்கனின் பிடியிலிருந்து ஒடியொழிக்க வேண்டியேற்பட்டது. அந்த நேரத்தில் ரெலோவின் உதவியுடன் காரைதீவுக்கூடாக கொழும்புக்கு சென்று சித்தார்த்தருடன் சேர்ந்து கொண்டார் மாமா.

மாணிக்கதாசனின் மரணத்தின் பின் மீண்டும் சித்தார்த்தனின் கையோங்கியது. பாக்கியராசா (மாமா) பழையபடி மாவட்டப் பொறுப்பாளரானார். ரங்கன் ஒடியொழிக்க வேண்டி ஏற்பட்டது. மாணிக்கதாசனோடு நின்றவர்கள் பலர் பழி வாங்கப்பட்டனர். இந்த வேளையில் தான் புளொட் மோகன் தான் புதிதாக கட்சி ஒன்று ஆரம்பிக்கப் போவதாக பொய்யொன்றைக் கூறி ரங்கனையும், சிங்கத்தாரையும் கொழும்புக்கு அழைத்து ரங்கனைப் பிடித்து யாழ்ப்பாணத்துக்கு (புளொட் அலுவலகத்துக்கு) அனுப்பி விட்டான். ரங்கன் ஆப்பிழுத்த குரங்காக மாட்டிக் கொண்டு தவிர்க்க முடியாமல் யாழ்ப்பாணத்துக்குச் சென்றார்.

புளொட்டுக்கும் மோகனுக்கும் தொடர்பில்லையென புளொட் வெளிப்படையாகக் கூறினாலும் மறைமுகமான தொடர்பொன்றை புளொட் வைத்திருக்க வேண்டிய தேவையிருந்தது. இது அண்மைக் காலங்களில் வலுப் பெற்றிருப்பதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

கடந்த பொதுத் தேர்தலிலும் புளொட் மோகனின் குழுவினரான நிதி, தம்பி, குயில் போன்றவர்களும் ரகுபதியுமே முழு உதவிகளும் செய்து வந்ததை யாவரும் அறிவர். இதில் ரகுபதியைப் பற்றியும் ஒரு சில விடயங்கள் குறிப்பிட வேண்டியிருக்கின்றது.

ரகுபதியும் ஆரம்ப காலகட்ட புளொட் உறுப்பினர். அதன் பின் தான் புளொட்டில் இருந்து விலகியதாகக் கூறிக் கொண்டு மோகனோடு தொடர்பு வைத்துக் கொண்டு மோகனின் உளவாளியாகவே மட்டக்களப்பு சந்தையில் வாழைப் பழக்கடை வைத்திருந்தார். கடைசியாக மட்டக்களப்பு சந்தையில் இவரது கடைக்கருகிலே குண்டு வெடித்ததுவும் அனைவரும் அறிந்ததே. அதன் பின் அங்கிருந்தகன்று மட்டக்களப்பு திருமலை வீதியில் பலசரக்குக் கடை வைத்திருந்து விட்டு தற்போது மோகனோடு கொழும்பிலிருந்து செயற்பட்டு வருகின்றார்.

பொதுத் தேர்தலின் போது இங்கு வந்து புளொட்டோடு சேர்ந்து தேர்தல் வேலையில் ஈடுபட்டுத் திரிந்தார்.

யாழ்ப்பாணம் சென்ற ரங்கன் அங்கிருந்து இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் புளொட்டிடமிருந்து தப்பியோடி மீண்டும் மட்டக்களப்புக்கு வந்து சேர்ந்தான். அந்தக் காலகட்டத்தில் ரங்கனுக்கு மறைமுகமான பாதுகாப்பைக் கொடுத்து வந்தவர் பிரிகேடியர் ஷக்கி.

இதேவேளை ரங்கன் மட்டக்களப்புக்கு வந்து நின்ற கால கட்டத்தில் மட்டக்களப்பிலும் அதனையண்டிய புறநகர்ப் பகுதியிலும் பல கொள்ளைச் சம்பவங்கள் ஆயுதம் தாங்கிய நபர்களினால் நடத்தப்பட்டு வந்தது. அந்தச் சம்பவங்களில் ஈடுபட்டவர்களில் ரங்கனும் ஒருவர். குற்றப் புலனாய்வுப் பிரிவினர் (சீ.எஸ்.யூ) இது தொடர்பாக ரங்கனைக் கைது செய்து வைத்திருந்த வேளை பிரிகேடியர் ஷக்கி இதில் தலையிட்டு ரங்கனை வெளியில் கொண்டு வந்தார்.

ஆனால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் புலிகளுடையதாகச் சொல்லப்படுகின்றது. கைப்பற்றப்பட்ட கிளைமோர் புலிகள் பயன்படுத்தும் கிளைமோரல்ல என்றும் அது இராணுவ முகாமைச் சுற்றி பாதுகாப்புக்காக இராணுவத்தினர் பயன்படுத்தும் வயர் மூலம் இயக்கும் கிளைமோர் எனவும் இதில் பரீட்சயமுள்ளவர்கள் கூறுகின்றார்கள். அது மட்டுமல்லாமல் அண்மைக் காலமாக புலிகள் தூரத்திலிருந்து இயக்கும் (றிமோட் கருவி மூலம் இயங்கும்) கிளைமோரையே பயன்படுத்தி வருகிறார்கள் எனவும் குறிப்பிட்டார்கள். இதன் மூலம் அங்கு கைப்பற்றப்பட்டவை புலிகளுடைய வெடிப்பொருட்கள் அல்ல. இராணுவத்தினருடையவையே என்பது வெளிச்சமாகியது.

இராணுவத்துக்கும் ரங்கன் என்பவருக்கும் எப்படியான தொடர்பு இருந்துள்ளதென்பதை இதிலிருந்து நாம் கண்டு கொள்ளலாம்.

இதன் பிறகே ரங்கன் வரதர் அணியில் சேர்ந்து கொண்டு மட்டக்களப்பிலும் செங்கலடியிலுமாக மாறிமாறி செயற்பட்டு வந்தார். ஆனால் இன்று ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதரணியினர்) தங்களுக்கும் ரங்கனின் கைதுக்கும் எந்தவித தொடர்பில்லை என்றும் அவர் தேர்தலுக்காகத்தான் தங்களுடன் சேர்ந்து கொண்டார் எனவும் கூறுகின்றனர். இவர்கள் கூறுவது கூட உண்மையாக இருக்கலாம் அல்லது இல்லாமற் போகலாம். ரங்கன் பற்றியும் அவரது இவ்வாறான செயற்பாடுகள் பற்றியும் இராணுவத் தரப்புடன் சம்பந்தப்பட்ட யாருக்கும் தெரியாமல் இருப்பதற்கு வாய்ப்பேயில்லை. அந்த வகையில் இவ்வாறான ஒருவரை எப்படி மக்கள் முன் மக்கள் பிரதிநிதியாகச் சொல்லி தேர்தலில் நிறுத்துவார்கள்? தேர்தலுக்காகத் தான் எங்களுடன் இணைந்து கொண்டாரென்றெல்லாம் எப்படிச் சொல்வார்கள்? என்ற கேள்வியெழும்புவதும் தவிர்க்க முடியாது.

இதேவேளை ரங்கன் புதூரிலிருந்து தேர்தல் வேலைகளில் ஈடுபட்ட வீடொன்றிலுமிருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டதுடன், மத்திய கல்லூரி மாணவனான புதூரைச் சேர்ந்த சிவகஜேந்திரனும் கைது செய்யப்பட்டிருக்கின்றார். கஜேந்திரன் வலையிறவிலிருக்கும் விமானப் படையினருக்கான உளவாளியாகச் செயற்பட்டு வந்தார் என்பது இன்னொரு தகவல். உளவாளியாக இருந்து கொண்டே பாடசாலையிலும் கல்வி கற்றார். பாடசாலையில் இவர் ஒழுங்கான வரவுகள் இல்லாத மாணவர் என்பதும் தனது தேவைகளுக்காக பாடசாலையைப் பயன்படுத்தியவர் என்றும் உண்மையறிந்த மாணவர்கள் கூறுகின்றனர். இவர் தேர்தல் காலத்தில் ரங்கனோடு சேர்ந்து ஈ.பி.ஆர்.எல்.எவ்க்கு வேலை செய்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மத்திய கல்லூரி பழைய மாணவன் ஜெயப்பிரகாஸ் கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்தே மட்டக்களப்பில் இக்கைதுகள் இடம் பெற்றதாகக் சொல்லப்படுகின்றது. எவ்வாறிருப்பினும் இவைகளிலிருந்து ஒன்று மட்டும் தெரிகின்றது. ரங்கனின் கைதென்பது மோகனாலும், புளொட்டாலும் திட்டமிட்டு புலிசாயத்துடன் செய்யப்பட்டதென்பது. மோகன் சொல்வது போன்று ரங்கன் புலியினுடைய ஒரு முகவரென்றால் ரங்கனை பல சந்தர்ப்பங்களில் பாதுகாத்த பிரிகேடியர் ஷக்கியும் புலிகளின் முகவரா என்ற கேள்வி எழுவதும் தவிர்க்க முடியாத தொன்றாகும். ○

# பிரபாகரனை நாடுகடத்தும் கோரிக்கை இலங்கை அரசின் பதில் என்ன?

எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் வட்டிக்குப் பணம் வாங்கி ஒரு தொழில் தொடங்கியிருந்தார். முதலில் மாதா மாதம் வட்டிப் பணத்தைக் கொடுப்பதாகவும் பிறகு வசதி வருகிற போது முதலை திருப்புவதாகவும் ஏற்பாடு. ஒரு ஆறு ஏழு மாதங்கள் ஒழுங்காக வட்டியைக் கட்டி வந்தார் நண்பர். கடன் வாங்கிய திகதிக்கு சரியாக வட்டியை செலுத்துவதில் நண்பருக்கு கொஞ்சம் சிரமமாக இருந்தது. தனக்கு வசதியான ஒரு திகதியில் வட்டியைத் திருப்பித்தர முடியுமா என்று பணம் கொடுத்தவரிடம் போய்க் கேட்டார் நண்பர். 'பிரச்சினை இல்லை. உனக்கு வசதியான போது ஒரேயடியாக வட்டியையும் முதலையும் திருப்பிக் கொடேன்" என்று பதில் சொன்னார் கடன் கொடுத்தவர். நண்பருக்கு பெரிய சந்தோசம். இரண்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு வட்டி கொடுப்பதில்லை என்ற விஷயம் தெரியவர "ஒரேயடியாக வட்டிக் கட்டிறது சரியான கஷ்டம். ஏனிப்படி ஒப்புக் கொண்டனீங்கள்" என்று மனைவி நண்பருடன் சண்டை பிடித்திருக்கிறார். நண்பருக்கும் அது சரியெனப்பட திரும்பவும் கடன் கொடுத்தவரிடம் போனார்.

அவர் சிரித்துக்கொண்டே "நான்தானே சொல்லிப் போட்டன்" உனக்கு வசதியான நேரம் தா எண்டு... எனக்கிப்ப உந்தக் காசு அவசரம் இல்லை. நீ ஆறுதலாத் தா இப்ப ஏன் அவசரப்படுகிறாய் என்று சொன்னார். நண்பருக்கு இதுவும் சரிபோலப் பட்டது. மனைவிக்கு 'குடுத்திட்டன' என்ற ஒரு பொய்யைச் சொல்லி நச்சரிப்பிலிருந்து தப்பித்துக் கொண்டார்.

இது நடந்து இரண்டொரு மாதத்தில் நண்பரின் மகளுக்கு கலியாணம் ஒன்று சரிவந்தது. அவர் அந்த அலுவல்களாக ஓடித் திரிந்து கலியாணத்திற்கு நாள் குறித்தார். தெரிந்தவர்களின் உறவினர்களின் உதவியுடன் கலியாண ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கையில் கடன் கொடுத்தவர் வந்து நண்பரைப் பிடித்துக் கொண்டார். கடனை வட்டியும் முதலுமாக உடனடியாகத் திருப்பித் தரச்சொல்லி. நண்பருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை.

விஷயத்தை விளக்கி கொஞ்ச நாள் பொறுக்கும்படி கேட்டார் நண்பர். கலியாணம் முடிந்தவுடன் பார்ப்போம் என்று சொல்லிப் பார்த்தார். எனது மகள் கலியாணம் முடிக்கிறது உனக்கு விருப்பமில்லையா என்றும் கேட்டுப் பார்த்தார். கடன் கொடுத்தவர் விடவில்லை.

கலியாணமா கடனா என்ற நிலையில் தவித்துக் கொண்டிருக்கிறார் நண்பர்.

இந்தக் கதையை நான் எழுதியதற்கு காரணம் இருக்கிறது.

இலங்கை அரசும் புலிகளும் பேச வேண்டும்: பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்று நோர்வேயும் பிரிட்டனும் சொல்லிக் கொண்டிருக்கையில், புலிகள் பேச்சுவார்த்தைக்கு தயாராக வந்து கொண்டிருக்கையில், பிரபாகரனை இந்தியாவுக்கு நாடுகடத்துவது பற்றி இலங்கை அரசாங்கத்திடம் கேட்டிருக்கிறது இந்தியா.

இலங்கை அரசும் புலிகளும் பேச்சுவார்த்தை நடாத்துவதை சமாதானமாகப் போவதை விரும்பாத ஒருவரால் தான் இப்படியான ஒரு நெருக்கடியைக் கொடுக்க முடியும் என்று விமர்சிக்கிறார்கள் அரசியல் விமர்சகர்கள்.

அப்படி இல்லை என்றால்,


இத்தனை காலம் ஆறப்போட்ட இந்த பிரபாகரன் நாடுகடத்தல் விவகாரத்தில் இந்தியா இப்போது அக்கறை காட்டுவதற்கு காரணம் என்ன?

சந்தனக் கடத்தல் வீரப்பன் ராஜ்குமாரைக் கடத்தி வைத்திருந்ததும் அண்மையில் அவரை விடுதலை செய்ததற்கும் புலிகளுக்கும் சம்பந்தம் இருக்கலாம் என்ற இந்திய அரசின் சந்தேகங்கள் இந்த விடயத்தினைத் துாண்டியிருக்கக்கூடும்.

அல்லது இந்திய அரசுக்கு எதிரணிகள் தரும் நெருக்கடிகள் இதை இந்த அபசகுனமான, காலப் பொருத்தமற்ற கோரிக்கையை முன்வைக்க காரணமாக இருந்திருக்கக் கூடும்.

எது எப்படி இருப்பினும் இந்தக் கோரிக்கையின் நடைமுறைச் சாத்தியம் பற்றி யோசிக்கிற எவரும் இலங்கை அரசு புலிகளுடன் பேசுவதை விரும்பவில்லை என்ற முடிவுக்கே வரமுடியும். ஏனென்றால் இந்தக் கோரிக்கையை இலங்கை அரசு நடைமுறைப்படுத்துவது சாத்தியமில்லை என்று தெரிந்து கொண்டே இந்தியா கேட்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இது பேச்சுவார்த்தையைக் குழப்பி விடக்கூடிய, இலங்கை அரசை நெருக்கடிக்குள்ளாக்கக் கூடிய ஒரு கோரிக்கை என்பதும் வெளிப்படை.

ஆனாலும், இந்தக் கோரிக்கை முக்கியமான சாதகமான கோரிக்கையாகவே எனக்குத் தோன்றுகிறது. முன்பொரு



போதும் இல்லாத விதத்தில் இம்முறை புலிகள் தரப்பில் பேச்சுவார்த்தைக்கான ஆரம்ப முயற்சியில் பிரபாகரனே நேரடியாக இறங்கியிருக்கிறார். இதன் அர்த்தம் என்னவென்றால், பேச்சுவார்த்தைக்கான ஆழம் ஒன்று உருவாகும் பட்சத்தில் அதிலும் புலிகளின் சார்பாக பிரபாகரனே கலந்து கொள்ளக்கூடும் குறைந்த பட்சம் இறுதிக்கட்டப் பேச்சிலாவது அவர் கலந்து கொள்வார் என்பது எதிர்பார்க்கக்கூடிய ஒரு விடயமே. அப்படி எதிர்பார்க்கப்படும் ஒரு நிலையில் இலங்கை அரசாங்கம் ஒரு முக்கியமான முடிவை எடுக்க வேண்டியிருக்கும். இந்த முடிவை எடுப்பது புலிகளுடனான பேச்சுவார்த்தை நடப்பதற்கு அவசியம் என்று அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெளிவாகவே தெரிவித்திருக்கிறார்.

அதுதான் புலிகள் மீதான தடையை நீக்குவது.

புலிகள் மீதான தடையை நீக்காமல் உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தையில் இலங்கை அரசாங்கம் ஈடுபட முடியாது. அப்படிப்பட்ட ஒரு பேச்சின் முடிவு ஒரு போதும் சட்டபூர்வ அந்தஸ்தைப் பெற முடியாது. எனவே புலிகளுடன் பேசுவதன் முன் இந்தத் தடை உத்தரவை நீக்குவது அவசியமான ஒன்றாகிறது.

ஆனால், இலங்கை அரசைப் பொறுத்த வரை, பேச்சுவார்த்தை முயற்சிகள் ஒருபுறம் நடந்து கொண்டிருப்பதாக உலகம் நம்பிக்கை கொண்டிருக்கையில் அது தீவிரமாக யுத்தத்தை நடாத்துவதற்கான தயாரிப்பில் ஈடுபட்டுக் கொண்டே இருக்கிறது. இந்தத் திட்டம் மூன்று மட்டங்களில் நடக்கிறது. ஒன்று இராணுவ ரீதியல் ஆயுதங்கள் வாங்குதல், படைக்கு ஆட்களைச் சேர்த்தல், புதிய சிறிய சிறிய போர்க்களங்களை உருவாக்கி நிலங்களைக் கைப்பற்றல். இதற்கு திரும்பவும் அனுருத்தர் தலைமையேற்றுள்ளார். மற்றது சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் புலிகளுக்கெதிரான, புலிகளை மக்களிடமிருந்து அரசியல் ரீதியாக பிளவுபடுத்துவதற்கான யுத்தத்துக்கு ஆதரவான பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடல். உள்நாட்டில் சிங்கள இனவாதத்துக்கு மேலும் உரமூட்டவும், யுத்தத்திற்கு ஆதரவு திரட்டவும் தேவையான பிரச்சாரம் பிரதமர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்க தலைமையில் தீவிரமாக நடந்து கொண்டிருக்கிறது. சர்வதேச ரீதியிலும் புலிகளைப் பயங்கரவாதிகள் எனக் காட்டும் பிரசாரம் வலுவாக மேற்கொள்ளப்படுகிறது.

மூன்றாவதாக புலிகளின் பொருளாதார பலத்தை உடைப்பதற்கான முயற்சிகள். புலிகளின் பொருளாதார பலம் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலுள்ள ஈழத் தமிழர்களது உதவியே என்று நம்பும் இலங்கை அரசு அதை உடைக்க தீவிரமான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. சர்வதேச சமூகம் மத்தியில் புலிகளைப் பயங்கரவாதிகளாக நிறுவி, எல்லா இடங்களிலும் அவர்களைத் தடை செய்யும் ஒரு முயற்சியில் வெற்றி பெறுவதன் மூலம் புலிகளின் பொருளாதார வளங்களை உடைக்கலாம் என்பது அரசின் கருத்தாக இருக்கிறது. அமெரிக்க அரசு புலிகளைத் தடை செய்தது போலவே பிரிட்டனும் தடைசெய்ய வேண்டும் என்ற கோரிக்கையை அண்மையில் கதிர்காமர் பிரிட்டனில் முன்வைத்ததை சுட்டிக் காட்டிப் பாலசிங்கம் பேசியிருந்தார்.

ஆக, இம்மூன்று நடவடிக்கைகளும் சமாதானத்துக்கான நடவடிக்கைகளை விட, புலிகளை ஒழித்து விடுவதற்கான நடவடிக்கைகளிலேயே அரசின் கவனம் குவிந்துள்ளதை தெளிவுபடுத்துகின்றன. நோர்வேயின் சமாதான முன்முயற்சிக்கு இலங்கை அரசாங்கம் அக்கறை காட்டியதன் நோக்கமே, சர்வதேச சமூகத்தின் முன் தான் சமாதானத்துக்கு தயார் என்று காட்டவே அன்றி உண்மையில் புலிகளுடன் சமரசத்துக்கு போகும் தயார் நிலையில் இருந்தல்ல என்பது வர வர உறுதியாகி வருகிறது.

இப்படிப்பட்ட ஒரு நிலையில் தான் இந்தியா பிரபாகரனை திருப்பித் தருமாறு ஒரு கோரிக்கையை முன்வைத்திருக்கிறது. பிரபாகரனைப் பிடிப்பதோ, தன்னிடம் ஒப்படைப்பதோ இலங்கை அரசுக்கு சாத்தியப்படக்கூடிய ஒரு விஷயம் அல்ல என்பது இந்தியாவுக்கு தெரியாததல்ல. ஆயினும் அதை இலங்கை அரசிடம் இந்தக் கட்டத்தில் கேட்டது எந்தக்காரணத்திற்காக, பேச்சுவார்த்தையை குழப்பவோ, அல்லது தனக்கு வருகிற எதிர்ப்பை சமாளிக்கவோ எதற்காகவாக இருந்தாலும் அந்தக் கேள்வி



ஒரு முக்கியமான கேள்வி.

இலங்கை அரசாங்கம் எந்த முடிவில் இருக்கிறது என்பதை வெளிப்படையாக தெரிவித்தே ஆகவேண்டிய ஒரு நிர்ப்பந்தத்தை உருவாக்கி விட்டுள்ள கேள்வி அது.

இலங்கை அரசுக்கு இரண்டு பதில்கள் இருக்கின்றன.

ஒன்று, பிரபாகரன் எம்மிடம் அகப்படுவாரானால் அவரை எப்படியும் இந்தியாவிடம் கையளிப்போம் என்று ஒப்புக் கொள்ளலாம். முன்பு ஒரு முறை கேட்ட போது இலங்கை அரசு இவ்வாறான ஒரு பதிலை அளித்திருந்தது.


அல்லது, பிரபாகரனை ஒப்படைப்பது என்பது எமது நாட்டின் அரசியல் சூழ்நிலையைப் பொறுத்தது. இனப்பிரச்சினைக்கான சமாதான தீர்வு முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நாம் இப்போது அதுபற்றிப் பேசமுடியாது என்று கூறுவது.

இரண்டாவது பதிலை ஒரு அரசாங்கத்தால் கூறமுடியுமா என்பது ஒரு முக்கியமான கேள்வி. சர்வதேச சட்ட விதிமுறைகளின் கீழ் அப்படிக் கூறுவது வேறுபல பின்விளைவுகட்கு இடமளிக்கலாம். கோரிக்கையை நடைமுறைப்படுத்தாமல் இருக்க முடியும். இந்திய அரசாங்கம் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர் என்ற அடிப்படையில் தான் பிரபாகரனை தரும்படி கேட்கிறது. இந்தக் கொலையில் பிரபாகரன் நேரடியாக சம்பந்தப்பட்டதற்கான எந்த ஆதாரங்களும் நிரூபிக்கப்படவில்லை. ஆயினும் இந்தியா பிரபாகரனைக் கேட்கிறது. இந்தத் தர்க்கப்படிப் பார்த்தால் இலங்கையில் இந்திய அமைதிகாக்கும் படை வந்து அமைதி காப்பதாகக் கூறி கொன்றொழித்த நூற்றுக்கு மேற்பட அப்பாவிப் பொதுமக்களின் மரணங்களுக்காக ராஜீவ் காந்தியை குற்றவாளி எனக் கூறுவதும் நியாயமாகி விடும்.

இந்த அடிப்படையில் இலங்கை அரசுக்கு இவ்விடயம் தொடர்பாக மாற்றுக் கருத்தை வெளிப்படுத்தவும் பிரபாகரனை அனுப்புதல் சாத்தியமில்லை என்பதை எடுத்துக் சொல்லவும் முடியும்.

ஆனால், இலங்கை அரசுக்கு உண்மையாக சமாதானத்தில் அக்கறை இருந்தால் மட்டுமே அதைச் சொல்ல முடியும்.

எனவே தான் இலங்கை அரசாங்கத்தின் பதில், சமாதானம் பற்றிய அதன் கருத்து என்ன என்பதை தெளிவாக வெளிப்படுத்திவிடும் என்பதால் தான் இந்தியாவின் இக்கேள்வி ஒரு முக்கியமான கேள்வி. என்கிறேன். ஆம், இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கு உரைகல்லாக அமையப் போகிற ஒரு கேள்வி அது!




நன்றி - நூலகத்திட்டம்



## எனது பத்திரிகை உலக அனுபவங்கள் - 09

# ராஜதுரையின் விருந்தும் வயிற்று வலியும்!



சுகாதார அமைச்சில் லிகிதரராக எனது நண்பன் கே.சி.பத்மநாபன் வேலை செய்து கொண்டிருந்தான். பத்மநாபன் எனது பால்ய நண்பன். இலக்கியமா, சினிமாவா, விஞ்ஞானமா, விளையாட்டா சகல துறைகளிலும் அவனுக்கு ஞானம் இருந்தது. ஒரு சிறந்த வாசகன். பத்மநாபனுக்கு அலுவலகத்தில் ஒரு நல்ல நண்பர் பாலசுப்பிரமணிய ஐயர். இவர் கொழும்பு தட்டாரத் தெரு (இப்போது பண்டாரநாயக்கா மாவத்தை) சிவசுப்பிரமணிய கோயில் பிரதம குருக்களின் மகன். இந்த பாலசுப்பிரமணிய ஐயரும் இலக்கியம், சினிமா ஆகிய துறைகளில் ஈடுபடுகின்றவர். இருவரும் அரச ஊழியர்கள். ஏனென்றால் அவர்களுக்கு இலக்கியத்தில் தாகம் அதிகம்.

இருவரும் ஒரு தமிழ் சஞ்சிகை நடத்த வேண்டுமென்று முடிவு செய்து அதற்கான வேலைகளிலும் இறங்கினர்.

இவர்களைப் போலவே இலக்கிய தாகம் கொண்ட ஒருவர் கொழும்பு பழைய சோனகத் தெருவில் ஒரு அச்சுக் கூடம் வைத்திருக்கிறார். அவரிடம் பண வசதி அதிகம் இல்லை. செலவில்லாமல் சஞ்சிகையை பதிப்பித்துக் கொடுக்க முடியாது. ஆனால் தனது உழைப்புக்கான கூலியைத் தியாகம் செய்ய முயல்வார்.

பெரும் கஷ்டப்பட்டு "யுகம்" என்ற சஞ்சிகையின் முதல் இதழ் வெளிவந்து விட்டது. அதைப் பார்த்தவர்கள் தரமான சஞ்சிகை வளரட்டும். வாழட்டும் என வாழ்த்துத் தெரிவித்தனர்.

வாழ்த்து மட்டும் போதுமா? எனவே இலக்கிய தாகமுள்ள மற்றும் பலரையும் சந்தித்து ஆதரவும் ஆலோசனையும் கேட்கும் முயற்சியிலீடுபட்டனர். நான் 'வீரகேசரி' பத்திரிகையில் ஆசிரியர் பகுதியில் ஓர் உதவி ஆசிரியனாகத் தெரிவு செய்யப்பட்டுப் பணியாற்றத் தொடங்கி சில மாதங்களே!

சுதந்திரன் பத்திரிகையிலிருந்து வெளியேறி மட்டக்களப்பிலிருந்த செல்லையா இராஜதுரையை சந்தித்துப் பேச வேண்டுமென்றும் தங்களை மட்டக்களப்புக்கு இராஜதுரையிடம் கூட்டிச் செல்லு மாறும் நண்பர்களிருவரும் கேட்டனர்.

அவர்கள் இப்படி என்னைக் கேட்டதற்கு நியாயமுண்டு.

ராஜா அண்ணா (செல்லையா இராஜதுரை அவர்களை நாங்கள் இப்படித் தான் அழைப்போம்.) சுமார் ஒரு வருடம் ராஜா அண்ணா வீட்டின் சுவரோடு இருந்த ஒரு பகுதியில் எனது அண்ணனின் குடும்பத்துடன் நானும் இருந்தேன். அவர்களோடு நான் சில மாதங்களே இருந்தேன். இந்த வீடு ராஜா அண்ணாவின் தகப்பனாருடையது. இது ஆஸ்பத்திரி வீதியில் விவேகானந்தா மகளிர் பாடசாலைக்கு அருகில் உள்ள ஒழுங்கையில் உள்ளது. ராஜா அண்ணா, அவரது மனைவியின் தங்கைகள், தகப்பனார், ராஜா அண்ணாவின் மனைவி மற்றும் இரு குழந்தைகள் என்பது ஞாபகம். எனது அண்ணா, ராஜா அண்ணாவின் நல்ல நண்பர். அன்புதாசன், பித்தன் ஷா, பரமஹம்சதாசன் இவர்களும் என் அண்ணாவின் நல்ல நண்பர்கள். இரா.பத்மநாதன், 'சட்டர்டே றிவியூ' கந்தசாமி, கிருஷ்ணசாமி, சந்திரசேகரன் ஆகியோர் அண்ணன் மூலம் எனக்குக் கிடைத்த நல்ல நண்பர்கள். ராஜா அண்ணாவுடன் இலக்கியம், நாடகம் பற்றி நானும் கலந்துரையாடியதுண்டு. புதிதாக ஒரு நாடகம் எழுதித் தயாரிக்க வேண்டும் என்று ராஜா அண்ணா சொல்லி அது பற்றி இருவரும் விவாதித்திருக்கிறோம்.

எனக்கும் ராஜதுரை அவர்களுக்குமுள்ள தொடர்பைத் தெரிவித்தே பத்மநாபன் ஐயருடன் பேசி முடிவெடுத்து மட்டக்களப்புக்குச் செல்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

நாங்கள் மூவரும் மட்டக்களப்புக்கு வந்தோம். அப்பொழுது எனது அண்ணா சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கான வசிப்பிட விடுதிக்கு மாறியிருந்தார்.

நாங்கள் இராஜதுரை அவர்களைப் போய் சந்தித்தோம். நண்பர்கள் இருவரும் அவருடன் துணிந்து பேசினார்கள். மறுநாள் எங்கள் மூவரையும் மதிய உணவு விருந்துக்கு ராஜதுரை அழைத்திருந்தார்.

ராஜா அண்ணாவே எங்கள் மூவருக்கும் உணவு பரிமாறினார். முதலில் சோறு போட்டதும் கம கம வாசனையுடன் சுத்தமான பசு நெய்யை சோற்றின் மீது தாராளமாக ஊற்றினார். பின்னர் தான் பருப்பு மற்றும் மரக்கறிகளைப் பரிமாற்றினார். நல்ல சாப்பாடு. பல விஷயங்களையும் பேசிப் பேசிச் சாப்பிட்டோம்.

*ராஜா அண்ணாவே எங்கள் மூவருக்கும் உணவு பரிமாறினார். முதலில் சோறு போட்டதும் கம கம வாசனையுடன் சுத்தமான பசு நெய்யை சோற்றின் மீது தாராளமாக ஊற்றினார். பின்னர் தான் பருப்பு மற்றும் மரக்கறிகளைப் பரிமாற்றினார். நல்ல சாப்பாடு. பல விஷயங்களையும் பேசிப் பேசிச் சாப்பிட்டோம்.*

நண்பர்களிருவரும் அன்று மாலையே கொழும்புக்கு ரயிலில் பயணமானார்கள். நான் அண்ணன் வீட்டில் தங்கினேன். இரவு சாப்பிடவில்லை.

நடுச்சாமம் வயிற்று வலி தாங்க முடியவில்லை. சத்தமில்லாமல் சமாளித்துப் பார்த்தேன். தாங்க முடியவில்லை. முனகல் பின்னர் சத்தமானது. அண்ணனும் அண்ணியும் வந்த ஏதேதோ மருந்து எண்ணெய் எல்லாம் தந்து வயிற்றிலும் பூசிப் பார்த்தார்கள். வயிற்றோட்டமும் சேர்ந்து கொண்டது. விடியும் வரை இதே கதி தான். விடிந்த பின் டாக்டரிடம் கூட்டி போய் அண்ணண் மருந்து எடுத்துத் தந்தார்.

நண்பர்கள் பாடு எப்படியோ என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

மூன்றாம் நாள் நண்பன் பத்மநாபனிடமிருந்து தபாலட்டை வந்தது. (கொழும்பில் கூட சில தினங்கள் சந்திக்காமலிருந்தால் அவனிடமிருந்து தபாலட்டை நான்காவது நாள் வரும்.)

ரயிலில் எங்களிருவருக்கும் வயிற்று வலி. இருவரும் மாறி மாறி ரயிலில் கழிப்பறைக்குப் போய் வந்ததிலேயே ரயில் பயணம் தெரியவில்லை என்று எழுதியிருந்தான்.

என்றாலும் ராஜதுரையின் மதிய விருந்துபசாரம் வாழ்க்கையில் மறக்க முடியாதது!

---

## வவுனியா:

### ஒரு மாதத்துக்குள் 33 பேர் காணாமல் போயுள்ளனர்

# பதில் சொல்ல எவருமில்லை!

– தீபன்

வவுனியாவில் இனந்தெரியாத முறையில் இளைஞர்கள் காணாமல் போவது அதிகரித்துள்ளதாகவும், கடந்த ஒக்டோபர் மாதத்தில் இருந்து 33 பேர் காணாமல் போயுள்ளதாக தங்களுக்கு முறையிடப்பட்டுள்ளதாகவும் மனித உரிமைகள் ஆணைக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

காணாமல் போனவர்களின் குடும்ப உறவினர்களின் முறைப்பாடுகள் இப்போது அதிக எண்ணிக்கையில் தமக்குக் கிடைத்து வருவதாகவும் காணாமல் போனவர்கள் எங்கு இருக்கிறார்கள், அவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றித் தெரியாமலிருப்பதாகவும், காணாமல் போனவர்கள் பற்றித் தங்களுக்கும் தகவல் எதுவும் தெரியவில்லை என்று பொலிஸாரும், இராணுவத்தினரும் தங்களுக்குத் தெரிவித்துள்ளதாகவும் மனித உரிமைகள் ஆணைக் குழுவினர் தெரிவித்துள்ளார்கள்.

கடந்த ஒக்டோபர் மாதம் 1ஆம் திகதி மாத்திரம் 5 இளைஞர்கள் காணாமல் போயுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பூந்தோட்டம் நலன்புரி நிலையம் 5ஆம் யூனிட்டைச் சேர்ந்த சந்திரசேகரன் சங்கர் (16), சுப்பிரமணியம் இரகுநாதன் (16), தர்மலிங்கம் முருகானந்தன் (16) வவுனியா புஹீந்தோட்டம் நலன்புரி நிலையம் 6ஆம் யூனிட்டைச் சேர்ந்த கணேசன் அசோகன் (15), வவுனியா பட்டக்காட்டைச் சேர்ந்த தர்மலிங்கம் சிறிரங்கநாதன் (21), ஆகியோரே காணாமல் போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த செப்ரம்பர் மாதம் 27ஆம் திகதி பூந்தோட்டம் நலன்புரி நிலையம் 2ஆம் யூனிட்டைச் சேர்ந்த இராமகிருஸ்ணன் மோசஸ் (20) செப்ரம்பர் மாதம் 29ஆம் திகதி பூந்தோட்டம் நலன்புரி நிலையம் 2ஆம் யூனிட்டைச் சேர்ந்த அழகன் என்றழைக்கப்படும் அழகு சிவகுமார் என்பவரும் காணாமல் போயுள்ளார்கள். இதே வேளை பட்டக்காட்டைச் சேர்ந்த சண்முகலிங்கம் துஸ்யந்தன் (19), புதுக்குளத்தைச் சேர்ந்த தியாகராசா கிருபாகரன் (25) பூந்தோட்டம் நலன்புரி நிலையம் முதலாம் யூனிட்டைச் சேர்ந்த நவரட்ணம் பிரதீபன் (19), சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தைச் சேர்ந்த இராமலிங்கம் சுதன், ஈச்சங்குளம் சாஸ்திரி கூழாங்குளத்தைச் சேர்ந்த மொகமட் ஹனிபா மங்களகுமார் (20), வேப்பங்குளம் நலன்புரி நிலையத்தைச் சேர்ந்த வைத்தியலிங்கம் திவாகரலிங்கம் (16), பூந்தோட்டம் நலன்புரி நிலையம் 2ஆம் யூனிட்டைச் சேர்ந்த இராயப்பு சத்தியராஜன் (15), பூந்தோட்டம் நலன்புரி நிலையம் 2ஆம் யூனிட்டைச் சேர்ந்த இராமசாமி கணேஸ் (17), சாஸ்திரி கூழாங்குளம் தவசியா குளத்தைச் சேர்ந்த சபாரட்ணம் செல்வநாயகம் (25), பூந்தோட்டம் நலன்புரி நிலையம் 3ஆம் யூனிட்டைச் சேர்ந்த பாலராசா ரவிச் சந்திரன் (31), பாரதி புரத்தைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் லோறன்ஸ் (18), பாவக்குளம் 5ஆம் யூனிட்டைச் சேர்ந்த ஆனந்தரட்ணம் ஐங்கரன் (15), முருகனூரைச் சேர்ந்த நகுலேந்திரன் லோக திலீபன் (15), வவுனியா நகரசபை வீட்டுத் திட்டத்தைச் சேர்ந்த விக்னேஸ்வரநாதன் துஸ்யந்தன் (18), குட்செட் வீதியைச் சேர்ந்த நாகராசா கோணேஸ்வரன் (18), பத்தினியார் மகிழங்குளம் புஸ்பராசா மதன் (22), முல்லைத்தீவு புதுக்குடியிருப்பைச் சேர்ந்த வல்லிபுரம் பிரபாகரன் (21), பூந்தோட்டம் நலன்புரி நிலையம் 8ஆம் யூனிட்டைச் சேர்ந்த முனியையா ஐயன்குமார் (11), உக்கிழாங்குளத்தைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை சிறிநாதன் (24), செல்வராசா செந்தூரன் (18), குட்செட் வீதியை சேர்ந்த கிட்னர் அகிலன் (21), தாளிக்குளம் நலன்புரி நிலையத்தைச் சேர்ந்த சண்முகநாதன் சத்தியேஸ்வரன் (23), குட்செட் வீதி தோணிக்கல்லைச் சேர்ந்த கிருஸ்ணசாமி சிறிராஜ் (16), லக்சபான வீதி தோணிக்கல்லைச் சேர்ந்த கிருஸ்ணசாமி சுரேஸ் (17) ஆகியோரே காணாமல் போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2ஆம் திகதி காணாமல் போயுள்ள கிட்ணர் அகிலன் (21) என்பவருடைய வீட்டிற்கு வந்து வீட்டைச் சுற்றி வளைத்த ஆயுதந் தாங்கியவர்கள் தமது மகனைப் பிடித்துச் சென்றதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவினருக்கு முறையிட்டுள்ளனர். இராணுவத்தினரைப் போல சீருடை அணிந்திருந்த 5 பேர் வீட்டினுள் ஆயுதங்களுடன் வந்து தனது மகன் இருக்கின்றாரா எனக் கேட்டு அவரைக் கூட்டிச் சென்றதாகவும் அந்த வேளை தமது வீட்டை ஆயுதம் தாங்கிய வேறு பலர் சுற்றி வளைத்து நின்றிருந்ததாகவும் முறையிட்டுள்ளார்.

வீட்டினுள் வந்தவர்களில் ஒருவர் நன்றாகத் தமிழ் பேசியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தமது மகனை விசாரணைக்காக அழைத்துச் செல்வதாகவும் மறுநாள் காலை வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு வந்து பார்க்கும் படியும் அவர்கள் சொல்லிவிட்டுச் சென்றதாகவும் அவர் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

பதினொரு வயதுடைய ஒருவர் உட்பட 16 வயதுக்கும் 17 வயதுக்கும் இடைப்பட்ட தமிழ் இளைஞர்களே அதிகமாகக் காணமல் போயுள்ளார்கள். இவர்களுக்கு என்ன நடந்தது, இவர்கள் எங்குள்ளார்கள் என்பது தெரியாமல் இருப்பது புரியாத மர்மமாக இருப்பதாகவே மனித உரிமைகள் ஆணைக் குழுவினர் தெரிவிக்கின்றார்கள்.

காணாமல் போகின்றவர்களில் அனேகர் நலன்புரி

⇨20

# "உயிரைக் கொடுத்தும் காப்பாற்றுவேன்" என்றார் பொலிஸ் அதிகாரி

### *மனோ மாஸ்ரர் என்ற முற்போக்காளர்*

ரெலோ என்ற இயக்கத்திற்கு அரசியல் பக்கத்தினைக் கொடுத்து தான் விரும்பிய முற்போக்கு அரசியலை ரெலோ என்ற இயக்கத்தின் மூலம் சாதிக்க முயன்றவர் மனோ மாஸ்ரர். இவரது விருப்பத்தின்படி தான் அரசியல் வகுப்பு நடத்துவது போன்ற அரசியல் கட்டமைப்புக்கள் ஆரம்பமானதும் உருவாக்கப்பட்டதுமே ஒழிய ரெலோவின் தலைமை விரும்பியதொன்றல்ல. இவர் தலைமைப் பீடத்தினை மாற்றி அமைக்கலாம் என்று இருந்தார். அது முடியாத காரியமாகப் போய் விட்டது. இவர் முன்பு புலிகளின் இருந்து அதில் பிரிவுகள் ஏற்பட்டபோது விலகித் தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை என்ற இயக்கத்தினை ஆரம்பித்தவர்களுக்கு உதவி செய்தார். ஆனால் அந்த அமைப்பில் முழுமையாக வேலை செய்யவில்லை. பின்னர் சிறிது காலம் ஒதுங்கி இருந்து விட்டு 83 கலவரத்தின் போது ரெலோவின் தொடர்புகளினால் ரெலோவிற்காக வேலை செய்ய ஆரம்பித்தார். இவர் எதைச் சொல்லிக் கொடுத்தாரோ அதைத் தான் தொகுதிக்குப் பொறுப்பானவர்கள் எமக்குச் சொன்னார்கள். நாட்டில் இருந்தபடி இவர்கள் சொன்ன விளக்கமானது பலரை ரெலோவிற்குள் உள்வாங்க வைத்தது. இந்தியாவில் குடிகொண்டிருந்த தலைமைப்பீடத்துக்கு இது உதவியது. ஆனால் தலைமைப் பீடத்துக்கு எந்தவிதமான கொள்கையோ, அல்லது ஒரு ஸ்தாபனத்தை எவ்வாறு கட்டி வளர்ப்பது என்று கூடத் தெரியாத நிலையில் அதற்கு முற்போக்கு முலாம் பூசி அதை மாற்றலாம் என்று மனோ மாஸ்ரர் நினைத்திருந்தார். உதாரணமாக, ரெலோவின் தலைமை பற்றி நாம் நாட்டில் கேட்ட போது அது புலிகளைப் போல் தனித்தலைமை அல்ல. தலைவர் என்று எவருமில்லை. மத்திய குழுதான் தலைமை வகிக்கின்றது. அங்கு அதிகாரங்கள் எல்லாம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது போன்றவை தான் எமக்கு நாட்டில் கூறப்பட்டன. இவற்றை இவ்வாறு சொல்லச் சொல்லி சிறி சபாரெத்தினம் சொல்லி இருக்க முடியாது. சுதா, ரமேஸ் போன்றவர்கள் கூறியதை நம்பி மனோ மாஸ்ரர் தான் இவ்வாறு விளக்கி முற்போக்கான தலைமை போல் காட்டி ஒரு பிற்போக்கான தலைமையை வளர்த்து விட்டிருந்தார். நாம் இந்தியாவிற்கு வந்த பிறகும் கூட அவர் இந்தியாவுக்கு வந்தபிறகும் கூட இந்த நிலைமைகளை அவதானித்தும் கூட அவர் விரும்பிய தலைமையை ஏற்படுத்துவதற்குரிய முயற்சிகளையும் அவர் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. சுதா, ரமேஸ் பிரச்சினைகளில் அவர்கள் கைது செய்யப்பட்டவுடனே இவ்வாறான பிரச்சினைகள் (மத்திய குழு ஒன்று இல்லாதது போன்றவை) பல உள்ளதாக அவர் கூறினார். எமது உட்கட்சிப் போராட்டத்திலும் அவர் பெரிதாகப் பங்குபற்றவில்லை. நாம் பதின்மூன்று பேரும் பெண் தோழிகள் முப்பது பேர் வரையிலும் எமது உயிருக்கு உத்தரவாதமற்ற நிலையிலும் போராடினோம். அந்த ஒருமாத இடைவெளிக்குள் இவர் எமக்கும் தலைமைப்பீடத்துக்கும் இடையில் எமது உயிர்களைப் பாதுகாப்பதற்காக ஒரு பேச்சுவார்த்தை ஊடகமாகத் தான் செயற்பட்டார். உண்மையில் வர்க்க விடுதலையை நேசித்த இவர் ரெலோ தலைமைப் பீடத்தை நடத்தக் கூடிய திறமை இருந்தும், இவரது உழைப்பு செயற்திறனற்ற பிற்போக்கு தலைமையை வளர்ப்பதற்கே பயன்பட்டது அல்லது பயன்படுத்தப்பட்டது. இவ்வாறு திறமையுள்ள போராளிகள் இத்தகைய தலைமையினால் பயன்படுத்தப் படுவது கொலைகார மிருக வெறியுள்ள பிற்போக்குத் தலைமைகளை வளர்ப்பதற்கு உதவுகின்றது.

தொடர்ந்து அரசியல் வேலை செய்ய வேண்டும் என நினைத்தாலும் முதலில் நாட்டிற்குச் சென்று அங்கிருந்து தான் எமது முடிவுகளை எடுப்பது என்ற நிலையில் நாட்டிற்குச் செல்ல முடிவு செய்தோம். அரசியலில் இருந்து ஒதுங்க விரும்பியவர்களும் நாட்டில் இருந்து வந்த முன்னைய தொகுதிப் பொறுப்பாளர்கள் சிலருமாக நாட்டிற்குச் சென்றனர். பலருக்கு மீண்டும் வீட்டுக்குச் சென்று பழைய வாழ்க்கையை ஆரம்பிப்பது மிகவும் ஆபத்தானதாக இருந்தது. விசேடமாக சிறிலங்கா இராணுவத்தின் கெடுபிடிகள் இருந்தன. எனவே, எமது திட்டத்தின்படி பெண் தோழிகளை நாட்டிற்குத் திருப்பி அனுப்புவதை ஒத்தி வைத்தோம். இந்த வேளையில் சிலர் பெற்றோர்களைக் கூப்பிட்டு இந்தியாவில் படிப்பதற்குரிய வசதிகளைச் செய்தனர். இந்த நேரத்தில் மனோ மாஸ்ரர் நாட்டிற்குச் செல்வது அவரின் உயிருக்கு ஆபத்தாக முடியும் என்று நினைத்தோம். எனவே, அவரை இந்தியாவில் சிறிது காலம் தங்குமாறு கேட்டோம். ஆனால் எதிர்பார்த்தது போல் இந்தியாவில் அவருக்கு பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டது. மனோ மாஸ்ரரையும் இன்னுமொரு




தோழரையும் ரெலோ உறுப்பினர்கள் கடத்த முயற்சித்தனர்.

### *மனோ மாஸ்ரர் கடத்தல் முயற்சி*

மனோ மாஸ்ரரை ரெலோ கடத்த எடுத்த முயற்சியும் தோல்வியில் முடிவடைந்தது. மனோ மாஸ்ரரும் மற்றைய தோழரும் எமது இருப்பிடத்தினை விட்டு அவர்களின் இருப்பிடத்திற்கு படுப்பதற்காக ஒரு வெள்ளிக்கிழமை இரவு பஸ்ஸில் புறப்பட்டனர். இவர்கள் பஸ்ஸில் ஏறியவுடன் ரெலோவினைச் சேர்ந்த இருவரும் இவர்களின் பஸ்ஸின் ஏறினர். இந்த பஸ்ஸின் பின்னால் ஒரு காரிலும் முன்னால் ஒரு காரிலும் ரெலோவினர் சென்று கொண்டிருந்தனர். இந்த நிலைமையைப் புரிந்து கொண்ட இவர்கள் பஸ்ஸில் இருந்து இறங்குவதைத் தவிர்த்தனர். இந்த நிலையில் பஸ்ஸில் இருந்த ரெலோவினர் இவர்களைப் பிடித்து பஸ்ஸிலிருந்து இறக்குவதற்கு முயற்சித்தனர். அப்போது பஸ்ஸிலிருந்த சக பிரயாணிகள் இதைப் பார்த்து பிரச்சினைப் படவே ரெலோவினர் கூறிய காரணங்கள் இவர்கள் திருடர்கள் எனவும் எமது காம்பில் இருந்து பணத்தைத் திருடி விட்டார்கள் எனவும் ஆகையால் தான் இவர்களைப் பிடிப்பதாகவும் கூறினார்கள். அந்த பஸ் போன பாதை ரெலோவினரின் ஏரியவாக இருந்தபடியாலும் அந்தப் பயணிகள் அதைப் பெரிதாக அலட்டிக் கொள்ளதவர்களாக இருந்தார்கள். ஆனால் மனோ மாஸ்ரரும் மற்றைய தோழரும் நாம் திருடர்கள் அல்ல எனவும் நாம் தப்பி ஓடவில்லை எனவும் தம்மைப் பொலிசில் ஒப்படைக்குமாறும் ரெலோ உறுப்பினர்களுடன் போக முடியாது எனவும் கூறினார்கள். எனவே, தகவல் பொலிசுக்கு தெரியப் படுத்தப்பட்டு பஸ் கடைசி பஸ் நிலையத்தை வந்தடைந்தவுடன் பொலிஸ் வந்து மனோ மாஸ்ரரையும் மற்றைய தோழரையும் மற்றும் ரெலோ உறுப்பினர்கள் இருவரையும் கைது செய்தது. சனிக்கிழமை எமது இருப்பிடத்துக்கு வரவேண்டிய இவர்கள் இருவரும் வராததால் நானும் இன்னும் ஒருவருமாக அவர்களின் இருப்பிடத்துக்குச் சென்றோம். அங்கிருந்த இரு தோழர்கள் இவர்கள் அங்கு வரவில்லை எனவும் தாம் எம்முடன் இவர்கள் நின்றிருக்கலாம் என்று நினைத்ததாகவும் சொன்னார்கள். உடனடியாக நாம் நிலைமைகளைப் புரிந்து கொண்டு அடுத்த கட்டமாக என்ன செய்வதென்று முடிவெடுப்பதற்காகக் கூடினோம். எம்மைப் பொறுத்தவரையில் எம்மிடம் எழுந்த கேள்விகள், இவர்களை யார் பிடித்தார்கள் பிடித்தவர்களின் நோக்கம் என்ன? அடுத்ததாக எம்மையும் பிடிப்பார்களா? அவ்வாறாயின் எவ்வாறு தப்புவது? எவரிடம் நம்பி பாதுகாப்புக் கேட்பது? போன்றனவாகும். அந்த வேளையில் பெண்கள் 28 பேரும் ஆண்கள் 3 பேர் பெண்களின் பாதுகாப்பிற்காகவும் வேறு

**ஒரு தமிழீழப் போராளியின் கதை**

இருவர் எம்முடன் பிரிந்தாலும் எம்முடன் இருக்காமல் வேறு இடத்தில் இருந்தனர்.

ரெலோ என்ற இயக்கத்திற்கு அரசியல் பக்கத்தினைக் கொடுத்து தான் விரும்பிய முற்போக்கு அரசியலை ரெலோ என்ற இயக்கத்தின் மூலம் சாதிக்க முயன்றவர் மனோ மாஸ்ரர். இவரது விருப்பத்தின்படி தான் அரசியல் வகுப்பு நடத்துவது போன்ற அரசியல் கட்டமைப்புக்கள் ஆரம்பமானதும் உருவாக்கப்பட்டதுமே ஒழிய ரெலோவின் தலைமை விரும்பியதொன்றல்ல அது.

அவர்களுடனேயே மனோ மாஸ்ரரும் மற்றைய தோழரும் இருந்தனர். இந்த 3 ஆண்களில் ஒருவர் மட்டும் வயதிலும் அனுபவங்களிலும் கூடியவராகக் கருதப்பட்டவர். நானும் மற்றையவரும் 18 வயதுக்குட்பட்டவர்களாதலால் எந்தப் பயத்தையும் அறியாதவர்களாகத் துணிந்து பல முடிவுகளையும் உடனடி நடவடிக்கைகளையும் எடுத்தோம். ஆனால் எந்த முடிவும் பெண் தோழிகளின் அனுமதியின் பின்பும் அவர்களின் உடன்பாட்டுடனும் தான் எடுக்கப் பெற்றது. அன்று எமது பிரச்சினை எம்மைப் பாதுகாப்பதும் மனோ மாஸ்ரருக்கும் மற்றத் தோழருக்கும் என்ன நடந்தது என்பதை அறிவதும் தான். முதலாதவதாக ரெலோவுடன் உடன்பாடுள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ், ஆகியவற்றை அணுகி இவர்களைப் பற்றி ரெலோவுடன் கதைத்துப் பார்க்கும் எமது பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் முடிந்தளவு உதவிகளைச் செய்யுமாறும் கேட்டோம். அடுத்ததாக, பொலிசின் உதவியை நாடினோம். எம்மைப் போன்ற இலங்கையரைக் கண்காணிக்கும் தமிழ்நாடு கியூ பிரிவினருடன் தான் நாம் உண்மையில் தொடர்பு கொள்ள வேண்டும். ஆனால் அன்று ஞாயிற்றுக்கிழமையானதால் அந்தப் பிரதேசத்தின் பொலிஸ் நிலையத்தில் நிலைமைகளை விளக்கி எமக்கு சாதாரண உடையில் வந்து பாதுகாப்புத் தருமாறு கேட்டோம். ஆனால் அந்தப் பொலிஸ் அதிகாரியோ எம்மைப் பாதுகாப்பது தனது பொறுப்பு என்று எங்களைப் போகச் சொன்னார். அந்தப் பொலிஸ் அதிகாரியின் அணுகுமுறை எனக்குப் பிடிக்கவில்லை. அந்த அதிகாரியோ பெரிய ஒரு ஹீரோக்களை முதன் முதலில் பார்ப்பது போல எங்களைப் பார்த்தார். அவர் எமது இயக்கங்கள் இந்தியாவில் இருப்பதைக் கேள்விப்பட்டதாகவும் முதன்முதலில் இயக்கப் போராளிகளை இப்போது தான் பார்ப்பதாகவும் அதுவும் தனது ஏரியாவில் இருப்பவர்களுக்கு தான் பாதுகாப்புக் கொடுக்க வேண்டியது ஒரு தமிழனின் கடமை என்றும் எமக்கு ரீயும் வடையும் வாங்கித் தந்து அனுப்பி விட்டார்.

ஒரு அதிகாரிக்கு நேரடியாக எல்லாப் பிரச்சினைகளையும் சொல்லவும் முடியாது. சொன்னாலும் அவர் எங்களையும் எங்களுக்குள்ள எந்தப் பிரச்சினைகளையும் புரிந்து கொள்கின்ற நிலையில் இல்லை என்பதும் தெரிந்தது. கடைசிக் கட்டமாக ஒரு இந்திய நண்பரை அழைத்து அவர் மூலமாக அந்தப் பொலிஸ் அதிகாரியிடம் நிலைமைகளை விளக்கினோம். ஆனால் அந்த அதிகாரியோ என்னுடைய பிரதேசத்தில் இருக்கும் இவர்களை தான் உயிரைக் கொடுத்தும் பாதுகாப்பேன் என்று வீராவேசமாகக் கூறினார்.

எமக்குள்ள பிரச்சினை முதலாவது இவர் பொலிஸ் ஜீப்பிலோ அல்லது பொலிஸ் உடையிலோ எமது இருப்பிடத்துக்கு வரவேண்டாம் என்பது. இரண்டாவது இது ஒரு தற்காலிக பாதுகாப்பிற்காகத்தான். அவரிடம் போனது அடுத்த நாள் திங்கட் கிழமை. தமிழ் நாடு கியூப் பிரிவினரிடம் போய் அதன் பின் அவர்களின் உதவியைப் பெறலாம் என்பதாகும். ஆனால் எதிர்பார்த்தது போல் அந்த அதிகாரியும் இரு பொலிசாரும் ஜீப்பில் எமது வீட்டுக்கு முன் வந்திறங்கினர். எமது வீட்டைச் சுற்றியுள்ள அனைவருக்கும் ஏதோ எமது வீட்டில் அசம்பாவிதம் நடந்து விட்டது போலக் கூடி விட்டனர். நாம் இருந்த வீட்டின் உரிமையாளர் எமது வீட்டிற்குப் பின்னால் இருந்தவர். அதுவரையிலும் நாம் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்பதும் கல்வி கற்பதற்காக இங்கு வந்தவர்கள் என்றும் தான் வீட்டின் உரிமையாளருக்குத் தெரியும். ஒரு மாதத்திற்கு முன்பாகத் தான் பல கஸ்ரங்களுக்கு மத்தியில் இந்த வீட்டை வாடகைக்கு எடுத்திருந்தோம். ஏனெனில் முதலில் முப்பது பேர் தங்குவதென்றால் யாருமே வீடு தரமாட்டார்கள். இரண்டாவது இவ்வளவு பெண்கள் என்றால் அவர்கள் ஏன் எதற்காக வீடு வேண்டும் என்று பல கேள்விகளைக் கேட்பார்கள். நாம் படிக்கின்ற மாணவர்கள் என்றால் எம்மைப் பார்த்தால் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் யாரும் மாணவர்களுக்குரிய வயதும் இல்லை. அடுத்து தண்ணீர் பிரச்சினை. பெண்களுக்கு அவர்கள் வெளியே போய் வரக் கூடிய பாதுகாப்பான ஒரு சூழ்நிலை, பஸ் வசதிகள் என்று பல பிரச்சினைகள் இருந்தன. அந்த பொலிஸ் அதிகாரியின் வருகையின் பின் வீட்டு உரிமையாளர் வந்து சொல்வதற்கு முன்பாகவே அடுத்து வீடு தேடும் படலம் ஆரம்பமானது.

***தொடரும்***

நன்றி - நூலகத்திட்டம்



# தோட்டத்தில் இராணுவ முகாம்! தடுக்கத் திராணியற்ற மலையகத் தலைமைகள்!!

– இடையன்

"மலையகத்தில் இனவாத செயற்பாட்டினால், பாதிக்கப்பட்ட சிங்களவர்களுக்கு நஷ்டஈடு வழங்கு" இது அண்மையில் நாடெங்கும் சிஹல உறுமய அமைப்பினால் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளில் காணப்பட்ட வாசகங்களில் ஒன்று.

"பிந்துனுவெவ சம்பவத்தை அடுத்து மலையகத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தமிழ் இனவாதத்தின் வெளிப்பாடு என்றால், பிந்துனுவெவ சம்பவம் சிங்கள இனவாதத்தின் வெளிப்பாடு "இது இலங்கை மனித உரிமைகள் செயற்பாட்டு குழுவின் முக்கிய உறுப்பினரும், முன்னைநாள் மக்கள் விடுதலை முன்னணி அங்கத்தவரும் (ஜே.வி.பி. தமிழரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கவில்லை என்பதற்காக அவ்வமைப்பை விட்டு விலகியவர்) கட்டுரையாளரின் நெருங்கிய சிங்கள நண்பருமாகிய ஒருவர் பண்டாரவளைச் சம்பவங்களின் பின்னைய மலையக அரசியல் நிலைமைகள் பற்றிய கலந்துரையாடும் போது குறிப்பிட்ட கருத்து.

மேற்குறிப்பிட்ட இரு கருத்து வெளிப்பாடுகளும் சிங்கள சமுதாயத்தில் நிலவும் இரு வேறுபட்ட கருத்தியல் நிலைகளின் வெளிப்பாடாகும். முன்னைய கருத்து சிங்கள மக்களின் ஒரு பிரிவின் மத்தியில் தமிழர்கள் தொடர்பில் வேரூன்றியுள்ள தீவிர இனத் துவேசத்தின் வெளிப்பாடாகும். பின்னையது புலப்படுவதானது, சிங்களவர்கள் மத்தியிலுள்ள இன சௌஜன்யத்தை விரும்புவர்களது உளவெளிப்பாடாகும். இவை ஏன் இவ்விடத்தில் குறிப்பிடப்படுகின்றதென்றால் இத்தகைய கருத்தாடல்கள் மாறிவரும் மலையக அரசியல் கள நிலைமைகளில் எத்தகைய நேரடி / மறைமுக தாக்கத்தினை ஏற்படுத்தவல்லது என்பதை அடையாளம் காண்பதற்கே.

ஒரு கட்டத்தில் மலையக மக்கள் தங்கள் தலைவர்களது வார்த்தைகளை வேத வாக்காக எண்ணிச் செயற்பட்ட காலம் இருந்தது. ஆனால்; இன்று அந்நிலை மாறிவருகிறது. தங்கள் தலைவர்களின் தொடர்ச்சியான சமரச அரசியல் போக்கிற்கு மாறாக இன்றைய இளந்தலைமுறை சிந்திக்கத் தலைப்பட்டுள்ளது. இதை அண்மையில் இக்கட்டுரையாளர் பாராளுமன்ற உறுப்பினர் பி.பி.தேவராஜுடன் மேற்கொண்ட தொலைபேசி கலந்துரையாடலிலிருந்து தெளிவாக உணர முடிந்தது. மூத்த தலைமுறைக்கும் இளைய தலைமுறைக்குமிடையில் அரசியல் செயற்பாட்டில், சிந்தனை ரீதியாக பாரிய இடைவெளி ஏற்பட்டுள்ளது. இதற்கோர் சிறந்த எடுத்துக் காட்டு அண்மையில் மலையகத்தில் நசுக்கப்பட்ட எழுச்சி!

அண்மையில் மலையகத்தில் ஏற்பட்ட எழுச்சியானது சந்திரசேகரனுக்காகவோ, அல்லது ஆறுமுகம் தொண்டமானுக்காகவோ தங்கள் விசுவாசத்தை காட்டுவதற்காக தொண்டர்களினால் மேற்கொள்ளப்பட்ட எழுச்சியல்ல. அவ்வாறு கற்பிதம் செய்யப்படுமாயின் அது அரசியல் ரீதியான அறியாமையே. உண்மையில் இது மக்களின் எழுச்சி. ஒடுக்கப்படும் ஒரு தேசிய இனத்தின் ஒட்டுமொத்த ஆத்திரத்தின் வெளிப்பாடுகளின் ஒரு கட்டம் மட்டுமே. மலையக அரசியல் வரலாற்றில் 2000ம் ஆண்டு ஒக்டோபர் 29 ஞாயிற்றுக்கிழமை ஒரு மைல்கல். மலையக மக்களின் உணர்வுகள் சங்கமித்த ஒரு நாள்! அந்த உணர்வுகளின் உடனடி சங்கமத்திற்கும் வெளிப்பாட்டிற்கும் பின்னணியில் அமைந்த ஒரு காரணியே பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் தமிழ் இளைஞர்களின் படுகொலை.


இந்நிகழ்வுகளின் பின்னணியில் தான் மலையக மக்களின் இன அரசியல் இரண்டாவது கட்டத்தை ஆரம்பிக்கின்றது. பொதுவாக ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் தங்கள் இன விடுதலைக்காக அரசியல் ரீதியில் மேற்கொள்ளும் போராட்டமே "இன அரசியல்" எனக் கொள்ளப்படுகிறது. இது மூன்று கட்டங்களைக் கொண்டது.

1. ஒரு பொது அடையாளத்தின் கீழ் மக்களை அணிதிரட்டல்

2. அதிகாரக் கோரிக்கையை முன்வைத்து அரசியலை வளர்த்தல்

3. அதிகாரத்தைக் கைப்பற்றுதல்

டொனமூர் அரசியல் யாப்பு இலங்கையில் 1931 இல் அமுல்படுத்தப்பட முன், தமிழர்களின் தலைவர்களான பொன்னம்பலம் அருணாசலம், பொன்னம்பலம் இராமநாதன் போன்றோர் வடகிழக்கு தமிழர்களையும், மலையகத் தந்தை கோ.நடேசய்யர் போன்றோர் மலையகத் தமிழர்களையும் பொதுவாக இலங்கையர் என்ற அடையாளத்தின் கீழேயே ஒன்றுதிரட்டி பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக மக்களை அணிதிரட்ட முற்பட்டனர். ஆனால், காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலத்தில் பிரித்தானியர்களாலேயே நேரடியாகவும், மறைமுகமாகவும் இனவாத வித்துக்கள் இடப்பட்டன. இதில் மெனிங் பிரபுவின் பங்கும் குறிப்பிடத்தக்கது. இதை பௌத்த சிங்கள பேரினவாதிகள் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். காலனித்துவ ஆட்சிக் காலத்தில் இனவாதத்தின் உச்சக் கட்டத்தின் ஆரம்பத்திலேயே டொனமூர் அரசியல் யாப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. இக்காலப்பகுதியே வடகிழக்கு தமிழர்களின் இன அரசியலின் போராட்ட வடிவத்தின் ஆரம்பம் எனலாம். இதன் ஆரம்ப கர்த்தா ஜி.ஜி.பொன்னம்பலமே. இதுவே வடகிழக்கு தமிழர்களின் இன அரசியலின் முதல் கட்டம். அதன் இரண்டாவது கட்டமாக அந்த அரசியலை வளர்த்தெடுக்கும் கட்டத்தை செல்வநாயகம் தலைமையிலான தமிழரசு கட்சியே மேற்கொண்டது. இறுதிக் கட்டமான மூன்றாவது கட்டத்திமே இன்று உள்ளது எனலாம்.





தற்போதைய தலைமைகளின் இயலாமை பல வழிகளிலும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. தலவாக்கலையிலும் மற்றும் அதன் பின்னர் இடம்பெற்ற சம்பவங்களுக்காகவும் பல மலையகத் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

லிந்துல - லெமிலியன் தோட்டத்தில் நவம்பர் 15ம் திகதி முதல் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. இது தற்காலிக முகாம் என அரசாங்கம் கூறினாலும், தமிழர் தரப்பில் அவ்வாறு நம்புவது முடியாதுள்ளது. ஆனால், இதை எதிர்ப்பதற்கு மலையகத் தலைவர்களுக்குத் திறனில்லை. இ.தொ.காவோ (அதன் செயலாளர் அரசாங்கத்தின் ஒரு அமைச்சராக இருந்தும்) மற்றும் சந்திரசேகரன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணிக்கோ அல்லது ஏனைய மலையக ஸ்தாபனங்களுக்கோ வெறும் பத்திரிகை அறிக்கைகள் விடுவதைத் தவிர வேறு ஒன்றும் சொல்லும் படியாகச் செய்ய இயலவில்லை. இதையே தடுக்க முடியவில்லையென்றால், பெரும் ஆபத்து எதிர்காலத்தில் ஏற்படின் மக்களின் எதிர்கால பாதுகாப்புக்கு இவர்களால் எவ்வாறு உத்தரவாதமளிக்க முடியும்?

மேலும், மலையக இளைஞர்கள் கைது செய்யப்படும் போது அச்செயலை எதிர்த்து நிற்காமல் ஆறுமுகம் தொண்டமான், சந்திரசேகரன் உள்ளிட்ட மலையகத் தலைவர்களெனப்படுவோர் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டாம் என அரசாங்கத்தை கேட்டுக் கொண்டதுடன் தேவையாயின் பட்டியலைத் தருமாறும் தாங்கள் உரியவர்களை விசாரணைக்கு ஒப்படைப்பதாகவும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தனர். இது மலையகத் தலைமைகளின் காட்டிக் கொடுப்பாகும். இச்செயலானது அரசாங்கம் மலையக இளைஞர்களைக் கைது செய்யும் நடவடிக்கையை மலையகத் தலைமைகளே நியாயப்படுத்துவதுடன் ஊக்குவிப்பதாகவும் அமைந்துள்ளது. இது மலையக தலைமைகளின் இயலாமையையும், காட்டிக் கொடுப்பையுமே வெளிப்படுத்துகிறது. இந்நிலைமைகளின் கீழ் தான் அரசாங்கம் மலையக மக்களுக்கு பிரத்தியேக வதிவிட அடையாள அட்டை வழங்குவது பற்றி சிந்திக்க தலைப்பட்டுள்ளது. அவ்வாறு விசேட அடையாள அட்டை வழங்கப்படுமாயின் அப்போது கூட ஆறுமுகம் தொண்டமான், சந்திரசேகரன் உள்ளிட்ட மலையகத் தலைமைகள் வெறும் ஊடகங்களுக்கு அறிக்கை விடுவதைத் தவிர வேறு ஒன்றும் செய்யப் போவதில்லை.

அவ்வாறு யாரும் செய்யத் துணிந்தாலும் கூட, அச்செயற்பாட்டை அரசாங்கத்திற்கு எதிரான நாசகாரர்களின் நடவடிக்கை என மலையகத்தவர்களுக்கு "நாசகார" என பட்டம் சூட்டுவதிலும் இத்தலைவர்களே முதல் நிற்பர். இது தான் அவர்களின் குறுகிய தேர்தல் நோக்கிலான அரசியல் சாதுர்யம்.

இவ்வாறன நிலைமை சிங்கள மக்களுக்கு ஏற்பட்டிருப்பின் இது வரையில் என்ன நடந்திருக்கும்? அவர்களின் தலைவர்கள் சும்மா இருந்திருப்பார்களா? எனவே வெறுமனே இடம்பெற்ற/ பெறுகின்ற சம்பவங்களை ஒரு தற்செயலான சம்பவமாக எடுத்தல் ஆகாது. அதன் அரசியல் பின்னணியைப் பற்றி சிந்தித்தல் அவசியமாகும். பண்டாரவளை - பிந்துனுவெவவில் இடம்பெற்றது ஒரு தற்செயலான சம்பவமல்ல. அது நன்கு திட்டமிடப்பட்ட தாக்குதலாகும். அச்சம்பவத்தில் அங்கிருந்தவர்களில் இருவரே மலையகத் தமிழராக இருந்த போதிலும், அனைவரும் தமிழரே. இருப்பினும் இத்தாக்குதல் மற்றும் அதன் பின்னர் மலையகத்தில் இடம்பெற்ற சம்பவங்களின் போது பேரினவாதிகள் கடைப்பிடித்த உத்திகள் (உதாரணமாக, தமிழர்களின் கடைகள் எரிக்கப்பட்ட போது யாழ்ப்பாண தமிழர்களின் கடைகளுக்கு ஒன்றும் நடவாது பார்த்துக் கொண்டமை) என்பன இச்சம்பவங்களின் பின்னணி யாது? குறிப்பாக மலையகத் தமிழர்களின் இருப்புக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை இது என இனங்காணப்படல் வேண்டும். வடகிழக்குக்கு வெளியே தமிழர்கள் செறிந்து வாழும் மலையகப் பகுதிகளை தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரும் பேரினவாதிகளின் திட்டத்தின் ஒரு கட்டமே அண்மைய சம்பவங்கள்.

மலையகத்தைப் பொறுத்த மட்டில் மலையக மலையக மக்கள் இலங்கையின் சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் ஆங்கிலேயர்களாலும் சுதந்திரத்திற்கு பின்னர் இன்று வரை தொடர்ந்து வந்த ஆட்சியாளர்களாலும் படுமோசமாக அரசியல், பொருளாதார, கலாசார ரீதியாக சீரழிக்கப்பட்டு வந்துள்ளனர். மலையக மக்களின் குடியியல் தொடர்களை ஊடறுத்து பல சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் அபாயம் அண்மையிலேயே தெட்டத் தெளிவாக உணர முடிந்தது. மக்கள் அரசியல் ரீதியாக கிளர்ந்தெழும் போது சல்லடை போன்று சுற்றி அசைய முடியாது சிங்கள மக்களின் திட்டமிட்ட குடியேற்ற கிராமங்களினால் தடுக்கப்பட்டுள்ளதைக் காண முடிந்தது.

பொருளாதார ரீதியாக 175 வருடங்களாக நிச்சயமற்ற உலகில் மிகக் குறைவான நாட்கூலியையே இவர்கள் பெற்று வருகின்றார்கள். கல்வி கலாசார ரீதியாக சீரழிவும் வளர்ச்சி குன்றியும் உள்ள நிலைமை. மலையகத் தமிழர்களில் 80சதவீதத்தினர் தோட்டத் தொழிலாளர்களாக இருப்பதுடன் அவர்களுக்கு சொந்த வீடோ, காணியோ அற்ற நிலையே தொடர்ந்தும் காணப்படுகிறது. அடிப்படை குன்றிய, வளர்ச்சியற்ற வாழ்க்கை முறை, 175 வருட வரலாற்றைக் கொண்ட ஒரு தேசிய இனத்தின் குறிப்பிடத்தக்களவான பகுதியினர் இன்னும் நாடற்றவர்களாக இருப்பார்களாயின், அது உலகிலேயே நிச்சயமாக மலையக தமிழரே!

இத்தகைய நிலை இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கையில் மலையகத் தமிழர்களின் இன அரசியல் அதன் இரண்டாவது கட்டத்தை ஆரம்பத்திருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதன் முதல் கட்டமான மலையகத் மக்களை "மலையக தமிழர்" என்ற பொதுவான இன அடையாளத்தின் கீழ் அணி திட்டும் பணி சுதந்திரத்திற்கு முன்தொட்டு இன்று வரை பல்வேறு இடர்களுக்கு மத்தியில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (இ.தொ.கா) தலைமையில் ஏனைய அமைப்புக்கள் உள்ளடங்களாக செய்து முடிக்கப்பட்டுள்ளது. முதல் கட்ட செயற்பாடுகளில் ஏமாற்றுகளும், காட்டிக் கொடுப்புகளும், இடம் பெற்றுள்ளமை உண்மையே. அவை விவாதத்திற்கும், கண்டனத்திற்கும் உரியவையே. ஆனாலும், முதற்கட்ட அடித்தளம் பூர்த்தி செய்யப்படுள்ளது. இதில் ஐயமில்லை.

தற்பொழுது அதன் இரண்டாவது கட்டமான வளர்ச்சிக் கட்டத்தின் ஆரம்ப நிலையில் உள்ளது. இக்கட்டத்தின் வளர்ச்சியானது பொருத்தமான சாதுரியமிக்க திறமையான தலைமைத்துவ அமைப்பினாலேயே சாத்தியப்படக் கூடியது. ஆனால், இன்றைய அமைப்புகளாலும், தலைவர்களாலும் அந்த தலைமைத்துவத்தைக் கொடுக்க முடியுமா? என்பதே கேள்வி. அது அவர்களால் முடியாது என்பதனையே அவர்களின் கடந்தகால நிகழ்கால செயற்பாடுகள் எடுத்துக்காட்டுகின்றன.

இதற்கு தங்கள் பூரண ஆதரவு உண்டு என்பதை தெரிவிப்பதாகவே பேரினவாத அரசாங்கத்தின் செயற்பாடுகளும் அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக நிரந்தர இராணுவ முகாம் நிறுவப்பட்டதன் மூலம் மலையகத் தமிழருக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள அச்ச உணர்வு, தொடரும் கைதுகள், (தலவாக்கலை சம்பவங்களின் பின்னர் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்களால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்களாக இருந்தும் பாதிக்கப்பட்ட தமிழர்களே கைது செய்யப்படு

⇨19

# ஜே.வி.பி.யின் எல்லா முகங்களிலும் உள்ளது இனவாத முகம் ஒன்றே!


– கோணாமலையான்

அண்மைய நாட்களில் ஜே.வி.பி.யின் பல்வேறு முரண்பாடான முகங்கள் பளிச்சென்று துலங்குகின்றன. உண்மையில் இது ஜே.வி.பியின் பல்வேறு முகங்கள் போலத் தோற்றம் தந்தாலும் அதற்கு உள்ளதும் ஒரே முகம் தான். இனவாத முகம். இந்த வகையில் இதற்கும் பிரதானமான பேரினவாதக் கட்சிகளுக்கும், அரச பங்குதாரராயிருக்கும் இடதுசாரிக் கட்சிகளுக்கும், சிஹல உறுமய போன்றவற்றிற்கும் பெரிய வேறுபாடில்லை.

தேசிய இனப்பிரச்சினைக்கான எவ்வகையான தீர்வையும் முன்வைக்க இயலாத , விரும்பாத ஜே.வி.பி. , அப்பிரச்சினைக்கான மிகக் குறைந்த பட்சத் தீர்வான இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைக் கூட முன்னின்று எதிர்த்துப் போராடிய ஜே.வி.பி. பின்னர் அதே தீர்வினால் முன் வைக்கப்பட்ட மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு மாகாணசபை நடவடிக்கைகளில் பங்கு கொண்டது, அதன் கேலிக் கூத்தாகவே அமைந்தது. இதுவே அதன் கொள்கையாக 'வரித்துக் கொண்டதற்கும் நடைமுறைக்கும்' இருந்த வேறுபாட்டைக் காட்டியது. இதுபோலவே ஆரம்பத்தில் மாகாண சபையை எதிர்த்த சிறீலங்கா சுதந்திரக் கட்சி பின்னர் அதில் பங்கு கொண்டதும் மனங் கொள்ளத்தக்கது. இலங்கையின் சகல மாகாணங்களுக்கும் நடைமுறை படுத்தப்படாமல் வடக்கு - கிழக்கிற்குத் தீர்வாக மட்டும் முன் வைக்கப்பட்டிருந்தால் இன்று வரை இக்கட்சிகள் படுமோசமாக மாகாண சபைகளை எதிர்த்தே வந்திருக்கும். ஆனால் தமக்கு ஒரு தங்குமிடமாகவும், பாராளுமன்றப் பிரவேசத்திற்குப் பிரவேசிப்பதற்கான நுழைவாயிலாகவும் பயன்படுவதனால் அந்த ஏற்பாடு இவர்களுக்குச் சௌகரியமாகப் போய் விட்டது.

சமீபகாலமாக தன்னை மிகவும் தீவிரமான இடதுசாரிக் கட்சியாகக் காட்டி வரும் ஜே.வி.பி. சர்வதேச ரீதியாக நடைபெறும் இடதுசாரி அணிகளின் மாநாடுகளில் கலந்து கொள்ளத் தயாராகும் அதேவேளை தேசிய இனப் பிரச்சினை தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கு ஏற்பாட்டாளராக பணிபுரிய முன்வரும் நாடான நோர்வேயின் நட்புறவான அழைப்பை நிராகரிக்கிறது. மோசமான வார்த்தைகளில் கண்டித்து கடிதம் அனுப்புகிறது. ஆனால் இலங்கையில் மோசமான யுத்தத்தின் பங்காளிகளாக இருந்து வரும் அமெரிக்கா போன்ற நாடுகளைக் கண்டிப்பதில் அது ஒரு தணிவான போக்கைக் கடைப்பிடிப்பதை உன்னிப்பாக அவதானிப்பவர் புரிந்து கொள்ள முடியும். பாலஸ்தீனத்திற்காக இஸ்ரேலின் நடவடிக்கைகளை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திய ஜே.வி.பி. பாலஸ்தீனத்திற்கும் இஸ்ரேலிற்கும் இடையில் பேச்சுவார்த்தைக்கான பங்களிப்பைச் செய்த அமெரிக்காவை அதற்காகக் கண்டித்ததா? இதையும் விட வேடிக்கை என்னவென்றால் எந்த மாகாண சபையை அறிமுகம் செய்ததற்காக இந்தியாவை எதிர்த்து ஜே.வி.பி. போராடியதோ அங்கேயே இதன் தலைவர் அரசியற் புகலிடம் கொண்டு பின்னர் நோர்வேயை இலங்கையின் இனப்பிரச்சி-னைத் தீர்விற்கு அனுசரணை செய்வதற்காகப் பாராட்டும் ஐரோப்பிய நாடான பிரான்சி-லேயே புகலிடம் கொண்டிருப்பதும் தான். இது ஜே.வி.பி.யின் இரண்டாவது முரண்பாடு.

பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக இஸ்ரேலிற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஜே.வி.பி ஈழத்தில் தமிழ் மக்கள் மீது அரசுகள் நிகழ்த்திய குண்டு வீச்சுகள் முதலிய கொடுமைகளை எதிர்த்து ஏதும் அறிக்கை தானும் வெளியிடாது அடுத்த முரண்பாடு. இதனை தமிழ் சிங்களப் பத்திரிகைகள் சில கண்டித்ததன் விளைவாக அண்மையில் பண்டாரவளைப் படுகொலை-களைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்தது. ஆனால் அதில் கைது செய்யப்பட்ட சந்திரசேகரனை விடுதலை செய்யமாறு அது



கோரவில்லை. அதேவேளை பண்டாரவளை சம்பவத்தை ஒட்டி யாரும் இனவாதக் கலவரத்தை தூண்ட, எந்தக் குழுவும் முயலக்கூடாது என்றும் குறிப்பிட்டது. இது எதைக் குறித்தது? சிஹல உறுமய போன்றே ஜே.வி.பி.யும் மகா சங்கத்தினரின் ஆசியைப் பெற்றதாகையால் கண்டிக்க மாட்டாது. கண்டித்தாலும் அது வெறும் கண் துடைப்-பாகவேதானிருக்கும் என்கிற உண்மை இங்குபளிச்சிடுகிறதல்லவா? உண்மையில் சிறுபான்மையினக் கட்சிகள் அரசில் பங்கு வகிப்பதைக் கண்டிக்கும் சிஹல உறுமயவினைப் போலவே, அவற்றை விலக்குவதாயின் அரசிற்கு தான் ஆதரவு தருவதாக அறிவித்திருக்கும் ஜே.வி.பி.யின் நிலைப்பாடும் பச்சை இனவாதத்தைக் காட்டுவதலலாமல் வேறென்ன? இந்த இலட்சணத்தில் பண்டாரவளைப் படுகொலையை கண்டித்து இன மோதல் நிலைமைகளை உருவாக்க வேண்டாம் என்றும் ஜே.வி.பி. கோருகிறது. இந்திய விரோதத் தன்மையை (ஜே.வி.பி.யின் பிரச்சார வேலைத் திட்டத்தில் இந்திய விஸ்தரிப்பு வாதமும் இடம் பெற்றிருந்தது. அதுவும் தோட்டத் தொழிலாளரின் இருப்பு நிலை கூட அந்தக் கண்ணோட்-டத்திலேயே அமைந்திருந்தது. இதைப் பின்னர் ஜே.வி.பி. மறுத்த போதிலும் உண்மை அது தான்.) கொண்டிருந்த ஜே.வி.பி. முதலில் ஏற்பட்ட நிலைமையைச் சாதகமாக்கி இந்திய முதலாளிமாரின் சில நிறுவனங்களிற்குத் தீயிட்டது பற்றியும் நாம் அறிவோம். இந்த இலட்சணத்தில் இன மோதல் நிலைமையை ஏற்படுத்த வேண்டாம் எனக் கோருவதற்கு இவர்களுக்கு ஒரு தார்மீக உரிமை கிடையாது. அவ்வாறு உரிமை பெறுவதற்கு இதய சுத்தியாக தன்னை தேச நலனை முன்னிறுத்தி சுயவிசாரணை செய்ய ஜே.வி.பி. தயாராக வேண்டும். தயாராவார்களா? மாட்டார்கள். மகா சங்கத்தினர் வழங்கிய ஆசி என்னாவது?


இது போக அண்மைய நாட்களில் ஜே.வி.பி. வெளியிட்டுவரும் சுவரொட்டிகள் சில தமிழ்ப் பிரதேசங்களிலும் (திருகோணமலையில்) காணக் கூடியதாயுள்ளது. ஒரு சுவரொட்டி பண்டாவளைப் படுகொலையை கண்டிக்கிறது. கண்டனம் பொதுவாக எவரையும் சுட்டிக் கண்டிக்கப்படவில்லை. அத்துடன் கண்டன வாசகத்தை வாசித்த பலரும் அது குறித்து சிரிக்கவும், நையாண்டி செய்யவும் இடமளித்து விட்டது. இனியும் வேண்டாம் இனவாதப் படுகொலைகள். இதன் அர்த்தம் என்ன? இதுவரை நடந்தவை போதும் என்பதா? இதுவரை நடந்தவற்றை மன்னிப்போம். விசாரணையோ குழுக்களோ வேண்டாம் என்பதா? எது? இதை விட இன்னுமொரு சுவரொட்டி வாசகம் இவ்வாறு உள்ளது. "வடக்கு - கிழக்கு பிரிவினையைத் தவிர்ப்பதற்காக தமிழ் முஸ்லிம் சிங்கள மக்கள் ஐக்கியப்படுவோம்" இதன் அர்த்தம் என்ன? இன ஐக்கியம் என்பது அனைத்து மக்களும் ஒன்றுபடுதல் என்பதற்கான குறிக்கோளுக்காக அல்லாமல் வடக்குக் கிழக்கு பிரிவினையை தவிர்ப்பதற்காகத் தான் என்றே அர்த்தப்படுகிறது. எந்த ஒற்றையாட்சி முறைமை ஒரு மொழி, ஒரு மதம் என்று ஒற்றைத் தன்மைகளுக்கு இட்டுச் சென்று ஒற்றுமையைச் சீர்குலைத்ததோ மீளவும் அந்த ஒற்றையாட்சி முறைமையே ஐக்கியத்தைப் பேண உதவுமென்றா ஜே.வி.பி. கருதுகிறது. ஒரு அரசின் பங்காளிகளாக சிறுபான்மைக் கட்சிகள் இருப்பதே கண்ணை உறுத்த அவற்றை விலக்கினால் தான் முண்டு கொடுக்கத் தயார் என்ற மனநிலையை கொண்ட ஜே.வி.பி. (பண்டாரவளைப் படுகொலைகள் போன்றவற்றிற்கும் சேர்த்தே தமிழ், முஸ்லிம் கட்சிகள் பங்காளிகளாக இருக்கும் நிலைமை



பரிதாபகரமானது என்பது வேறு கதை) ஆண்டாளும் சிங்கள இனம் தான் ஆளவேண்டும் என்பதைத் தானே அதன் மூலம் காட்டுகிறது! இந்த நிலையில் எப்படி இன ஐக்கியம் பற்றி பேசுகிறது? இதுபற்றி அமைச்சர் ரவூப் ஹக்கீம் பாராளுமன்றில் ஜே.வி.பியை விமர்சித்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழ், முஸ்லிம் மக்கள் ஆட்சியில் பங்காளர்களாகவும் இருக்கக் கூடாது அவர்களது பிரச்சினைக்கு தீர்வாக அதிகாரப் பங்கீடும் கூடாது. ஆனால், அவர்கள் பிரிவினைக்கு எதிராக ஐக்கியப்படவும் வேண்டும். இதையெல்லாம் ஒரு பேரினவாதத் தன்மையின் மேலோங்கியத் திணிப்பின் குரலாகவே ஒலிக்கிறதல்லாமல் அடிமட்டத்திலிருந்து எல்லா இன மக்களினதும் அக்கறையின் பாற்பட்ட ஐக்கியத்திற்கான குரலாக அடையாளம் காண முடியவில்லை. ஆகவே ஜே.வி.பி.யின் குரலும் சேர்ந்து எம்மை எதிர்நிலைப்பாட்டை எடுக்க உந்தும் குரலாகவே தான் படுகிறது.

கார்த்திகை மாதம் பிறந்தால் போதும் புலிகளை விட மாவீரர் தினத்தைப் பற்றிய பேச்சும் கலவரமான குரல்களும் எதிர் மட்டத்தில் தொடங்கி விடும். இதிலே மாவீரர்களை நினைவு கூரும் சுவரொட்டிகள் அரசின் ஆளுகைக்குட்பட்ட தமிழ்ப் பிரதேசங்களில் காணக் கிடைக்க ஏதுவில்லை. ஆனால், "கார்த்திகை வீரர்களை நினைவு கூருவோம்" என்ற வாசகங்களுடன் கூடியதும் முஷ்டிகள் உயர்த்தி கையின் மேல் விஜேவீராவின் தொப்பியுடன் கூடிய தலையுடனுமான ஜே.வி.பியின் சுவரொட்டிகள் பரவலாக தமிழிலும் சிங்களத்திலும் காணக்கூடியதாக உள்ளது. தேசிய ஐக்கியத்தை வலியுறுத்தும் சுவரொட்டி வெளிவந்திருக்கும் தருணத்தில் கார்த்திகை வீரர்களை நினைவுகூரும் சுவரொட்டியும் வெளிவந்திருப்பதை சேர்த்துப் பார்த்தால் இது பிரிவினை கோரி போராடும் மாவீரர் தினத்திற்கான எதிர் நிலைப்பாட்டையே காட்டுவதாகத் தான் தமிழ் மக்களால் அடையாளம் காணப்படும் காணப்படுகிறது. இதிலே ஜே.வி.பியின் ஒவ்வொரு நடவடிக்கைகளும் சுவரொட்டிகளும் தமிழ் மக்களை ஈர்ப்பதற்கானவை என்ற தோரணை வாய்ந்தவையாய் இருந்தாலும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்கான தீர்வை மிகச் சிறந்த தீர்வை. சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதான நவ சமசமாஜக்கட்சியின் நிலைப்பாட்டை ஒத்துவரித்துக் கொள்ளாதவரை வெறும் வாய்ப்பந்தல் தோரணங்களாகவே அமைந்துவிடும் என்பதை ஜே.வி.பி. புரிந்துகொள்ள வேண்டும். ஆனால் தமிழ் மக்கள் ஒன்றைப் புரிந்து கொள்வார்கள். ஜே.வி.வி. பல முரண்பாடான முகங்களைக் கொண்டிருந்தாலும் அதற்கு உள்ளது இனவாத முகம் ஒன்றே தான் என்பதே அது.



நன்றி - நூலகத்திட்டம்



# நடிகைகள் தற்கொலை தொடர்கதை ஆவது ஏன்?

– தமிழ்மகன்

திங்களன்று (நவ. 29-) காலை 'கோழி கூவுது' விஜி சென்னை மகாலிங்கபுரத்தில் உள்ள அவரது வீட்டில் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டார். 'தாயகம்' திரைப்படத்தை இயக்கியவரும் தற்போது சின்னத்திரைத் தொடர்களை இயக்கி வருபவருமான ஏ.ஆர். ரமேஷ் தன்னை ஏமாற்றி விட்டதாகவும் தான் தற்கொலை செய்து கொள்வதற்கு அவர் தான் காரணமென்றும் கடிதம் எழுதி வைத்துவிட்டு இறந்திருக்கிறார் விஜி.



தற்கொலை செய்து கொள்வது நடிகைகளுக்கு மட்டுமான சாபக்கேடு. ஹாலிவுட் மர்லின் மன்றோ முதல் தமிழில் ஷோபா- சில்க் ஸ்மிதா வரை இதற்கு நீண்ட உதாரணம் சொல்ல முடியும். அனைவருக்குமே காதல் தோல்வி தான் ஒரே காரணம். நிறைய ஆண்களோடு பழகும் வாய்ப்பு உள்ளவர்கள் சினிமா நடிகைகள். படத்துக்குப் படம் யாரையாவது காதலிப்பது போல நடிக்கிறார்கள். படத்துக்குப் படம் ஒரு மஞ்சள் கயிறைப் பிடித்துக் கொண்டு தனது நிழல் கணவனை எண்ணி பக்கம் பக்கமாக வசனம் பேசுகிறார்கள். இவர்களுக்கான 'சொந்த காதலன்- நிஜ கணவன்' பற்றி யாருக்கும் பெரிய அபிப்ராயம் இருப்பதில்லை.

'அட சினிமா நடிகைதானே... என்ன பொல்லாத காதல்' என்ற எண்ணம் பெரும்பான்மையாக இருக்கும்.

சில சமயங்களில் அவர்களைக் காதலிப்பதாகக் கூறிக் கொண்டிருப்பவர்களும்கூட அப்படி நினைக்கும்போது தான் இப்படியான விபரீதங்கள் நிகழ்கின்றன.

நடிகைகளின் பகட்டான சினிமா வாழ்க்கைக்குப் பின்னால் எப்போதும் அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது பாதுகாப்பின்மை. அவர்களுக்கிருக்கும் மவுசும் வரவேற்பும் இளமையின் துணை இருக்கும் வரைக்கும் தான். நான்கு படங்கள் ஓடவில்லையென்றால் விசிறிகளின் வரவேற்பு குறைந்து விடும். எந்த அளவுக்கு நிலைமை கீழிறங்கிய பின்னும் காரையும் கண்ணாடி அறையையும் விட்டு வெளியே வர முடியாமல் வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கும்.

நிறைய நடிகைகளிடம் உங்கள் கணவர் எப்படி இருக்க வேண்டும் என்று கேட்டால் ''என்னை நன்கு புரிந்து கொண்ட கணவன் வேண்டும்'' என்பார்கள். அதற்கு அர்த்தம் இவர்களைப் புரிந்து கொள்வதில் இருக்கும் சிக்கல் தான்.

சமீபத்தில் இரண்டாம் முறையாக விவாகரத்துக்கு விண்ணப்பித்திருக்கும் நளினி, ஒரு பத்திரிகை பேட்டியில் இப்படி சொல்லியிருந்தார்: என் கணவர் ராமராஜன் என்னை எப்போதும் சந்தேகப்பட்டுக் கொண்டே இருந்தார். நானும் சத்யராஜும் நடித்த படம் டி.வி.யில் ஓடிக் கொண்டிருந்தால் 'என்ன மலரும் நினைவுகளா?' என்பார்.

வங்கியில் கடன் வாங்குவதற்கு மனேஜரைச் சந்திக்கும் போது என்னைப் பேசச் சொல்லுவார். கடனை அடைக்க முடியாமல் தவிக்கும் போதும் என்னைக் கேடயமாகப் பயன்படுத்தி ஓடி ஒளிந்து கொள்வார் என்ற ரீதியில் பொங்கியிருந்தார்.

நளினி சொல்வது பொய்யாகவும் இருக்கலாம். ஆனால் நடிகைகளுக்கு இது ஏற்பட முடியாத அனுபவமில்லை. அதனால் தான் சிலரை அவர்கள் பெரிதும் ஏற்றுக் கொள்கிறார்கள், நம்புகிறார்கள். அவர்களாலும் புறக்கணிப்படும் போது வாழ்க்கையே சூனியமாகி விட்டதாக நினைக்கிறார்கள்.

படபட ஜெயலட்சுமி, ஷோபா, சில்க் ஸ்மிதா, தற்கொலைக்கு முயன்று பிழைத்த ஸ்ரீப்ரியா போன்ற பலரும் கலகலப்பான நடிகைகள் என்று பேரெடுத்தவர்கள். இவர்களின் தற்கொலை முயற்சி சம்பவங்கள் பற்றிய செய்தி வெளியான நேரத்தில் 'தைரியமான இவர்கள் ஏன் இந்த முடிவுக்கு வந்தார்கள் என்று புரிந்து கொள்ள முடியவில்லை' என்று சக நடிகர்கள் பரிதாபப்பட்டார்கள். 'தைரியமாகத் தற்கொலை' செய்து கொள்வதைத் தவிர இவர்களுக்கு வேறு மார்க்கம் இல்லாமல் போனதற்குக் காரணம் இவர்களின் பாதுகாப்பின்மை தான்.

'கோழி கூவுது' படத்தில் நடிகர் சுரேஷ் ஜோடியாக அறிமுகமானவர் விஜி (34). இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அப்பல்லோ மருத்துவமனையில் தனக்கு முதுகுத் தண்டில் நடந்த ஆபரேஷனில் தவறு நேர்ந்து அவதிப்பட்டார். நடிகர்களும் தமிழக முதல்வர் கருணாநிதியும் தலையிட்டு தவறான ஆபரேஷனுக்கான நஷ்டஈடு பெற்றுத் தந்தனர்.

அதன் பிறகு சுமார் ஓராண்டுக்குப் பிறகு மீண்டும் நடிக்க ஆரம்பித்தார். இதற்கிடையே அஞ்சல் பயிற்சி மூலம் எம்.ஏ. வரலாறு படித்துத் தேறினார். அதைத் தொடர்ந்து தொலைக் காட்சித் தொடர்களில் நடிக்க ஆரம்பித்தார்.

அரவிந்தராஜ் தயாரித்த 'உடல் பொருள் ஆனந்தி' தொடரில் நடித்தார். அரவிந்தராஜின் தம்பி ஏ.ஆர். ரமேஷ் இவருக்குப் பழக்கமானார். நண்பனாகத் தான் பழகினேன். விஜி அதை காதல் என்று கற்பித்துக் கொண்டார் என்கிறார் ரமேஷ். என் சாவுக்குக் காரணம் ரமேஷ் தான் என்று கடிதம் எழுதி வைத்து விட்டு இறந்திருக்கிறார் விஜி. தான் இறந்த பிறகு காதலனாவது நன்றாக வாழட்டும் என்று 'செண்டிமெண்ட்' பார்த்துக் கொண்டிருக்காமல் பிடி சாபத்தை என்று கைநிறைய மாட்டி விட்டிருக்கிறார்.

ஆனால் முதுகெலும்புப் பிரச்சினையில் இரண்டாண்டுகளாக அவதிப்பட்ட போது இருந்த மன தைரியம், அவருக்கு இந்த விஷயத்தில் இல்லாமல் போனது வேதனை தான்.

எப்போதும் விசிறிகளின் மத்தியில் இருக்கும் இவர்களுக்குத் தான் புழுக்கமும் அதிகமாக இருக்கிறது.

நன்றி: ஆறாம்திணை

# வேலு பிரபாகரனின் இன்னொரு படம்!

– தமிழ்மகன்

புரட்சிக்காரன்


நடிப்பு: சத்யராஜ், குஷ்பு, ரோஜா, ராதிகா மணிவண்ணன், அருண்பாண்டியன் நீனா, மன்சூரலிகான் ராதாரவி, வேலுபிரபாகரன்

ஒளிப்பதிவு உதயசங்கர்
இசை வித்யாசாகர்
இயக்கம் வேலுபிரபாகரன்





ஒரே படத்தில் எல்லா சமூகத் தீமைகளையும் களைந்தெடுக்கும் படியான திட்டத்தோடு வந்திருக்கிறார் வேலு பிரபாகரன்.





சாதிக் கொடுமை, மதங்களின் வெறியாட்டம், கூலி விவசாயிகளின் வறுமை, கோயில் பூசாரிகளின் பித்தலாட்டம், போலிச் சாமியார், கூட்டுப் பண்ணை, பெண்ணடிமைத்தன ஒழிப்பு, அரசு அதிகாரிகள்- காவல்துறையினரின் அதிகாரத் துஷ்பிரயோகம், அரசியல்வாதிகளின் அடாவடித்தனம், மொழிப் பிரச்சினை, சர்வதேசச் சதிகாரர்கள் இத்தனை மாங்காய்களை ஒரே படத்தில் வீழ்த்த நினைத்திருக்கிறார். இத்தனை மாங்காய்களும் கடவுள் நம்பிக்கை என்ற கிளையில் காய்த்தவை என்று இயக்குநரால் சுட்டிக் காட்டப்பட்டாலும் ஜீரணிக்கச் சிரமமாக இருக்கிறது.



ஏதாவது சிலவற்றின் மீது மட்டும் கவனம் செலுத்தியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். படம் நெடுகப் பிரச்சார நெடி. எடுத்ததற்கெல்லாம் ''கடவுள் இல்லடா.. கடவுள் இல்லடா'' என்கிறார். மத நம்பிக்கைகளால் நாட்டில் பிரச்சினைகள் வெடித்துக் கொண்டிருப்பது நியாயமாக இருந்தாலும் கடவுளின் பலத்தை விடக் கடவுள் நம்பிக்கையின் பலம் மக்களின் மனத்தில் ஆழமாக வேரூன்றிக் கிடப்பதையும் சுட்டிக் காட்டியிருக்கலாம்.

எடுத்துச் சொல்லும் கருத்தை ஆணித்தரமாக முன் வைத்திருக்கிறார் வேலு பிரபாகரன். மூன்று மதத் தலைவர்களைக் கடத்தி வந்து காட்டில் வைத்துவிட்டு, ஒவ்வொருவரையும் அடுத்த மதத்தின் கடவுள்களை ஏற்றுக் கொள்கிறீர்களா என்று கேட்கும்போது 'இல்லை' என்கிறார்கள். 'நீங்கள் ஒவ்வொருவரும் மற்ற இருவருடைய மதத்தை மறுக்கிறீர்கள். நான் உங்கள் மூன்று மதத்தையும் மறுக்கிறேன்' என்கிறார்.

ஆனால் பண்ணையார் தர்மலிங்கம் போன்ற கதாபாத்திரங்கள் எரிச்சலூட்டுகின்றன. சாதிக் கலவரத்துக்குப் பண்ணையாருடைய பெண் மீதான சபலம்தான் காரணம் என்பது மேலோட்டமான பார்வை.

சாதிய மூடச் சிந்தனை மக்களின் ரத்தத்தோடு கலந்து கிடப்பதையும் அதைச் சில அரசியல் சக்திகள் பயன்படுத்திக் கொள்வதையும் வளர்த்தெடுப்பதையும் தகுந்த உதாரணங்களோடு சொல்லியிருக்கலாம்.

ஒளிப்பதிவு, சண்டைப் பயிற்சி, பின்னணி இசை போன்றவற்றில் அலங்கார வேலைப்பாடுகள் குறைவுதான். ஆனால் எது அலங்காரம் என்பதையே கேள்வி கேட்கும் படம் ஆதலால் அதைப் பொருட்படுத்தத் தேவையில்லை. வைரமுத்துவின் பாடல் வரிகளில் தீவிரம். கோயில்களைக், ''கடவுளுக்காக மனுசன் கட்டிய கடைகள்'' என்கிறார். பாடல்களுக்கு வித்யாசாகரின் ஆக்ரோஷ இசை.

ஐம்பதுகளில் வெளியான திராவிட எழுச்சிப் படங்களை இந்தப் படம் நினைவுபடுத்துகிறது.

நன்றி: ஆறாம்திணை

நன்றி - நூலகத்திட்டம்





## சிறையிலிருந்து மடல்கள்

எம்மவர்களிடம் எனைச் சேர்ப்பதற்காய்
என்னருகே நின்றது - எருமை
ஆயுதம் தரித்துச் சிறைவாசலின்
கதவருகே.......

எனினும் என்னிருப்பைப் பதிவு
செய்வதற்காய் - எழுதும் நிறைவு மடல்...

துயர் படிந்து வெளிவரும் விழிநீரின்
ஊடே இதைப் படிக்கும் நண்பனே.....

கடைசி மடல் என்று கனவினிலும்
நினையாதே

மீள
வித்தாய் விழுதலும்
வீரியமாய் முளைத்தலும்
பூவும் பிஞ்சும் கனியும் தாங்கிப்
போராட வருதலும் எவ்வாறு
'கடைசியாகும்'?

எப்போதாவது வெண்ணிறப் புறாக்களால்
எங்களின் மேகங்கள் சூழப்பட்ட பின்பு
கடைசி மடல் வரையப்படலாம்.......

எனினும் இப்போதல்ல....

அப்பாவையும் அம்மாவையும் கேட்டதாகச்
சொல்.... இறந்த பின்னும் மூன்றாம் நாள்
உயிர்த்தெழுவேன் என கர்த்தரிடம்
மன்றாடும் ......

எம் மக்களிடம் மட்டும் எவையுமே
சொல்லாதே ... நீ சொல்வதை விட
அவர்கள் நிறையவே தெரிந்து
கொண்டார்கள்.... என்றாலும்
என்னுடையவற்றையெல்லாம்
அவர்களுடையதாக்கிவிடு....

துரோகிகளிடம் சொல்... காந்தியை
நினைக்கும் எவரும் கோட்சேயை
மறந்ததில்லையென்று - அவர்கள்
ஆண்டிகளாயிருந்தாலென்ன
அரசர்களாயிருந்தாலென்ன....

இதோ உடலைச் சம்பல் செய்து
உப்பும் போட்ட பின்பு
உருசித்துப் பார்ப்பதற்காய் - சிலர் உள்ளே
வருகின்றார்கள்.

நிறைவு செய்கின்றேன் நண்பனே...

உயிர்க்கொடியை உலுக்கும் ஒலி மிக
அருகே கேட்கின்றது

நிறைவு செய்கின்றேன் நான்....

நம்பிக்கையுடன் இரு .....
நாளைய செய்தித்தாளின் தலைப்பு
நாமாவோம்....

நம்பிக்கையுடன் இறக்கின்றேன்....

நாளை எங்களைப் புதைத்த
திட்டுக்களின் மீது - செங்கொடி தாங்கிய
உங்களின் பாதங்கள் அணிவகுக்கும்
எனும்.....

சஞ்சுதன்
19.11.2000

# கலீல் ஜிப்ரான்– நூற்றாண்டு விழாவின் பதினேழு ஆண்டுகளுக்குப் பின்..

இந்தக் கொண்டாட்ட ஏற்பாடுகளுக்குப் பின்னால் தான் கலீல் ஜிப்ரான் என்ற தனித்துவ அடையாளமிருக்கிறது. தன் இனத்து, தன் வயதொத்த இளைஞர்களிடையே ஒரு ஹீரோவாய், 1960ன் இளைஞர் அணிகளது முன்மாதிரியாளனாய், குறியீட்டு ஓவியத்தின் மதிப்பார்ந்த ஒரு பிரதிநிதியாய் 1983ல் கிட்டத்தட்ட 7 மில்லியன் பிரதிகள் விற்பனையான ஒரு சிறிய தத்துவார்த்த நூலொன்றின் ஆசிரியனாய் என பல பரிமாணங் கொள்பவன் இந்த ஜிப்ரான்.

சிரியாவின் Bsharri என்ற கிராமத்தில் 1883 இல் கலீல் ஜிப்ரான் பிறந்தார். அங்கிருந்து அவரின் தாயுடன் 1895 இல் அமெரிக்காவுக்குப் புலம் பெயர்ந்தார்.

அந்தக் காலங்களில் Baharri லிருந்து அமெரிக்காவுக்குப் போவதென்பது இலகுவான காரியமல்ல. ஆனால், அந்த முயற்சியில் ஜிப்ரானின் தாய் கமிலா வெற்றியும் பெற்றார். உறவினர்களும், நாட்டவர்களும் நிறைந்திருந்த ஒரு பகுதியில் இருப்பிடம் அமைத்துக் கொண்டதுடன் தன் நான்கு பிள்ளைகளுடனும் வாழ்க்கையை ஓட்டிக் கொள்வதற்காக துணி, ஆடை விற்பனையிலும் ஈடுபட்டார். பொஸ்டனின் செழிப்பு வாய்ந்த நகரான Back Bay லேயே இந்த வியாபார முயற்சியில் ஈடுபட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. கமிலாவும் ஏனைய பல லெபனானியப் பெண்களைப் போல தன் ஓய்வு நேரங்களை தன் தோழியர்களின் வீடுகளிலேயே கழித்தார். இவர்கள் அனைவருமே பொதுவாக தம் பிறந்தகம் பற்றிய கவலை கொண்டவர்களாகவே இருந்தார்கள். இவ்வாறான ஒன்றுகூடல்களில் அவர்கள் பரஸ்பரம் கவிதைகளையும், கதைகளையும் பரிமாறிக் கொள்பவர்களாக இருந்தார்கள். பொதுவாகவே திருமண நிகழ்வுகள், இறப்புக்கள், வருடாந்தக் கொண்டாட்டங்கள் என்பன அராபிய சமூகத்தைச் சேர்ந்த கவிஞர்களின் ஈடுபாட்டுக்குரிய நிகழ்வுகளாக இருந்தன. சிலர் இது போன்ற நிகழ்வுகளின் போது விஷேசமாக கவிதைகளையும் எழுதுபவர்களாக இருந்தார்கள்.



அப்போது பன்னிரண்டு வயதே நிரம்பியிருந்த கமீலாவின் கடைசிப் பையனான கலீல் ஜிப்ரானும் இந்தக் கவிதை நிகழ்வுப் பாரம்பரியத்தை உள்வாங்கி தன் ஆர்வத்தையும், ஆற்றலையும் வெளிப்படுத்தத் தொடங்கினான். கலீல் ஜிப்ரானின் சரிதையை எழுதியவரும், அவரின் மைத்துனருமான கலில் ஜி. ஜிப்ரான் இவ்வாறு சொல்கிறார்: (இவ்வாறான ஒன்றுகூடல்களின் போது ஜிப்ரான் தன் வயதொத்த பையன்களுடன் ஒரு மூலையில் அமர்ந்து கொண்டு அங்கு அரங்கேறும் கதைகளை, பாடல்களை, கவிதைகளையெல்லாம் மிக உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருப்பான். தங்கள் இதயங்களில் நிரம்பியிருக்கும் தங்கள் தாய் நாடு பற்றிய அவர்களது ஒவ்வொரு வெளிப்பாடுகளும் ஜிப்ரானின் மிகுந்த அவதானத்திற்குள்பட்டன)

இந்தக் காலங்களில் தான் பொஸ்டனின் (டெனிசன் இல்லத்தை) ஜிப்ரானும், ஜிப்ரானை டெனிசன் இல்லமும் கண்டு கொண்டன. டெனிசன் இல்லமானது அர்ப்பணிப்பும், கொள்கைப் பிடிப்பும் கொண்ட சில பெண்களது ஆளுகைக்குள் இருந்த ஒரு இடமாகும். இந்த இல்லத்தவர்கள் தான் இந்தப் பையனுக்குள் ஒளிந்திருந்த திறமைகளையும், ஆளுமைகளையும் இனங்கண்டனர். அத்துடன் ஒரு நூல் வெளியீட்டகத்தின் பங்காளியும், அமெரிக்காவைக் கலக்கிக் கொண்டிருந்த புதிய கலை வடிவத்தினது முன்னோடியுமாக இருந்த Fred Holland day என்பவரின் கவனத்தையும் ஈர்த்த ஜிப்ரான், கவிதைகளுக்குப் படங்கள் வரையவும், புத்தக அட்டை வடிவமைப்புக்கள் செய்யவும், கூடவே கவிதைகள் எழுதவுமான சந்தர்ப்பங்களைப் பெற்றார். ஆக இந்தச் சந்திப்பானது ஜிப்ரானின் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனைக்குரியதாக இருந்தது.

இதே நேரத்தில் புதிய பிரித்தானியாவில் அதியதார்த்தவாதக் குரல்கள் எதிரொலிக்கத் தொடங்கியிருந்தன. கவிஞர்கள் Louise Guiney, Lilla Cabot Perry, Josephine Pabody போன்ற கவிஞர்கள் வறட்டுச் சிந்தனைகளையும், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்குப் போடப்பட்டிருந்த விலங்குகளையும் உடைப்பதற்கு முயன்று கொண்டிருந்தார்கள். அத்துடன் சர்வதேசத்துடனான ஓர் ஆத்மார்த்த தொடர்பைப் பேணவும் முயன்று கொண்டிருந்தார்கள். ஏற்கனவே ஜிப்ரான் இந்த ஆத்மார்த்த சர்வதேசிய அணுகலை தன் கவிதைகளூடாக வெளிப்படுத்தத் தொடங்கியிருந்தார். கலைகளின் காவலராகக் கணிக்கப்பட்ட Sarah Choate Sears ஊம் ஜிப்ரானின் படைப்புகளால் கவரப்பட்டார். புகைப்படப்பிடிப்பாளர் Charles Peabody மற்றும் Holland Day போன்றோர் ஜிப்ரானைப் புகைப்படம் எடுத்தனர். கருமையான கண்களுடைய இளைஞனாய் மத்திய கிழக்குக்குரிய ஆடையணிந்திருக்கும் தன் குடும்பத்தினருடன் ஜிப்ரான் இருக்கும் இந்தப் புகைப்படங்கள், அந்த நாட்களில் கிழக்குலகத்தின் அனைத்துமே அங்கீகாரத்திற்குரியவையாக இருந்தன என்பதற்கான ஞாபகச் சான்றாகும்.

**(தொடரும்)**

எக்கேஎம். ஷெரீப்

# டிட்வால் நாய்

அந்தச் சிப்பாய்கள் தங்கள் பதுங்கு குழிகளில் பல வாரங்களாக நிலை கொண்டிருந்தனர். ஆனால் சண்டை என்பதே நடக்கவில்லை - பரஸ்பரம் ஒரு சடங்கு போல அவர்கள் தினசரி சுட்டுத் தீர்த்த சில டஜன் ரவுண்டுகளைத் தவிர.

சீதோஷ்ணம் அற்புதமாய் இருந்தது. காட்டுப் பூக்களின் மணம் கனக்கும் காற்று பாறைகளின் பின்னும் மலைப் புதர்களின் மறைப்பிலும் ஒழித்திருந்த சிப்பாய்களைப் பற்றிய சிந்தனையே அற்றது போல் தன் வழி தொடர்ந்தது இயற்கை. எப்போதும் போலவே பாடிய பறவைகள்: மலர்ந்த பூக்கள்: சோம்பேறித்தனமாய் ரீங்காரித்துத் திரிந்த தேனீக்கள்.

துப்பாக்கி வெடிக்கும் போது மட்டும் பறவைகள் திகைத்தன: பறந்தோடின: வாத்தியக்காரன் அலறும் ஸ்வரமொன்றை தன் கருவியில் ஒலித்தது போல். செப்டெம்பரின் இறுதி வெய்யிலும் இல்லை, பனியும் இல்லை. கோடையும் குளிரும் சமாதானம் ஆகிவிட்டது போல் தோன்றியது. நாள் முழுதும் நீல ஆகாயத்தில் பஞ்சு மேகங்கள் - ஏரியின் மேல் மிதக்கும் அலங்காரப் படகுகள் போல்.

ஒரு முடிவும் தெளிவுபடாத இந்தப் போரினால் அலுப்புற்றவர்களாகத் தென்பட்டனர் சிப்பாய்கள். விசேஷமாக எதுவும் நடக்காத போர். அவர்கள் நிலை கொண்டிருந்த இடம் தகர்க்க முடியாதது. அவர்கள் இருத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு மலைகளும் ஒன்றுக்கொன்று நேரெதிராய் இருந்தன. சம உயரம். எனவே, எந்த ஒரு தரப்புக்கும் கூடுதல் அனுகூலம் இல்லாதிருந்தது. கீழே பள்ளத்தாக்கில், பாறைப் படுகையில் பாம்பு போல நெளிந்து வளைந்து பாய்ந்தது ஒரு ஓடை.

சண்டையில் விமானப் படை ஈடுபடுத்தப்படவில்லை. எதிரிகள் இருவரிடமும் கனரகத் துப்பாக்கிகளோ பீரங்கிகளோ இல்லை. இரவில் தீ வளர்ப்பார்கள். எதிரியின் குரல்கள் மலைகளினூடாய் எதிரொலிப்பதாய்க் கேட்டுக் கொண்டிருப்பார்கள்

கடைசிச் சுற்றுத் தேநீர் அருந்தி முடித்த நேரம். தீ அவிந்து விட்டது. நிர்மலமான ஆகாயம். காற்றில் தண்மை. தேவதாரு மரக்கூடுகளின் கூரிரென்ற, ஆனால் தொந்தரவற்ற மணம். பெரும்பாலான சிப்பாய்கள் உறங்கி விட்டிருந்தனர் - இரவுக் காவலிலிருந்த ஜமேதார் ஹர்நாம் சிங்கைத் தவிர. இரண்டு மணிக்கு அவன் கண்டா சிங்கை எழுப்பினான் - காவலை மாற்றிக் கொள்ள. பிறகு படுத்துக் கொண்டான். தூக்கம் அவன் கண்களிலிருந்து வெகுதொலைவில் இருந்தது - வானத்து மீன்களைப் போல.

பஞ்சாபி நாட்டுப்புறப் பாட்டொன்றை முனக ஆரம்பித்தான்:

ஒரு ஜோடி காலணி வாங்கித் தா,

என்காதலி☐

நட்சத்திரம் பதித்த காலணிகள்.

உன் எருமையை விற்றேனும்

ஒரு ஜதை வாங்கித் தா

நட்சத்திரங்கள் பதித்த காலணிகள்.


பாட்டு மனதுக்கு இதமாக இருந்தது. மெல்லிய சோகமும் தந்தது. ஒவ்வொருவராக எழுப்பினான் மற்றவர்களை. சிப்பாய்களில் வயதில் மிகவும் இளையவனான பண்ட்டா சிங் தன் இனிய குரலில் பாட ஆரம்பித்தான். காதலின் தனிமை ததும்பும் கவிதை. காதலும் அவலமும் நிரம்பிய, காலத்தை வென்ற பஞ்சாபிக் காவியம் 'ஹிர் ரஞ்சா'விலிருந்து. ஆழ்ந்த சோகம் கவிழ்ந்தது அவர்கள் மேல். சாம்பல் நிற மலைகள் கூட பாடலின் துக்கத்தில் பாதிக்கப்பட்டவை போல் தோன்றின.

இந்த மனோநிலையைக் குலைத்தது ஒரு நாயின் குரைப்பொலி. ஜமேதார் ஹர்நாம் சிங் கேட்டான்:

"இந்தத் தேவடியாள் மகன் எங்கிருந்து வந்து சேர்ந்தான்?"

நாய் மறுபடியும் குரைத்தது. சப்தம் சமீபத்தில் கேட்டது. புதர்களில் சலசலப்பு. பண்ட்டா சிங் எழுந்து தேடப் போனான். சாதாரண நாட்டு நாய் ஒன்றை இழுத்து வந்தான். அது தன் வாலை ஆட்டிக் கொண்டிருந்தது.

"புதருக்குப் பின்னாலே இருந்தான் இவன். இவன் பேரு 'ஜுன் ஜுன்' னாம்!" பண்ட்டா சிங் அறிவித்தான்.



வெடித்துச் சிரித்தனர் அனைவரும். ஹர்நாம் சிங் தன் கைப்பையிலிருந்து பிஸ்கோத்து ஒன்றை எடுத்து தரையில் எறிந்தான். அவனை நோக்கிப் போன நாய் பிஸ்கோத்தை மோந்து பார்த்தது. அதை தின்ன முனையும் போது ஹர்நாம் சிங் பறித்துக் கொண்டான்.

"பொறு. நீ ஒரு பாகிஸ்தான் நாயாக இருக்கலாம்"

அவர்கள் சிரித்தனர். பண்ட்டா சிங் அந்தப் பிராணியைத் தட்டிக் கொடுத்தான். ஹர்நாம் சிங்கிடம் சொன்னான்:

" ஜமேதார் சாஹிப், ஜுன் ஜுன் ஒரு இந்திய நாய்"

"உன் அடையாளத்தைக் காண்பி" ஹர்நாம் சிங் நாய்க்கு ஆணையிட்டான். அது வாலை ஆட்டியது.

"இது போதாது. எல்லா நாய்களுக்கும் வாலை ஆட்ட முடியும்" என்றான் ஹர்நாம் சிங்.

"இவன் ஒரு ஏழை அகதி" என்றான் பண்ட்டா சிங், நாயின் வாலைச் சீண்டியபடி.

ஹர்நாம் சிங் நாய்க்கு ஒரு பிஸ்கோத்துப் போட்டான். காற்றில் ஏறிப் பிடித்தது நாய்.

"நாய்கள் முடிவு செய்தாகணும் இப்போது, தான் இந்தியனா பாகிஸ்தானியனா என்று" - சிப்பாய்களில் ஒருவன் கருத்துரைத்தான்.

ஹர்நாம் சிங் கைப்பையிலிருந்து இன்னொரு பிஸ்கோத்து எடுத்தான்.

"எல்லாப் பாகிஸ்தானிகளும் நாய்கள் உட்பட, கொல்லப்படுவார்கள்."

"இந்தியா ஜிந்தாபாத்" - ஒரு சிப்பாய் கூவினான்.

பிஸ்கோத்தை மெல்வதற்கு முற்பட்ட நாய் சவம் போல் நின்றது பாதியிலேயே. வாலை கால்களுக்கிடையில் இடுக்கிக் கொண்டு மிரண்டு இருந்தது. ஹர்நாம் சிங் சிரித்தான்.

"சொந்த தேசத்தைப் பார்த்தே ஏன் பயப்படுகிறாய்? இந்தா ஜுன் ஜுன், இன்னொரு பிஸ்கோத்து சாப்பிடு."

இருட்டறையில் விளக்கைப் போட்டது போல் சடாரென்று விடிந்தது. டிட்வால் என்றழைக்கப்பட்ட அந்தப் பிரதேசத்தின் மலைகள், பள்ளத் தாக்குகளில் நெடுகப் பரவியது காலை.

யுத்தம் மாதக் கணக்காக நீண்டு கொண்டிருந்தது. யார் ஜெயித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று யாருக்கும் தெளிவில்லை.

ஜமேதார் ஹர்நாம் சிங் அந்தப் பிராந்தியத்தைத் தூரக் கண்ணாடியால் சுற்று நோக்கினான். எதிர்மலையிலிருந்து புகை எழும்புவதைக் காண முடிந்தது. இவர்களைப் போலவே எதிரியும் மும்முரமாய்க் காலை ' உணவு தயார் செய்கிறான் போலும்.

பாகிஸ்தான் ராணுவத்தின் சுபேதார் ஹிம்மத்கான் தனது கடா மீசையை முறுக்கி விட்டான். டிட்வால் பகுதியின் வரைபடத்தை ஊன்றிக் கவனிக்க ஆரம்பித்தான். அவனருகில் இருந்த வயர்லெஸ் ஆப்பரேட்டர், படைப் பிரிவின் தளபதியுடன் தொடர்பை ஸ்தாபிக்க முயன்று கொண்டிருந்தான் - கட்டளைகளைப் பெற வேண்டி.

சில அடிகள் தள்ளி, சிப்பாய் பஷீர் தரையில் உட்கார்ந்திருந்தான். ஒரு பாறையின் மேல் சாய்ந்திருந்த அவன் முன்னால் கிடந்தது அவன் துப்பாக்கி. மெல்ல முனகிக் கொண்டிருந்தான்.

'எங்கு கழித்தாய் இரவை?

என் அன்பே, என் நிலவே,

எங்கு கழித்தாய் நீ,

இரவை?'

வார்த்தைகளைத் தனக்குத் தானே ரசித்தபடி குரலெழுப்பிப் பாடத் துவங்கினான். திடீரென்று சுபேதார் ஹிம்மத்கானின் குரல் கேட்டது.

"நீ எங்கே கழித்தாய் இரவை?" என்று அலறினான் ஹிம்மத்கான்.

ஆனால் இதை பஷீரிடம் கேட்கவில்லை. ஒரு நாயைப் பார்த்துக் கத்திக் கொண்டிருந்தான். சில நாட்களுக்கு முன்னால் எங்கிருந்தோ வந்து சேர்ந்த நாய் அது. கூடாரத்தில் சந்தோஷமாகத் தங்கியிருந்தது. முந்தின இரவு காணாமல் போன நாய், செல்லாத காசைப் போல் திரும்பி வந்து விட்டது.

பஷீர் புன்னகை செய்தான். நாயைப் பார்த்துப் பாடினான்: 'எங்கு கழித்தாய் இரவை? எங்கு கழித்தாய் இரவை?' அது வாலை மட்டும் ஆட்டியது. சுபேதார் ஹிம்மாத்கான் ஒரு கூழாங்கல்லை எறிந்தான் அதன் மீது.

"வாலாட்ட மட்டும் தான் தெரியும் இந்த முட்டாளுக்கு"

"அவன் கழுத்தில் ஏதோ இருக்கே?" பஷீர் கேட்டான். ஒரு சிப்பாய் நாயைப் பிடித்து அதன் கழுத்திலிருந்த கயிற்றுப் பட்டியை அவிழ்த்தான். ஒரு சிறிய அட்டைத் துண்டு கட்டியிருந்தது கயிற்றில். வாசிக்கத் தெரியாத ஒரு சிப்பாய் கேட்டான்:

"அதில் என்ன எழுதியிருக்கிறது?"

பஷீர் முன்னால் வந்து, சற்றுச் சிரமப்பட்டு அந்த வாக்கியத்தின் மர்மத்தை அவிழ்த்தான்.

"ஜுன் ஜுன் என்று எழுதியிருக்கிறது"

சுபேதார் ஹிம்மத்கான் தன் பிரசித்தி பெற்ற மீசையை இன்னொரு முறை, அழுத்தி முறுக்கி விட்டுச் சொன்னான்:

"அது ஒரு குறிப்போ என்னவோ. பஷீரே, அதில் வேறெதுவும் எழுதி இருக்கா?"

"இருக்கு ஸார். இது ஒரு இந்திய நாயாம்."

"அதற்கு என்ன அர்த்தம்?"

"அது ஒரு ரகசியம் போல" - பஷீர் கவலையுடன் பதிலளித்தான்.

"ஜுன் ஜுன் என்ற வார்த்தையில் தான் மர்மம் இருக்கிறது." தன் புத்திசாலித்தனமான யூகத்தை வெளிப்படுத்தினான் இன்னொரு சிப்பாய்.

"அதில் ஏதோ இருக்கலாம்" என்றான் சுபேதார் ஹிம்மத் கான்.

கடமையுணர்வுடன் பஷீர் அதைத் திரும்ப வாசித்தான்: "ஜுன் ஜுன். இது ஒரு இந்திய நாய்."

சுபேதார் ஹிம்மத்கான் வயர்லெஸ் கருவியை எடுத்து தளபதியுடன் பேசினான். நாய் தங்கள் இருப்பிடத்தில் திடீரென்று தோன்றியது; தோன்றியது போலவே திடீரென்று முந்தின இரவு காணாமல் போனது; காலையில் திரும்பி வந்தது எல்லாவற்றையும் விளக்கமாகச் சொன்னான்.

"என்ன தான் சொல்கிறாய் நீ?" என்று கேட்டான் தளபதி.

சுபேதார் ஹிம்மத்கான் வரை படத்தை மீண்டும் ஊன்றி கவனித்தான். பிற்கு ஒரு சிகரெட் பெட்டியைப் பிரித்து, அதில் ஒரு துண்டு கிழித்தான். பஷீரிடம் கொடுத்து, சொன்னான்:

"அந்த சீக்கியன்களின் பாஷையான குர்முகியில் எழுது."

"என்ன எழுதட்டும்?"

நன்றி - நூலகத்திட்டம்



# சதத் ஹஸன் மாண்ட்டோ


"வந்து...."

பஷீருக்கு ஒரு யோசனை பிறந்தது.

"ஷுன் ஷுன். அதுதான் சரி. ஜுன் ஜுனுக்கு ஷுன் ஷுன்னால் தான் பதிலடி கொடுக்க வேண்டும்."

"சபாஷ்" என்று ஆமோதித்தான் சுபேதார் ஹிம்மத் கான். "இதையும் சேர்த்துக் கொள். இது ஒரு பாகிஸ்தான் நாய்."

சுபேதார் ஹிம்மத்கான் துண்டுக் காகிதத்தை நாயின் கழுத்தில் தன் கைப்படக் கட்டினான். பிறகு சொன்னான்: "உன் குடும்பத்திடம் போய்ச் சேர்."



நாய்க்குச் சாப்பிடக் கொடுத்துவிட்டு, சொன்னான்: "இதோ பார், என் நண்பனே. துரோகம் மட்டும் கூடாது. துரோகத்திற்கு தண்டனை மரணம் தான்."

நாய் வாலாட்டிக் கொண்டே சாப்பிட்டது. பிறகு சுபேதார் ஹிம்மத்கான் இந்திய நிலை நோக்கி நாயை திருப்பி நிறுத்தி விட்டு சொன்னான்:

"எதிரிக்குக் கொண்டு போ இந்தச் செய்தியை. ஆனால் திரும்பி வந்துவிட வேண்டும். இது உன் தளபதியின் ஆணை."

நாய் வாலை ஆட்டியது. இரண்டு மலைகளையும் பிரித்த பள்ளத் தாக்குகள் வளைந்து வளைந்து சரிந்திறங்கிய மலைப் பாதையில் இறங்கிப் போனது.

சுபேதார் ஹிம்மத்கான் துப்பாக்கியை எடுத்து வானத்தில் சுட்டான்.

துப்பாக்கிச் சத்தம் இவ்வளவு அதிகாலையில் கேட்டது குறித்து - அதிகாலையில் நடக்க வேண்டிய விஷயம் இல்லையே - இந்தியப் படை சற்றுத் திகைத்தது. ஏற்கனவே சலிப்படைந்திருந்த ஹார்நாம் சிங் கத்தினான்.

"திருப்பிக் கொடுப்போம் அவன்களுக்கு.."

இருதரப்பும் ஒரு அரைமணி நேரம் சுட்டுக் கொண்டன - நேரம் தண்டமானது தான் மிச்சம். இறுதியில், 'சுட்டது வரை போதும்' என்று ஹார்நாம் சிங் கட்டளையிட்டான்.

தன் நீண்ட தலைமுடியை வாரி முடித்துக் கண்ணாடியில் பார்த்தபடி பண்ட்டா சிங்கிடம் கேட்டான்:

"அந்த நாய் ஜுன் ஜுன் எங்கே போச்சு?"

"நாய்களுக்கு வெண்ணை ஜீரணமாவதேயில்லை என்று சொல்கிறது பழமொழி" - தத்துவார்த்தமாகச் சொன்னான் பண்ட்டா சிங்.

திடீரென்று, காவலிலிருந்த சிப்பாய் கூவினான்.

"அதோ வருகிறான் அவன்."

"யார்?" ஜமேதார் ஹார்நாம் சிங் கேட்டான்.

"அவன்தான். அவன் பேரென்ன? ....ம்...ஜுன் ஜுன்."

"அவன் என்ன செய்கிறான்?"

"நம் பக்கம் வருகிறான்." - துாரக் கண்ணாடி வழியாய்ப் பார்த்துச் சொன்னான் சிப்பாய்.

ஜமேதார் ஹார்நாம் சிங் துாரக் கண்ணாடியை அவனிடமிருந்து பறித்தான்.

"அவனே தான். கழுத்தில் ஏதோ கட்டியிருக்கே. பொறு.... அந்தத் தாயோளி பாகிஸ்தானி மலையிலிருந்து வருகிறான்."

தன் துப்பாக்கியை எடுத்தான். குறி பார்த்துச் சுட்டான். குண்டு நாய்க்கருகில் இருந்த பாறைகளைத் தாக்கியது. நாய் நின்றது.

சுபேதார் ஹிம்மத்கான் தகவல் கேட்டு தன் துாரக் கண்ணாடி வழியாய்ப் பார்த்தான். நாய் திரும்பி ஓடி வந்து கொண்டிருந்தது.

"வீரர்கள் போரை விட்டு ஓடுவதில்லை. முன்னால் போ. உன் பணியைச் செய்து முடி." - அவன் நாயைப் பார்த்துக் கத்தினான். அதைப் பயமுறுத்த நாயின் திசையில் சுட்டான். அதே சமயம் ஹர்நாம் சிங்கும் சுட்டான். குண்டு நாயைச் சில அங்குல இடைவெளியில் கடந்தது. நாய் காற்றில் எழும்பித் தாவியது - காதுகளை மடித்துக் கொண்டு. சுபேதார் ஹிம்மத்கான் மீண்டும் சுட்டு சில கற்களைச் சிதறடித்தான்.

சீக்கிரமே இரண்டு வீரர்களுக்கும் அது கேளிக்கையாகி விட்டது. பெரும் மிரட்சியுடன் நாய் சுற்றிச் சுற்றி வந்தது. ஹிம்மத்கான், ஹர்நாம்சிங் இருவருமே அட்டகாசமாய் சிரித்துக் கொண்டிருந்தனர். நாய் ஹர்நாம்சிங்கை நோக்கி ஓடியது. அவன் சத்தமாய் வைதபடி சுட்டான். குண்டு நாயின் காலில் பாய்ந்தது. வேதனையால் கதறிக் கொண்டே அது ஹிம்மத்கானை நோக்கித் திரும்பி ஓடியது. துப்பாக்கிச் சூடு - நாயை மிரட்டுவதற்காக.

"தைரியமாய் இரு. காயம் பட்டாலும், காயம் உனக்கும் கடமைக்கும் இடையில் வர அனுமதிக்காதே. போ, போ, போ." பாகிஸ்தானி கத்தினான்.

நாய் திரும்பியது. ஒரு கால் முற்றிலும் பயனற்றுப் போய் விட்டது. ஹர்நாம்சிங்கை நோக்கி இழுத்துப் பறித்து நகர்ந்தது. துப்பாக்கியை எடுத்த ஹர்நாம்சிங் கவனமாகக் குறி வைத்து நாயைச் சுட்டுக் கொன்றான்.

சுபேதார் ஹிம்மத்கான் பெருமூச்சு விட்டான்.


"அந்த அப்பாவிப் பயல் தியாகியாகி விட்டான்."

இன்னும் சூடு தணியாத துப்பாக்கிக் குழலைத் தடவியபடி ஜமேதார் ஹர்நாம் சிங் முணுமுணுத்தான்.

"நாய் மாதிரிச் செத்தான்."

நன்றி:
சதத் ஹஸன் மாண்ட்டோ
சிறுகதைத் தொகுதியிலிருந்து

# புறக்கணிப்பு



செல்வமனோகரி

கவனித்தலால்
கர்வமான கடல்!

பூமிக்குக் கைகளில்லை
கடலை அறைந்துவிட


கால்களில்லை
எட்டியுதைத்துவிட

வாயுமில்லை
மறுத்துவிட

தெளிவான
மனசு மட்டும் உண்டு

பூமியைக் கபளீகரிக்கும்
கடலரக்கனைப்
புறக்கணிக்கும்
மனசு மட்டும் உண்டு

# இவைகள் நிசம்



உனக்கான காத்திருப்புக்குப்
பின் எனது வாழ்வு இனித்துளிர்காது!

காலத்தின் காலடிகளுக்குள்
கேள்வியின் வதை நீங்கி
காற்றின் காவுதலுக்குள்ளான
உன் உயிரின் உறவுக்கான என்
அவாவுதல் முடிவற்ற நீட்சியாய்
தொடருமிக் கணங்களில் இனி
எனக்கான வாழ்வு துளிர்க்காது!

விவஸ்தை கெட்ட ஆவியாய் நீயும்
விந்தை தேசத்திலே உலவித்திரிவது
உனக்குப் புரிவது போலத்தான்
எனக்கும் புரிகிறது!
அழு,
நீ விட்டுப் பிரிந்து போன இப்புவியின்
அவலங்களை நினைத்தழு!

கறுத்துக் களைத்துப் போய்
கவனிப்பாரற்றுக் கிடக்கும் இந்தக்
கல்லறைகளைப் பார்.......
வாழ்வதாக நினைத்து
வாடிக் கொண்டிருக்கும் ஜீவன்களின்
கண்ணீர்க் கதையினை இயல்புகிறது!
பால்சுரக்காத அந்த விதவைப் பெண்ணின்
மார்புகளை சூப்பிக் களைத்துப் போய்க்
கிடக்கும் குழந்தையின் கதறல் ஒலி
உன் காதுகளில் விழுகிறதா?
புரியும்!
யதார்த்த வாழ்வின் அவலங்கள் உனக்கும்.

நீ உருவமற்ற சலனமாய் காற்றிலே
சவாரி செய்கிறாய் யதார்த்த வாழ்வில்
உன் மனை படும் அவஸ்த்தைகளைப் பற்றி
விவஸ்தை இல்லாமல்!

உன் காலடிகளெல்லாம்
காற்றிலேதான் பதிந்து கிடக்கிறது......
போருக்குக் கூட அச்சப்படாதபடி
உன்னுடைய வாழ்வு அந்நியப்பட்டுப்
போயிற்று.....!

இனி...,
உனது இந்தக் காத்திருப்புக்குப் பின்
எனது வாழ்வு துளிர்க்காது!

உன்னுடைய ஆவிகள் தேசத்து
ஆளுகைக்குள் இனி நாங்களும்
உட்பட்டுப் போவோம்....
வேகமாய் வருகின்ற ஒரு 'புல்லொட்'டுக்குப்
பலியாகி...
இல்லையேல்!
வெடித்துச் சிதறுகின்ற எறிகணைகளின்
துகள்களுக்குள் துாசாகி.......

எப்படியாயினும் சரி
இனி நாங்களும் ஆவிகளாய்
அலையப் போகிறோம் காற்றில்
காலடி பதித்து!
உன்னைப் போல.............

~ பாலைநகர் ஏ.எச்.எம்.ஜிஃப்ரி

நன்றி - நூலகத்திட்டம்



# சியாம் செல்வத்துரையின் 'FUNNY BOY' 'விசித்திரமான பையன்'



# பன்றிகளுக்குப் பறக்க முடியாது 2

அப்பாச்சி வீட்டின் பின்புறமாக அமைந்துள்ள இந்தப் பகுதி இயற்கையாகவே என்னைத் தன்பால் ஈர்த்துக் கொண்டு விட்ட பகுதி என்று தோன்றுகிறது. அங்கு நாளைக் கழிப்பதற்காக நாங்கள் போய் வந்த அந்த ஞாயிற்றுக் கிழமைகள் பற்றிய எனது நினைவுகளில் மிகவும் முந்திய நினைவுகள் எல்லாம் இந்தப் பின்பக்கத் தோட்டத்தைச் சுற்றியதாகவே உள்ளன. பெடியங்களின் பகுதியில் நடக்கும் கிறிக்கற் விளையாட்டில் சுட்டெரிக்கும் வெயிலில் துடுப்பெடுத்து ஆடுபவர் பந்தை அடிப்பதும் ஓடுவதுமாய் விளையாடிக் கொண்டிருக்க மணிக்கணக்கில் அவர்களைப் பார்த்துக் கொண்டே இருப்பதில் இருக்கும் சந்தோசம் எனக்கு கிரகித்துக் கொள்ள முடியாத ஒரு விஷயமாக இருந்தது.

பெண்கள் பகுதியில் எனக்கு ஆர்வம் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் அங்கு நாம் விரும்பிய விநோத விளையாட்டுக்களை சுதந்திரமாக விளையாட முடியுமாக இருந்தது தான். இந்தப் பெண்கள் குழுவில், எனக்கிருந்த கற்பனை வளம் காரணமாக நான் தலைமைப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தேன். என்ன விளையாட்டை விளையாடினாலும் அது பெரியவர்கள் செய்யும் வீட்டுச் சடங்குகளைச் செய்து காட்டுவதாக இருந்தாலும் சரி, அல்லது எங்களுக்கு மிகவும் பிடித்த ஒரு தேவதைக் கதையை நடித்துக் காட்டுவதாக இருந்தாலும் சரி, அவற்றுக்கு ஏதாவது ஒரு சின்ன மாறுதலைச் செய்து புதுமையான விதத்தில் அதை நிகழ்த்தும் ஒரு முறையை நான் கண்டுபிடித்து விடுவேன்.

எனது தலைமையில் அம்மாச்சியினதும் அப்பாச்சியினதும் அழுக்கு உடுப்புக் கூடையை நாங்கள் முற்றுகையிடுவோம். அதற்குள் இருந்து புதையல் எடுப்பது போல சேலைகள், சட்டைகள், கட்டில் விரிப்புகள், ஜன்னல் திரைகள் என்பவற்றை எடுத்துக் கொள்வோம். இவற்றிலிருந்து நாம் எங்கள் கற்பனைகளுக்கு வடிவம் கொடுக்கும் ஆடைகளைக் கண்டுபிடிப்போம்.

எங்களது இந்த விநோத விளையாட்டுக்களில் வருகிற பிரதான பாத்திரம் எனக்குக் கிடைத்துவிடும். இது எனது தலைமைத்துவத்துக்கு கிடைக்கிற பரிசு! உணவு சமைக்கின்ற விளையாட்டாக இருந்தால் நான் அதில் சமையலாளாக இருப்பேன். அது சின்ரெல்லா கதையாக அல்லது தும்பெலினா கதையாக இருந்தாலோ நான்தான் எல்லோராலும் சூழப்படுகிற அந்தக் கதைகளின் கதாநாயகிகளாக இருப்பேன்.

இந்த எல்லா விநோத விளையாட்டுக்களிலும் எனக்கு மிகவும் பிடித்த விளையாட்டு மணப்பெண் விளையாட்டுத்தான். இந்த விளையாட்டில் உள்ள விஷேசம் என்னவென்றால் எனக்குப் பிடித்தமான வேறு விளையாட்டுக்களில் உள்ள பல அம்சங்களையும் எப்படியாவது இதில் இணைத்துக் கொண்டு விடமுடியும். ஆரம்பத்தில் இந்த விளையாட்டு ஒரு

**தமிழில்:**
**எஸ்.கே.விக்னேஸ்வரன்**

சிலமணிநேர விளையாட்டாகத்தான் இருந்தது. ஆனால், போகப் போக இது ஒரு முழுநாள் விளையாட்டாக - பலவாரங்களுக்கு முன்பே திட்டமிட்டு வந்து விளையாடும் ஒரு விளையாட்டாக - மாறிப் போயிற்று. இதன் உன்னதமான கட்டமும் எனக்கு உச்சகட்ட சந்தோசத்தைத் தருவதுமான கட்டமுமாக அமைவது நான் மணப்பெண்ணின் சேலையை அணிகிற கட்டமாகும்.

பின்னேரத் தேனீருக்குப் பிறகு அநேகமாக இந்தக் கட்டம் ஆரம்பமாகும். அக்காமார் மச்சாள்மார் புடைசூழ நான் ஜானகியின் அறைக்குள் நுளைவேன். மறந்துபோகாமல் மிக ஜாக்கிரதையாக நான் எடுத்து வந்திருக்கும் என்னுடைய தூக்குப் பையைத் திறந்து பெறுமதி வாய்ந்த அந்த வெள்ளைச் சேலையை வெளியே எடுப்பேன். இந்தச் சேலை பழசாகிப் போனதால் மங்கி மஞ்சளுக்கு கிட்டவான ஒரு நிறத்தில் இருந்தது.

சேலையின் ஓரங்கள் ஆங்காங்கே கிழிந்தும் அதன் கரையில் தொங்கும் மணிகளில் சில உதிர்ந்தும் இருக்கும். இப்போது மணப்பெண்ணை அலங்கரிக்கும் வேலை ஆரம்பமாகும். ஜானகியின் ஆளளவு உயரமான வெடிப்போடிய கண்ணாடியின் முன் நான் நிற்க என்னைச் சுற்றி சேலை சுற்றப்படும். முகத்திற்கு முக்காடு போட்டு தலையில் ஊசி குத்தப்படும். கன்னங்கள் துண்டால் போர்த்தப்படும். இதழ்களுக்கு லிப்ஸ்டிக்... கண்களுக்கு மை.... நான் எனது எல்லாக் கட்டுக்களிலிருந்தும் விடுபட்ட.. மிகவும் அழகான, புத்திசாதுரியமான அன்றைய நாளும், இந்த என்னைச் சூழநிற்பவர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிற உலகமும் எனக்காகவே அர்ப்பணிக்கப்பட்டு விட்டதான பெருமிதம் பொங்க, அக்காமாரும் மச்சாள்மாரும் தலையில் பூக்களைச் சொரிய.. தாவணி தளைந்து புரள நடந்துவரும் ஒரு தேவதையாக.... நடந்து வருவேன். தமிழ் சிங்கள திரைப்படங்களில் வரும் பெண் தெங்வங்களைப் போல, நிஜ அளவினை விட பெரிதாக விசுவருபமெடுத்து நிற்பேன். முழு உலகத்தின் கண்களும் மொய்க்கின்ற இனிமையும் கனிவும், முழுமையும் பொருந்திய மாலினி பொன்சேகா, கீதா குமாரதுங்கக்கள் போன்ற ஒரு விக்கிரகமாக மாறி விடுவேன்.

இளமைக்காலத்தின் அப்பாவித்தனமாக எனது நினைவில் தோன்றும் இந்த நாட்கள் இன்றும் மனதில் மங்கல் வானத்தில் தோன்றும் வர்ணக் கோலங்களாக தெரிகின்றன. அந்த நாட்களோடு சம்பந்தப்பட்ட சகலதையும் இழந்துவிட்ட துயரம் இந்தச் சித்திரத்தை இன்னும் அதிக உணர்வெழுச்சிக்குரியதாக மாற்றிவிட்டு விடுகிறது. நாங்கள் எல்லோரும் சில காலங்களுக்குப் பிறகு நடந்த இனக் கலவரத்தின் காரணமாக இலங்கையை விட்டு வெளியேறி கனடாவில் புதிய வாழ்க்கையை உருவாக்கிக் கொண்டு விட்டோம்.

ஆயினும், எனக்கு ஏழுவயதாக இருந்த போதைய அந்த ஞாயிற்றுக்கிழமைகள் நான் மிகவும் நேசித்த அந்த உலகத்தில் இருந்து வெளியேற்றப்படுவதற்கான ஆரம்பங்களை இனங்காட்டுபவையாக இருந்திருக்கின்றன. பாதுகாப்பான துறைமுகமொன்றிலிருந்து பரந்த கடற்பரப்பை நோக்கிப் புறப்படுகின்ற ஒரு கப்பலைப் போல, இன்று மிகவும் அதிகமாக எதிர்பார்க்க்கூடியதாக இருக்கிற அந்தச் சம்பவங்கள் என்னை சிறுபராயம் என்கின்ற பாதுகாப்பான துறைமுகத்திலிருந்து நிச்சயமற்றதும் அபாய கரமானதுமான வளர்ந்தோர் உலகமென்ற கடலை நோக்கி எடுத்துச் சென்றன.

0 0 0

அப்பாச்சி வீட்டுக்கு போய் விளையாடுகிற இந்தச் சந்தோசங்களில் ஒரு மாற்றம் வந்து சேர்ந்தது! காந்தி அன்ரியும் சிறில் மாமாவும் அவர்களது மகள் தனுஜாவும் வெளிநாட்டிலிருந்து வந்ததோடு தான் இந்த மாற்றம் நிகழ்ந்தது. தனுஜாவைக் கண்டதும் நாங்கள் உடனடியாகவே அவளுக்கு ஒரு பட்டப்பேர் வைத்துவிட்டோம். கொஞ்சமும் இரக்கமில்லாமல் சிறுவர்களுக்கே உரிய வெளிப்படையான இயல்புடன் அவளை "தொக்கையம்மா" என்று கூப்பிடத் தொடங்கினோம்.

தொடக்கத்தில், புதிதாக வந்த தனுஜா எங்களுடன் இருப்பதால் எங்களுக்கு பிரச்சினைகள் எதுவும் இருக்கவில்லை. தான் அவள் புதிதாக வந்தவள் என்ற முறையில் விளையாட்டில் கீழ்மட்டத்திலிருந்து வரவேண்டும் என்பதை அவள் விருப்பத்துடன் ஒப்புக் கொள்ளவும் செய்தாள்.


மணப்பெண் விளையாட்டில் மிகவும் முக்கியமற்ற, மதகுருவையும், வேலைக்காரர்களையும் (Page boys) விட முக்கியத்துவம் குறைந்த பாத்திரம் தான் மாப்பிள்ளைப் பாத்திரம். எங்களைப் பொறுத்தவரை அது ஒரு அலுப்பூட்டுகிற, வெறும் இறுக்கமாக நிற்கிற, யாரையும் கவராத ஒரு பாத்திரம். உண்மையில் அந்தப் பாத்திரத்தை நாங்கள் விளையாட்டிலிருந்து நீக்கியே இருப்போம்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக கலியாண சடங்கில் அதுவும் ஒரு பாத்திரமாக இருந்து தொலைத்தது. இவ்வளவு காலமும் எனது தங்கச்சி சோனாலி தான் அந்தப் பாத்திரத்தைச் செய்து வந்தாள். அவளது அமைதியான நல்ல குணத்தாலும், நான் வேறு யாரையாவது அந்தப் பாத்திரத்தை ஏற்கச் சொன்னால் அங்கே ஒரு எதிர்க்கலகம் எனக்கெதிராக உருவாகும் என்பதைப் புரிந்து கொண்டதாலும் அவள் ஒரு நீண்ட காற்சட்டையும், அப்பாச்சியின் உடுப்புப் பெட்டியில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு கிழிந்த ஜக்கற்றையும் அணிந்து கொண்டு இந்தப் பாத்திரத்தைச் செய்து வந்தாள்.

இப்போது 'தொக்கையம்மா' புதிதாக வந்ததால் அவளை அந்தப் பாத்திரத்தைச் செய்யவிட்டுவிட்டு சோனாலி ஒரு படுக்கைவிரிப்பை சேலையைப் போல உடுத்திக் கொண்டும் தேமாப் பூக்களை தனது கூந்தலில் சூடிக்கொண்டும் மற்றைய 'பெம்பிளைத்தோழி'களுடன் இணைந்து கொள்வதே சரியென்று தோன்றியது.

இப்படிப் பொழுதைக் கழிக்கிற இரண்டு ஞாயிற்றுக்கிழமைகள் இந்த ஒழுங்கு முறைக்கு எந்த முணுமுணுப்புமில்லாமல் அநாவசியமான குழப்பங்கள் எதுவும் இல்லாமல் ஒரு சிறிய பாத்திரத்தை ஏற்றுச் செய்பவருடைய செய் நேர்த்தியுடன் அவள் பங்கு பற்றினாள். ஆனால், மூன்றாவது சந்திப்பு நாளான ஞாயிறு வந்ததும் நிலைமை எல்லாமே மாறிப் போயிற்று. அந்த நாள் எங்கள் அம்மாச்சியின் பிறந்த நாளாக இருந்ததால், வழமைபோல எங்களை விட்டுவிட்டு போகும் அப்பா அம்மாமார் மாமா மாமியவை எல்லோருமே மதிய உணவுக்காக தங்கிவிட்டுப் போக முடிவு செய்திருந்தார்கள். அவர்களது உரையாடலில் ஏதோ ஒரு கவலையான விடயம் பேசப்படுவதாக தோன்றியது.

மணப்பெண் விளையாட்டில் மிகவும் முக்கியமற்ற, மதகுருவையும், வேலைக்காரர்களையும் (Page boys) விட முக்கியத்துவம் குறைந்த பாத்திரம் தான் மாப்பிள்ளைப் பாத்திரம். எங்களைப் பொறுத்தவரை அது ஒரு அலுப்பூட்டுகிற, வெறும் இறுக்கமாக நிற்கிற, யாரையும் கவராத ஒரு பாத்திரம். உண்மையில் அந்தப் பாத்திரத்தை நாங்கள் விளையாட்டிலிருந்து நீக்கியே இருப்போம். ஆனால், துரதிர்ஷ்டவசமாக கலியாண சடங்கில் அதுவும் ஒரு பாத்திரமாக இருந்து தொலைத்தது.



**வரும்**

– வலம்புரி

# புதிய அடிமைச் சங்கிலிகள்: சூழலியல் ஏகாதிபத்தியம்

ஏகாதிபத்தியம் என்ற பதம் அரசியல் சூழலில் மிகவும் பரிச்சயமானது. ஆனால் சூழலியல் ஏகாதிபத்தியம் அதிகம் பரிச்சயமான விடயமல்ல. தோலிருக்கச் சுளை விழுங்கும் சூழலியல் ஏகாதிபத்தியம் பற்றிய விழிப்புணர்வு மிகவும் அவசியமானதாகும். ஏனெனில் பூகோளமயவாதம் என்ற போர்வையுள் பல்தேசிய நிறுவனங்கள் நடத்துகின்ற வியாபாரம் ஒரு அழித்தொழிப்பு யுத்தமாகவே கண்ணுக்குப் புலனாகாமல் நடந்து கொண்டிருக்கிறது.

காலனித்துவ ஆக்கிரமிப்பாளர்களால் எவ்வாறு காலனியப்பட்ட நாடுகளின் பௌதிகச் சூழல் மாற்றங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றது என்பதை விபரிப்பதாக சூழலியல் ஏகாதிபத்தியம் என்ற பதம் அர்த்தம் கொள்ளப்படுகிறது. இப்பதம் முதன் முதலில் அல்பிறெட் டபிள்யு. குறொஸ்பி (Alfred W. Crosbey) என்பவரால் பயன்படுத்தப் பட்டிருக்கின்றது.

ஏகாதிபத்தியம், காலனியப்பட்ட நாடுகளின் சமூக, அரசியல், பண்பாட்டுக் கட்டமைப்புக்களை மாத்திரம் மாற்றியமைக்கவில்லை அந்நாடுகளின் சூழலியலையும் சிதைவுக்குள்ளாக்கியது. பாரம்பரியமான வாழ்வியல் வளங்களையும் சிதைவுக்குள்ளாக்கியது.

ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தின் வெற்றிக்குக் காரணமாக உயிரியல் மற்றும் சூழலியல் அம்சங்கள் அடிப்படைகளாக இருந்ததை குறொஸ்பி கவனத்திற்குக் கொண்டு வருகின்றார். தான் வாழும் சூழலைப் பற்றிய விழிப்புணர்வு கொண்ட எவரும் இதனைத் தெளிவாகக் கண்டு கொள்ள முடியும். எங்களது சூழல் சார்ந்து இவை பற்றிய சிந்தனைகளும், செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுவது அவசியமானதாகும்.

ஏகாதிபத்தியத்தால் உலகின் ஏனைய பகுதிகளுக்குப் பரவவிடப்படும் ஐரோப்பிய நோய்களால் அப் பகுதிகளில் வாழும் மக்களைப் பலங் குன்றச் செய்வதன் மூலமாக, ஏகாதிபத்தியவாதிகளது இராணுவ, தொழினுட்ப ரீதியான வெற்றிகளுக்கான வாசல்கள் திறக்கப்படுகின்றன. ஏகாதிபத்தியவாதிகளால் அறிமுகப்படுத்தப்படும் தாவரங்கள், விலங்குகள் என்பவை ஏகாதிபத்தியவாதிகளுக்கோ அல்லது அவர்களது இராணுவ நலன்களுக்கோ ஆதாரமாக இருப்பது மாத்திரமலல்லாமல், காலனியப்படுத்திய நாடுகளில், சூழலியல் மாற்றத்தையும் ஏற்படுத்துகின்றது.

இம் மாற்றம் அத்தேச மக்களுக்குப் பாதகமாக அமைவதுடன் அவர்களது பண்பாடுகளை, அவர்களது வாழ்வியலைப் பேணியிருக்கும் தாவர, விலங்குச் சூழல்களையும் நாசப்படுத்திவிடுகின்றது.

காலனியப்பட்ட நாடுகளது பயிர்ச்செய்கைகளை மாற்றியமைத்து, காலனித்துவ நாடுகள் தமக்குத் தேவையானவற்றை அறிமுகம் செய்து விடுகின்றன. இதன் மூலமாக காலனியப்பட்ட நாடுகளது சூழல் சார்ந்த இயக்கம் தடுக்கப்பட்டு, காலனித்துவ நாட்டினை மையமாகக் கொண்டு, அந்நாட்டின் தேவைக்கேற்ப இயங்க வைக்கப்படுகிறது. இன்றைய உலகம் எதிர்கொள்கின்ற மிகப் பெரிய சூழல் மாற்றம் இதுவாகும்.

காலனியப்பட்ட நாடுகள் தமது பாரம்பரியச் சுழற்சிமுறைப் பயிர்ச் செய்கைகளில் இருந்து தடுக்கப்பட்டு, காலனித்துவ நாடுகளுக்கு பொருளாதார வளஞ்சேர்க்கும் பணப் பயிர்ச் செய்கைகளை மீண்டும் மீண்டும் மேற்கொள்ள அழுத்தம் கொடுக்கப்படுவதற்கும், மேற்படி நாடுகள் எதிர்கொள்ளும் பஞ்சம், பட்டினிச் சாவுகளுக்குமுள்ள நேரடித் தொடர்பும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

ஏன் ஒரு பகுதி நாடுகள் எப்போதும் பஞ்சத்தையும், பட்டினிச் சாவுகளையும் எதிர்கொள்பவைகளாகவும், மற்றொரு பகுதி நாடுகள் நிவாரணம் வழங்குபவைகளாகவும் இருந்து கொண்டிருக்கின்றன என்று சற்றுச் சிந்திக்கத் தொடங்கினால், பிரச்சினைகளை அடையாளம் காணும் கதவுகள் திறக்கத் தொடங்குகின்றன.

ஒட்டுப் போடப்பட்ட அல்லது மெருகிடப்பட்ட காலனித்துவக் கல்வி முறைமையுள் இத்தகைய பார்வைகளுக்கான சாத்தியப்பாடுகள் எந்தளவிற்கு இருக்க முடியும்? நடைபெறுகின்ற ஆய்வுகளுள், எழுதப்படுகின்ற ஆய்வுக் கட்டுரைகளுள், அவற்றை மேற்கொள்ள கையாளப்படுகின்ற ஆய்வு முறைமைகள் பற்றிய மறுமதிப்பீடுகள் இதனை நன்கு புலப்படுத்தும். இவை பற்றிய உக்கிரமான விவாதங்கள் இன்றைய காலத்தின் அவசியத் தேவையாகும்.

சூழலியல் ஏகாதிபத்தியம் குறைத்து மதிப்பிடக்கூடிய விடயமல்ல. அது நவகாலனித்துவச் சூழலில் தன்னை நன்கு விசாலித்து நிலை நிறுத்தித் கொண்டு வருகின்றது. "மூன்றாம் உலக" அல்லது "அபிவிருத்தி அடைந்து வருகின்ற" நாடுகளது தாவர, விலங்கு உயிரினங்கள் மீதான மேற்குலக நிறுவனங்களின் உரிமைகோரல்கள் இதற்கு மிகச் சிறந்த உதாரணங்களாகும்.

சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பற்றிய மேற்குலக முன்வைப்புகளுக்குப் பின்னாலுள்ள ஏகாதிபத்திய அரசியல் பற்றியும் கடும் விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. இயற்கைச் சூழல் பற்றிய மேற்குலகு கடைப்பிடிக்கும் கொள்கைகளும், ஏனைய நாடுகள் மீது குறிப்பாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் மீது நிர்ப்பந்திக்கும் கொள்கைகளும் கட்டுப்படுத்தும் நோக்கில் அமைந்தவையே. இவற்றின் மூலமாகத் தொடர்ந்தும் தமக்குச் சாதகமான சூழ்நிலையை வைத்திருக்க அந்நாடுகள் விளைகின்றன. ஐ.நா.வினதும், யுனஸ்கோவினதும் பல தீர்மானங்களும் விமரிசனங்களுக்கு உட்பட்டு வருவதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதாகிறது.

நவகாலனித்துவச் சூழலியல் ஏகாதிபத்தியம், கல்வி, தொடர்பு சாதனம், தகவல் தொழில்நுட்பம், சூழலியல், ஆங்கில மொழி எனப் பல்வேறு வடிவங்களில் தனது பொல்லாச் சிறகினை விரித்துக் கொண்டிருக்கிறது. "புதிய உலக ஒழுங்கு", "பூகோளமயவாதம்" என்ற மாயப் பெயர்களையும் சூடிக் கொண்டிருக்கிறது.

## நினைவுக் குறிப்புகள் – 10


# 'கிளாசைக் கழுவிவிட்டுக் குடி!' என்றார் டொறிக்

அவர் இவ்வாறு மௌனமாக இருந்ததற்கு காரணம் இருந்திருக்க வேண்டும் என்று எனக்கு அப்போது தெரியாது. இன்றுள்ளது போன்ற ஒரு நிலைமை வரலாம் என்பதற்காக, திட்டமிட்டுத்தான் டொறிக் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தார் என்பது எனக்கு தெரிந்திருக்கவில்லை.

அடுத்த ஆண்டில், அதாவது 1942இல் டொறிக் கட்சிக்குள் வந்த கொந்தளிப்பான சம்பவங்களின் போது ஒரு புயலின் மையமாக இருந்தவர் என்பதால், அன்று நான் நேரில் கண்ட அவரது ஆளுமை தொடர்பான சில பதிவுகளை இவ்விடத்தில் குறிப்பிடுவது அவசியம் என்று நினைக்கின்றேன். இந்தப் பதிவுகள் ஒரு பல்கலைக் கழக ஆசிரியராக அவர் இருந்த காலத்தில் எனக்கிருந்த தொடர்பு காரணமாக உருவானவை. அவர் பற்றிய எனது முதலாவது உணர்வு அவரது தெளிவும் புலமைத்துவத்தின் சக்தியும் பற்றியதாகும். அவரது பீடத்தில் உள்ளவர்களுள் அவர் ஒரு மிகச் சிறந்த விரிவுரையாளர் என்று எனக்கு தோன்றியதாக நான் நினைக்கவில்லை. அந்த விதத்தில் நான் எந்தத் தயக்கமும் இல்லாமல், வைன் லுட்வைக்கைக் குறிப்பிடுவேன். ஆனால் அவர்களது சிந்தனையின் தெளிவுக்கு அப்பால் அவர்கள் இருவரையும் இரு துருவங்கள் என்று சொல்லலாம். லுட்வைக்குக்குச் சார்பான கருத்தைக் கொண்டிராத அல்லது அவரது பேச்சை கிரகித்துக் கொள்ள முடியாத ஒருவர் அவர் தனது கருத்துக்களை அடித்துச் சொல்வதற்குப் பதில் சூசகமாகத் தெரிவிப்பதை வைத்து குழம்பிய ஒருவர் என்று நினைக்கக் கூடும். அனேகமாக ஒரு கையசைவு அல்லது ஒரு தோள் குலுக்கலுடன் அவர் முடித்து விடுவார். அதிகமாக வசனங்கள் பாவிக்காமலே இவற்றின் மூலம் அவர் தனது கருத்தை வெளிப்படுத்திவிடுவார். ஆனால், அவர் கவிதை பற்றிப் பேசும் போது பார்க்கவேண்டும். அவரது உள்ளத்தின் அடியாழத்திலிருந்து வரும் வார்த்தைகளின் அழகுக்கும் ஆழத்துக்கும், உணர்வுக்கும் அந்தக்காலத்தில் எனக்கு கற்பித்த வேறெந்த விரிவுரையாளரையும் கிட்டக்கூட வரமுடியாது. மறுபுறத்தில் டொறிக்கின் பலம், மிகவும் அவசியமான ஒரு விடயத்தை தெளிவாகவும் விளக்கமாகவும் ஆய்வு ரீதியான பண்புடனும் அவர் விளக்கும் விதத்தில் இருந்தது. மொழியியல் மற்றும் குறிப்பிட்ட கால இலக்கியத்தின் ஆட்சிபெற்ற கருத்துக்கள் என்பன பற்றி அவர் விளக்குவது மிகவும் தெளிவாக உள்வாங்கக் கூடியதாகவும், கோட்பாட்டு வடிவம் ஒன்றை உருவாக்கிக் கொள்ள வாய்ப்பளிப்பதாகவும் அமைந்திருக்கும்.

இதைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் எனக்கு டொறிக்குடன் ஏற்பட்ட புதிய தொடர்பு காரணமாக, அரசியல் கருத்துகட்கும் அரசியல் அமைப்புக்கும் தனது புலமைத்துவ தெளிவையும் அதே ஊக்க சக்தியையும் கொண்டு வந்தவர் அவர் என்று கண்டுகொண்டேன். இது, அவரது விரிவுரை மண்டபத்தில் அவருடன் சேர்ந்து செயற்பட என்னைத் தூண்டுவதாக அமைந்தது.

கருத்துக்களை மிகவும் இலகுவாகவும் அதேவேளை மிகவும் ஆணித்தரமாகவும் வெளிப்படுத்தும் அவரது ஆற்றல் வெறுமனே தத்துவார்த்தக் கருத்தாடல்களுடன் மட்டுப்பட்டுவிடவில்லை. அவர் அதேவேளை (ஆங்கிலத்தில் தான் என்றாலும்) ஒரு சிறந்த துண்டுப்பிரசுர எழுத்தாளராகவும் விளங்கினார். ஒருநாள் அவர் தனது வீட்டில் 'சுவிஃப்ற்' றின் 'ட்றப்பியர் கடிதங்கள்' என்ற பிரசுரத்தை




தலைமறைவு வாழ்க்கை
றெஜி சிறிவர்த்தன

ஒரு கிளர்ச்சிப் பிரசுரத்தை தயாரிப்பதற்காகப் படித்துக் கொண்டிருந்ததைக் கண்டேன். சுருக்கமாகவும், தெளிவாகவும் சக்திவாய்ந்தவையாகவும் இருப்பதை ஒரு பொதுவான அம்சமாக அவரது எழுத்துக்களில் காணலாம்.

டொறிக் ஒரு கட்சி உறுப்பினரகவும், தலைமறைவு காலத்தின் சக ஊழியராகவும் பழகும்போது நான் அவதானித்த அவரது புலமைத்துவ தடைகளிலிருந்து விடுபட்ட போக்கும், வணக்கத்துக்குரிய மாக்சிய விக்கிரகங்களைக்கூட விமர்சிக்கும் தன்மையும் எனக்கு மிகவும் பிடித்துக் கொண்டன. ருஷியப் புரட்சிக்குப் பிந்திய ஆரம்ப நாட்களில், சில ஜேர்மனிய இளம் கம்யூனிஸ்டுக்கள் 'கட்டற்ற காதல்' என்ற கருத்தை பரவலாக்கி வந்தார்கள். லெனின் இந்த நடவடிக்கையால் பெரிதும் அதிர்ச்சியடைந்திருந்தார். ஜேர்மன் கம்யூனிட்டான கிளாரா ஷேட்கினுடன் இது பற்றிப் பேசும் போது 'ஒருமனிதன் இன்னொருவன் குடித்த கிளாசில் தான் தண்ணீர் குடிக்க விரும்புவானா? என்று கேட்டிருந்தார். இதை மேற்கோள்காட்டி டொறிக் ஒரு முறை என்னிடம் கூறினார். 'லெனின் என்ன மாதிரி விளக்கமில்லாமல் இதைச் சொல்லியிருக்கிறார்! நிச்சயமாக இந்தக் கேள்விக்குள்ள ஒரே பதில் 'கிளாசைக் கழுவி விட்டுக் குடி' என்பது தானே! அப்போதெல்லாம் எனக்கோ டொறிக்குக்கோ, இப்போது பிரசித்தமாகிவிட்ட லெனினுக்கு இனேசா ஆர்மன்டுடன் நீண்டகாலமாக இருந்து வந்த, திருமணத்திற்குப் புறம்பான உறவு பற்றித் தெரிந்திருக்கவில்லை. உண்மையில் ஷேட்கினுக்கு அவர் தெரிவித்த கருத்தில் வெறும் விளக்கமின்மை மட்டுமல்ல, ஒரு இரட்டைத்தன்மையும் இருந்திருக்கிறது.

டொறிக்குக்கு பெருமை சேர்க்கின்ற இன்னொரு விடயத்தையும் நான் சொல்ல வேண்டும். அவரது பார்வையில் அவர் எப்போதும் ஒரு மதச் சார்பற்ற ஒருவராகவே இருந்து வந்தார். அவரது காலத்து மற்ற சமசமாஜக் கட்சித் தலைவர்கள் பின்னாளில் பாரம்பரிய நிறுவனமயமாக்கப்பட்ட மதத்துடன் சமரசம் செய்து கொண்டார்கள். ஒன்றில் இது அவர்களது அரசியல்

⇨19

நன்றி - நூலகத்திட்டம்



## உரத்துக் கூறிப்பு

**- மு.பொ**

# ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை

பிரபல பத்திரிகையாளர் எஸ்.எம்.கோபாலரத்தினம் அவர்களின், யாழ்ப்பாணத்தில் இந்திய அமைதிப்படையால் தான் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்த அனுபவங்களைக் கூறும் 'ஈழமண்ணில் ஓர் இந்தியச் சிறை' என்ற நூலைப் படித்த போது எனக்குள் கிளறப்பட்ட சிந்தனை ஓட்டங்கள் பல.

இலங்கையில் சுதந்திரத்திற்கான ஆங்கிலேயருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்த டொக்டர் என்.எம்.பெரேரா போன்ற இடதுசாரிப் புத்திஜீவிகள் தாம் ஆங்கிலேயரால் கைது செய்யப்படுவதிலிருந்து தப்புவதற்காக இந்தியாவில் தஞ்சம் புகுந்த காலங்கள் ஒன்று இருந்ததையும், இன்று அதே இந்தியாவே இலங்கையில் அமைதிகாக்கவெனப் புகுந்து அதன் புத்திஜீவிகளை அதே மண்ணில் சிறைப்படுத்திய நெறிப்பிறழ்வையும் காலமாற்றங்களையும் நினைக்க வியப்பாகவே இருக்கிறது.




இருந்தாலும் வரலாறு தன்னை வெவ்வேறு தளங்களில் வெவ்வேறு சூழல்களில் ஒருவித முரண்நகையோடு திருப்பிக் காட்டிக் கொள்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேணுமா?

கோபுவின் நூல் மூலம் பல விஷயங்களை நாம் அறிந்து கொள்கிறோம். இன்னும் கோபுவுக்கு நடந்தது போல எமக்கு நேர்ந்த பல விஷயங்களை நாம் ஞாபகப்படுத்திக் கொள்கிறோம். அடக்கமின்மையாலும் தேவையற்ற தலையீடுகளாலும் எவ்வாறு பல துன்பங்கைளயும் தொந்தரவுகளையும் ஒருவன் தனக்கும் பிறருக்கும் ஏற்படுத்திக் கொள்கிறான் என்பதையும், பிறருக்குத் தீங்கற்ற உண்மை பேசுவதால் எவ்வாறு எவருக்கும் தீங்கில்லாது தன்னையும் பிறரையும் காப்பாற்றிக் கொள்ளலாம் என்பதையும் இந்நூலில் கூறப்படும் நிகழ்ச்சிகள் எமக்கு கோடிகாட்டுகின்றன. முன்னதற்கு உதாரணமாக ஈழமுரசில் கோபு-வோடு வேலை செய்த விஜயநாத-னின் நடத்தையையும் பின்னதற்கு உதாரணமாக இந்நூலின் ஆசிரியரான கோபுவின் நடத்தையையும் காட்டலாம்.

இந்நூலில் ஆசிரியர் இந்திய அமைதிப்படை யாழ் நகருக்குள் புகுந்த போது, அது யாழ் பெரியாஸ்பத்திரியுள் புகுந்து செய்த மிருகத்தனமான செயல்கள் பற்றிக் குறிப்பிடுவது எவரையும் கலங்க வைக்கும். அதுபற்றி அவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

'இராணுவம் ஒரு ஆஸ்பத்திரி ஊழியர் இருமிய சத்தம் கேட்ட ஒரு இந்திய ராணுவச் சிப்பாய் ஒரு எறிகுண்டை வீசி அந்த ஊழியரையும் அவருடன் கிடந்த மற்றும் பலரையும் கொன்றார்.

'ஆஸ்பத்திரியில் சிக்கிக் கொண்ட குழந்தைகளையும் புதிதாகப் பிறந்த குழந்தைகளையும் காப்பாற்றுவதற்கு நெருக்கடியிலும் முன்வந்த குழந்தை வைத்திய நிபுணர் டொக்டர் சிவபாதசுந்தரத்தை அவர் டொக்டர் என்று சொல்லியும் அவருடன் மூன்று நேர்சுகள் வந்த போதிலும் ஈவிரக்கமில்லாமல் இந்திய இராணுவத்தினர் மிகக் கிட்டத்தில் வைத்துச் சுட்டுக் கொன்றார்கள். நேர்சுகளை டொக்டர் தள்ளி விட்டபடியால் அவர்கள் காயங்களுடன் தப்பிப் பிழைத்தனர்."

இப்படியெல்லாம் மனிதாபிமானம் சிறிதுமே இல்லாமல் நடந்து கொள்ளும் என்று எவருமே எதிர்பார்த்ததில்லை. சடலங்களுடன் சடலமாகக் கிடந்த

இவை மிகக் கொடூரமான செயல்களே. மேற்படி விபரணையைப் படித்த போது நானும் இதே காலத்தில் இதே ஆஸ்பத்திரியில் நோயுற்றுக் கிடந்த அனுபவங்கள் - எனது நோயில் இருத்தலில் இது பற்றிக் குறிப்பிட்டுள்ளேன் - என் நினைவில் ஓடின. நான் இந்த ஆபத்துக்குள் வீழாமல் தப்பிய விதம் இன்னும் எனக்கு மயிர் கூச்செறியச் செய்யும் நிகழ்வாகவே உள்ளது. மேலும் 1991 இல் இலங்கை ராணுவம் தீவுப்பகுதிகளுக்குள் புகுந்த போது எஞ்சியிருந்த எம் போன்ற 600 பேருக்கு கோபு அவர்கள் குறிப்பிட்ட ஒரு வகை சிறை வாசமே சித்தித்தது எனலாம். அதனால் தான் நான் "கைது செய்யப்பட்ட கிராமம்" என்றும் "விடுவிக்கப்பட்ட வலயத்தின் பாடல் " என்று ஓர் உண்மைக் கதையும் ஒரு தெருப் பாடலும் எழுதினேன்.

கோபுவும் அவரது சகாக்களும் சிறைப்பட்டிருந்த போது அவரையும் அவரது சகாக்களையும் வெளியே எடுக்க நடைபெற்ற முயற்சிகளில் பங்குபற்றிய இருவரின் பெயர்களை வாசித்த போது எனக்கு மீண்டும் துயரமே ஏற்பட்டது. முதலாவது நபர் குகமூர்த்தி. இரண்டாவது நபர் சற்றடே றிவியூ ஆசிரியராக இருந்த காமினி நவரத்னா. காமினி நவரத்னா நோய்வாய்ப்பட்டு இறந்து போனார். அடுத்தவருக்கு என்ன நடந்ததென்றே தெரியாமல் காணாமல் போய்விட்டார்.

இருவரோடும் நேரடியான பரிச்சயம் இருப்பதால் அவர்கள் பற்றிய நினைவூட்டல் எனக்கு துயரமாகவே இருந்தது. இருவரும் பொதுநல வேலைகளில் சளைக்காதவர் என்பதை அவர்களை அறிந்தவர்கள் அறிவர். இந்நூல் மூலமும் அதையே அறிகிறோம்.

இந்நூல் ஆசிரியரின் கூற்றுப்படி எப்பவோ வந்திருக்க வேண்டும். ஆனால் ஆரம்பத்தில் இந்நூலை வெளியிடுவதாக வாக்குக் கொடுத்தவர்கள், காலை வாரி விட்டதால் இந்நூல் கைப்பிரதிகளுக்கு நேர்ந்த கதி ஒருதனிக்கதையாகவே சொல்லப்பட்டிருக்கிறது.

இந்நூலின் முக்கிய அம்சம், இந்நூலைப் படிக்கத் தொடங்கிய எவரும் அதை முடிக்காமல் கீழே வைக்கப்போவதில்லை. இன்றைக்கு படிக்க வேண்டிய முக்கிய நூல் இது என்றால் மிகையாகாது.


**ஈழ மண்ணில்**
**ஓர் இந்தியச் சிறை**
எஸ்.எம்.கோபாலரத்தினம்
வெளியீடு : வேல்ட் வொய்ஸ் பப்ளிகேசன்
இல: 7, எல்லை விதி தெற்கு
மட்டக்களப்பு
விலை : ரூபா 150.00

# வருகைகள்

**இலங்கைத் தமிழர் - யார், எவர்?**
கட்டுரைத் தொகுதி

**ஆசிரியர்**
கார்த்திகேசு சிவத்தம்பி

வெளியீடு:
கொழும்புத் தமிழ்ச் சங்கம்
இல: 7, 57 வது ஒழுங்கை,
கொழும்பு – 06
விலை: 50.00







**ஞானம்**
சஞ்சிகை

**ஆசிரியர்**
தி.ஞானசேகரன்

தொடர்புகளுக்கு
தி.ஞானசேகரன்
இல: 19/7, பேராதனை வீதி
கண்டி
விலை: 15.00

**இன்னமும் வாழ்வேன்**
கவிதைத் தொகுதி

**ஆசிரியர்**
மாவை வரோதயன்

வெளியீடு:
தேசிய கலை இலக்கியப் பேரவை
விநியோகம்
சவுத் ஏசியன் புக்ஸ்
வசந்தம் பிரைவேட் லிமிட்டெட்
எஸ் 44, 3வது மாடி,
கொழும்பு மத்திய கூட்டுச் சந்தை தொகுதி,
கொழும்பு – 11
விலை 85.00







**போது**
சஞ்சிகை


**ஆசிரியர்**
வாகரைவாணன்

தொடர்புகட்கு
இல: 1, மேல்மாடி வீதி
மட்டக்களப்பு
விலை: 10.00

**இலக்கியத் தேட்டம்:**
**ஈழத்து நவீன இலக்கியம்**
கட்டுரைத் தொகுதி

**ஆசிரியர்**
செல்லையா யோகராசா

வெளியீடு:
கொழும்புத் தமிழ்ச் சங்கம்
இல: 7, 57 வது ஒழுங்கை,
கொழும்பு – 06
விலை: 75.00



நன்றி - நூலகத்திட்டம்



# சொன்னவரிடம் சொல்லுங்கள்

கடந்த சரிநிகர் 211 இதழில் வெளி வந்த விவேகியின் 'திருமலையிலிருந்து கோபி அன்னானுக்கு ஒரு கடிதம் ' எனும் கட்டுரை-யைப் படித்தவர்கள் விவேகி எந்தப் புலவர் ரகத்தில் சேருவார் என்பதை தெளிவாகத் தீர்மானிப்பார்கள்.

அரசியலில் அனாதையான திருகோண-மலை மக்கள் ஏதோ நாமாகவே ஒன்றிணைந்து (ஏறக்குறைய 25ஆயிரம் பேர்) அரசின் அனர்த்தங்களை பட்டியல் படுத்தி அதை மகஜராக்கி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் செயலர் கோபி அன்னானுக்கு அண்மையில் அனுப்பியிருந்தோம்.

இம் மகஜரில் முக்கிய கருப் பொருளாக பண்டாரவளை (பிந்துனுவெவ) அனர்த்தம் அடங்கியிருந்தது. அதே தன்மையான வேறு சில சிறைகளில் நடந்த படுகொலைச் சம்ப-வங்களும் சேர்க்கப்பட்டிருந்தன. அதில் ஏறக்-குறைய எட்டுச் சம்பவங்கள் சேர்க்கப்பட-வில்லையென குற்றம் கண்டுள்ளார் மேற்படி கட்டரையாளர்.

முழுப்படியாகச் சம்பவங்களைத் தொகுப்பதானால் 1957ஆம் ஆண்டிலிருந்து தொடங்கினால் தான் ஓரளவு இயலும். எங்களுடைய நோக்கம் இம் மகஜரில் அதுவாக இருக்கவில்லை. ஒன்றுமில்லாததை விட ஏதாவது செய்துள்ளீர்களே என்பதை உணராது குற்றம் காண விழைந்தது நல்ல-வற்றை இனம் காண முடியாத்தன்மையை வெளிக்காட்டுவதாய் அமைந்துள்ளது.

'இதையாவது செய்தீர்களேயென' பெருந் தன்மையோடு நோக்கி, மேலும் இது போன்ற பணிகளுக்கு உற்சாகம் வழங்கலே தற்போது தேவைப்படும் ஒன்றாகுமே தவிர, வைக்கல் பட்டறைக் காவல் தன்மையல்ல.

இப்போது நாங்கள் கேட்பது இது தான்.

'பிச்சை வேண்டாம் நாயைப் பிடியுங்கள்'. அதாவது எம்மை உற்சாகப்படுத்தாவிட்டாலும் பரவாயில்லை, உபத்திரவப் படுத்தாதிருந்தாலே போதும்.

விவேகி அவர்களே, மகஜரைப் படித்துப் பார்த்த உங்கள் நண்பரிடம் கூறுங்கள்!

இன்னமும் காலம் கடக்கவில்லை. எமது மகஜரில் விடுபட்ட அந்த விடயங்கள் அனைத்-தையும் புதிதாகத் தொகுத்து திருகோணமலை மக்களிடம் கையெழுத்துக்கள் பெற்று செயலர் கோபி அன்னானுக்கு அனுப்பி வைக்கும்படி கோருங்கள்.

திருமலையிலிருந்து 100 கையொப்-பங்களுடன் வந்த கடிதம் இது.

# பாடசாலை மாணவர்கட்கான சிறுகதை, கவிதைப் போட்டி

பாடசாலை மாணவர்களின் படைப்பிலக்கிய ஆளுமைகளை ஊக்குவிக்கும் நோக்குடன் சரிநிகர் பத்தாவது ஆண்டு நிறைவை ஒட்டி நாடளாவிய ரிதியில் நடாத்தப்படும் சிறுகதை, கவிதைப் போட்டிகள்.

முதற்பரிசு ரூபா 1500
இரண்டாம் பரிசு 1000
மூன்றாம் பரிசு 500

போட்டி விதிகள்:

1. ஆக்கங்கள் பாடசாலை மாணவர்களின் சொந்த ஆக்கமாக, இதற்கு முன் எங்கும் வெளியிடப்படாததாக இருக்க வேண்டும்.

2. ஆக்கங்கள் பாடசாலை அதிபர் அல்லது வகுப்பாசிரியரால் உறுதி செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

3. கதைகள் புல்ஸ்காப் தாளில் ஒரு பக்கத்தில் ஆறு பக்கங்களுக்கு மேற்படாமலும் கவிதைகள் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமலும் அமைய வேண்டும்.

4. போட்டி முடிவுத் திகதி டிசம்பர் 15,2000

5. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

6. அனுப்பப்படும் படைப்புகளில் பெயர் எழுதப்படாமல், தனியான தாளில் பெயர் விபரம் எழுதி அனுப்பப்பட வேண்டும்.

படைப்புகள் அனுப்பப்பட வேண்டிய முகவரி

ஆசிரியர்
சரிநிகர்
19/04. 01/01 நாவல வீதி.
நுகேகொடை.

# ஒரு வேண்டுகோள்!

தமிழ் மக்களின் மீதான ஒடுக்கு-முறைக்கு என்ன தான் தீர்வு வரப் போகிறது என்ற கேள்வி எல்லோர் மனங்களிலும் கொழுந்து விட்டு எரியும் கேள்வியாய் உள்ளது. இலங்கைத் தீவு முழுவதும் ஏதோ ஒரு காரணத்தால் மரணங்கள் மலிந்ததாய் மாறிக் கொண்டிருக்கிறது. நாளுக்கு நாள் கைதுகள், பாலியல் வல்லுறவுகள், கொடுரக் கொலைகள், என எமது வாழ்க்கை மிகுந்த நெருக்கடிக்கு உட்பட்டு விட்டது. அதன் முடிவு தான் என்ன?

தங்கள் பத்திரிகையின் நீண்டகால வாசகனான நான் ஈழமோகத்தின் இடித்து-ரைக்கும் கவிதை தொடங்கி சிவராம், சிசைரோ, நாசமறுப்பான் என ஒன்றும் விடாமல் வாசித்து வருபவன். அந்த வகையில் உங்கள் பத்திரிகையின் ஒவ்வொரு வெளியீட்டிலும் நடந்து முடிந்து ஒரு மாதம் ஆகப்போகும் பிந்துனுவெவ படுகொலைச் செய்தியையும் அதனோடு தொடர்பான கைதுகள் சம்பந்தமான செய்திகளையும் வாசித்து மனதினுள்ளேயே அழுத பல தமிழர்களில் நானும் ஒருவன்.

பிந்துனுவெவ படுகொலையின் ஒரு மாதம் முடிய அதன் பின் வரும் ஒவ்வொரு சரிநிகரிலும் முன் பக்கத்தில், நீங்கள் எவ்வாறு பத்திரிகைச் செய்தித் தணிக்கையின் நாள் எண்ணிக்கையை வெளியிட்டீர்களோ அது போல மீண்டும் ஒரு குறியீட்டையோ அல்லது ஒரு வாசகத்தையோ இறந்த அந்த இளம் ஆத்மாக்களுக்காக தொடர்ந்தும் பிரசுரிக்க வேண்டும். அது நாம் அடக்கி ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும், நாளுக்கு நாள் செத்துக் கொண்டிருக்கும் ஒரு இனம் என ஒவ்வொரு தமிழருக்கும் நம்மை நாமே அளவிட்டுப் பார்க்க ஒரு குறியீடாக அமைந்திருக்க வேண்டும். செயவீர்களா?

- திருமலைத் திராவிடன்

# தோட்டத்தில் இராணுவ.........

கின்றனர்) அதற்கு பொறுப்பான எந்த பெரும்பான்மை இனத்தாரும் இதுவரை கைது செய்யப்படாததுடன் அவர்கள் பாதுகாப்பு படைகளின் அனுசரணையுடன் சுதந்திரமாக நடமாட அனுமதியளித்துள்ளமை, பிந்துனு-வெவ படுகொலை சம்பவத்தை மூடிமறைக்க முயற்சித்தல், மலையகத் தமிழருக்கு விஷேட அடையாள அட்டை வழங்குவது பற்றிய யோசனை என்று தொடர்ந்து கொண்டே செல்கிறது. இவற்றை ஆதரிப்பதாகவும், அனுமதிப்பதுமாகவே மலையகத் தலைமை-களின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

இவற்றின் மூலம் அரசாங்கம் என்ன சொல்ல முயல்கிறதென்றால் நாட்டில் பெரும்பான்மையினர் யார் வேண்டுமானாலும் ஆர்ப்பாட்டம், ஊர்வலம், வீதி மறியல் போராட்டம் என எதுவேனும் செய்யலாம். ஆனால், தமிழர்கள் செய்தால் அவசரகாலச் சட்டமும், பயங்கரவாதத் தடைச்சட்டமும் செயல்படும் என்பதாகும். தங்கள் சுயநல தேவைகளுக்காக இதை எதிர்ப்பதற்கு திறனில்லாத நிலையிலேயே ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான இ.தொ.கா-வும், ம.ம.முவும் உள்ளன. இந்நிலைமை-யானது இத்தலைவர்களை மக்கள் மத்தியில் மிக வேகமாக செல்வாக்கு இழப்பிற்கு உள்ளாவதற்கும் மக்களுடனான தொடர்பின் இடைவெளி அதிகரிப்பதற்கும் வழிவகுத்துள்-ளதுடன், மிக விரைவில் இவர்கள் யார் என அம்பலப்படுத்தி விடும். இவர்கள் மக்கள் மீது உண்மையான பற்றுக் கொண்டிருந்தால் அடுத்த முறை அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து வாக்களித்துக் காட்டட்டும்.

நடைமுறை நிகழ்வுகள் எதைப் புலப்-படுத்துகின்றதென்றால் இன அரசியலின் இரண்டாவது கட்டமான வளர்ச்சிக் கட்டத்தின் ஆரம்பத்திலுள்ள மலையக அரசியலின் வெற்றியானது அதன் உறுதியான தலைமைத்-துவத்திலேயே தங்கியுள்ளது என்பதையே ஆகும். ஆயினும், இக்கட்டம் ஓரிரு தினங்-களில் கடக்கக்கூடிய கட்டமல்ல. பற்பல ஆண்டுகள் செல்லத்தக்கது. இருப்பினும் அதன் தலைமைத்துவத்தின் உறுதிப்பாடு மற்றும் செயற்திறனைப் பொறுத்து அது மாற்ற-மடையலாம்.

மலையகத்தைப் பொறுத்தமட்டில் அதன் வெளிக்கள அரசியல் என்றும், அச்சம் நிறைந்-ததே. பேரினவாதம் என்றும் தனது இருப்பை / ஆதிக்கத்தை நிலைநிறுத்த தன்னால் இயன்ற அனைத்தையும் செய்து கொண்டே இருக்கும்.

இன்றைய உள்ளக நிலைமைகளும், சாதகமின்றியே காணப்படுகின்றன. ஏலவே ஒரு பந்தியில் குறிப்பிட்டது போன்று இன்றைய மலையக அரசியல் கட்சிகள், அவற்றின் தலைமைகள், தொழிற்சங்கங்கள், மதப்பிரச்சார ஸ்தாபனங்கள், சாதி அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் என எல்லாம் தங்கள் சுயநலம் கருதி நாற்றுக்களுக்கிடையில் களைகள் போன்று இன்று வேரூன்றியுள்ளன. இவற்றின் தாக்கம் என்றும் இருந்து கொண்டே இருக்கும். இவற்றையெல்லாம் வெற்றி கொண்டு மக்களை வழிநடத்தக்கூடிய உறுதியான தலைமையே இன்றைய தேவையாக உணரப்படுகிறது. இல்லாவிடின் அடுத்த நூற்றாண்டு வரலாற்று மாணவர்கள் "மலையகத் தமிழர்" என்ற ஒரு இனம் கடந்த நூற்றாண்டு வரை இலங்கையின் இருந்துள்ளது என வரலாற்றுப் புத்தகங்களில் மட்டுமே காணக்கூடியதாக இருக்கும். அதற்குக் கூட பேரினவாதம் இடமளிக்குமா? என்பது-வும் சந்தேகம் தான்.

இறுதியாகக் கூறுவதாயின், மலையக அரசியலானது இன அரசியலின் இரண்டாவது கட்டமான வளர்ச்சியின் ஆரம்ப நிலைகளில் உள்ளது. இதன் வெற்றி உறுதியான புதிய தலைமைத்துவத்தின் மூலம் மட்டுமே கிட்டும் என்பது தெளிவாகப் புலப்படுகிறது. எனவே மாற்றத்தின் தேவையையும் புதிய தலைமைத்-துவத்தின் அவசியத்தையும் வேண்டி நிற்கிறது. மலையக அரசியல் இன்மை ஆறுமுகம் தொண்டமான், சந்திரசேகரன் தலைமையிலான அமைப்புகளையோ ஏனைய அமைப்புகளா-லோ இத்தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது என்பது வெளிப்படையான உண்மையாகும்.

எனவே யதார்த்தபூர்வமாக சிந்திக்கும் எவரும் காலத்தின் தேவை கருதி மாற்றுத் தலைமையின் அவசியத்தை உணர்தல் வேண்-டும். இன அரசியலின் தற்போதைய தலைமை புதிய மாற்றுத் தலைமையின் வளர்ச்சியை எக்காரணம் கொண்டும் அனுமதிக்காது என்-பது நிதர்சனம். ஆனால், தற்போதைய தலை-மைகள் அரசியல் தேவை கருதி உறுதியான பொருத்தமான தலைமையைக் கொடுக்கத் தவறும் பட்சத்தில் (இன்றும் உறுதியான தலைமை இல்லாத நிலையே காணப்படுகிறது.) புதிய தலைமையானது சகல விதமான தடை-களையும் இடையூறுகளையும் எதிர்கொண்டு வீறுகொண்டு எழுவதை தற்போதைய தலைமைகளினால் எவ்விதத்திலும் தடுக்க இயலாது. ஏனெனில் அது தான் அரசியல் இயங்கு விதி!

# 'கிளாசைக் கழுவிவிட்டுக்...............

செயற்பாட்டுக்கு உகந்த ஒரு விடயம் என்று கருதியிருக்கலாம் அல்லது அவர்கள் வயதாகி வந்ததால் தனிப்பட்ட முறையில் தமக்கு இது அவசியம் என்று அவர்களுக்கு தோன்றியிருக்கலாம். எல்.எச்.மெத்தானந்-தவின் போர்க்குணமிக்க பௌத்தத்துடன் ஒரு கட்டத்தில் அரசியல் ரீதியாக பிலிப் இணைந்துகொண்டார். ஆனால், டொறிக் இளமைக்காலத்தில் தான் கைவிட்ட கத்தோலிக்கத்திடம் திரும்புவதில் எந்தப் பயனும் இருப்பதாக ஒருபோதும் கருதிய-தில்லை. அவரது மரணச்சடங்கு கூட எந்த மத சடங்குகளுமின்றியே நிறைவேறியது.

டொறிக் தனிப்பட்ட முறையில் பேசும் போது சமசமாஜக் கட்சியின் சில சிரேஷ்ட தலைவர்களைப் பற்றி அகௌரவப்படுத்தும் கருத்துக்களையும் கூறுவதுண்டு. ஆனால், முரண்நகையாக, பின்நாளில் நடந்தவைகளை வைத்துப் பார்க்கையில், ஒருபோதும் பிலிப்பற்றி அவர் எதுவும் சொன்னதில்லை. அந்த நேரம் அவர், பிலிப்பை அரசியல் தலைமைத்துவத்தில் இருந்தவர்களுள் தனித்துவமான ஒருவராகவும், தலைமை வழிபாடு செய்யுமளவுக்கு உயர்ந்தவராகவும் கருதினார். அந்தக் காலத்தில் கட்சிக்குள் பிலிப் எல்லோராலும் அவ்வாறு தான் வித்தியாசப்படுத்தி மதிக்கப்பட்டார். பின்னாளில் என்.எம்.பெரேரா, கொல்வின் ஆகியோரின் எழுச்சியுடன் தம்மை இணைத்துக் கொண்டவர்களுக்கு இன்று அது நம்பமுடியாததாக இருக்கக் கூடும். என்னைப் பொறுத்தளவில் டொறிக்கிற்கு பிலிப் ஒரு தந்தை ஸ்தானத்துக்குரிய ஒருவராகவே இருந்திருக்கிறார் என்று நான் நம்புகின்றேன். ஆனால், 1942இல் பிலிப் டொறிக்குக்கு எதிராகத் திரும்பிய போது - இதுபற்றி நான் பின்னர் எழுதுவேன் - அது ஒரு ஜீரணிக்க முடியாத பெரும் அதிர்ச்சியாகத்தான் இருந்தது!

வரும்

நன்றி - நூலகத்திட்டம்



சரிநிகர்

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதிார இதழ்

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி / தொலைமடல் : 074-400045

மின்னஞ்சல் : sarini@sltnet.lk

# ஜே.வி.பியும் நோர்வேயும் சமாதானமும்

'உங்களுடன் பேசுவதற்கு எங்களுக்கு எதுவும் இல்லை"

தம்மைச் சந்திக்க வருமாறு கேட்ட நோர்வே தூதுவருக்கு ஜே.வி.பி. அளித்திருக்கும் பதில் இது.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கிற ஒரு அரசியல் கட்சி என்ற முறையில் இப்படியான முரட்டுத்தனத்துடன் இராஜதந்திர ரீதியற்ற வகையில் நடந்து கொண்ட முதலாவது அரசியல் கட்சி இதுவாகத் தான் இருக்க முடியும்.

இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் நோர்வே பங்கு கொள்வதை ஏற்காவிட்டாலும் கூட இப்படி ஒரு பதிலைச் சொல்லியிருக்கத் தேவையில்லை. அல்லது நேரில் சந்தித்துப் பேசும் போது தெரிவித்திருக்கலாம்.

ஆனால் ஜே.வி.பிக்கு அவசரம்: சிஹல உருமயவையும் மிஞ்சிக் கொண்டு இனவாதத்திற்கு தலமை ஏற்கத் துடிக்கிற அவசரம்: தீவிர ஏகாதிபத்திய எதிர்ப்பாளராகத் தன்னைக் காட்டிக் கொள்ளுவதன் மூலம் தான் ஒரு புரட்சிகரக் கட்சி என்ற தோற்றத்தை ஏற்படுத்துகிற அவசரம்: இனவாதிகளிடமும் யுத்த வாதிகளிடமும் அப்ளாஸ் வாங்குகிற அவசரம். நோர்வேயைத் தூக்கியெறிந்து விட்டது.

இனப்பிரச்சனைக்கு சமாதானத் தீர்வு காணும் நோக்குடன் புலிகளும் அரசும் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டும் என்ற அடிப்படையிலான நோர்வே அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகளை எதிர்த்து சிங்கள சிஹல உருமய தலமையிலான இனவாத சக்திகளும், ஜே.வி.பி யும் செயற்பட்டு வருவது ஒன்றும் புதிதல்ல. நோர்வே தூதரகம் முன்பாக "உள்நாட்டு அலுவல்களில் தலையிடாதே, எங்கள் பிரச்சினையை எங்களால் தீர்க்க முடியும்" என்று கோசமெழுப்பி இவர்கள் ஏற்கெனவே ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள். பிரிட்டிஸ் வெளியுறவு இராஜாங்க அமைச்சர் பீற்றர் ஹெயின் இங்கு வந்த போது அவரையும் எதிர்த்து இவர்கள் கூச்சல் போட்டார்கள். இந்தக் கூச்சல்களை சட்டை செய்யாத ஹெயின் இவர்களை "டைனோசர்கள்" என்று வர்ணித்திருந்தார்.

ஆனால், நோர்வே அரசாங்கம் இவர்களுக்கு கொஞ்சம் கௌரவம் கொடுக்கப் பார்த்தது. ஏற்கெனவே முன்பு ஒரு முறை இங்குள்ள நோர்வே தூதரகத்துக்கு குண்டு வீசிய போது அவர்களது உணர்வுகளை வெளிப்படுத்த வேறு வழி புலப்படாததால் இந்த வழியை அவர்கள் கையாள்கிறார்கள் என்று நோர்வே தூதுவர் தெரிவித்திருந்தார்.

இம்முறை தன்னை எதிர்த்தாலும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கிற கட்சி என்ற முறையில் ஜே.வி.பியை சந்தித்துப் பேச வேண்டும் என்று நோர்வேக்குத் தோன்றியிருக்கிறது. ஆனால், சந்தித்துப் பேசக் கேட்டவுடன் தன்னை ஒரு மாபெரும் புரட்சிகர இயக்கமாக நோர்வே கருதிவிட்டது என்ற நினைப்புடன் அழைப்பை விடுத்த இங்குள்ள நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்ற் போக்கை தூக்கியெறிந்து பதிலளித்திருக்கிறது ஜே.வி.பி.

ஜே.வி.பி யின் இந்த வீறாப்பு தாங்கள் முட்டாள்களல்ல என்றும் அமெரிக்காவும் பிரிட்டனுடம் நோர்வேயுடன் சேர்ந்து பிரிவினைவாதத்தை தூண்டி வருகின்றன என்றும் முட்டாள்த் தனமாக உளறிக் கொட்டியிருக்கிறது.

உண்மை! அமெரிக்க பிரித்தானிய அரசுகளோ அல்லது வேறெந்த அரசோ தமது நலன்கள் கொஞ்சமுமில்லாமல் இந்த விடயத்தில் தலையிட வரவில்லை. இந்தப் பேச்சுவார்த்தை முயற்சிகளின் போக்கு எப்படி அமையப் போகிறது என்று அக்கறையுடன் கவனித்துக் கொண்டிருக்கும் இந்தியா கூட எந்தச் சொந்த நலனும் இல்லாமல் இதில் சம்பந்தப்படப் போவதில்லை.

ஆனால், யாருடைய தலையீடுமில்லாமல் தீரக்கூடிய பிரச்சினையாகவும் இது இல்லை.

ஜே.வி.பி. சொல்வது போல இந்தப் பிரச்சினை வெளியார் தலையீடின்றித் தீர்க்கப்படக் கூடியதாக இருக்குமாயின் அது தான் உண்மையிலேயே சிறந்த வழிமுறை என்பதில் ஐயமில்லை.

ஆனால், அதைச் செய்வது எப்படி?

புலிகளை நோர்வேயிலும் மற்றும் அனைத்து ஐரோப்பிய நாடுகளிலும் தடை செய்வது. பிறகு அவர்களை யுத்தத்தில் தோற்கடிப்பது. பிறகு அரசாங்கம் சொல்கிற நிபந்தனைகட்கு உட்பட்டு சமாதானத்துக்கு வருமாறு புலிகளுக்கு உத்தரவிடுவது.

ஜே.வி.பியினது மட்டுமல்ல அரசாங்த்தினதும் அனைத்து இனவாதிகளதும் ஆசைக் கனவு இது தான்.

ஜே.வி.பியின் அகராதியில் இதற்குப் பெயர் சமாதானம் ஆக இருக்கலாம். ஆனால், அத்தகைய ஒரு சமாதானத்தை புலிகளோ தமிழ் மக்களோ ஏற்க முடியுமென்றால் இவ்வளவு உயிரைக் கொடுத்து இப்படி ஒரு போராட்டத்தில் அவர்கள் ஈடுபட வேண்டிய அவசியமே இல்லை!,

ஆனால் ஜே.வி.பிக்கு இதெல்லாம் புரியாது! இனவாதிகட்குப் புரிகிற ஒரே மொழி யுத்தம் மட்டும் தான்.

மற்றப்படி ஏகாதிபத்திய எதிர்ப்பு அது இதென்று கத்துவதெல்லாம் சுத்தமான கப்சாவன்றி வேறொன்றுமில்லை.

இனப்பிரச்சினையை விளங்கிக் கொள்ள ஜே.வி.பி நிறைய வீட்டு வேலைகள் செய்ய வேண்டும் .இல்லாவிட்டால் இப்படித்தான் 'மாரித்தவக்கை' மாதிரி கத்திக் கத்தியே செத்துப் போன மற்றைய இடதுசாரிகள் போல செத்துத் தொலைய வேண்டியது தான்!

# வவுனியா: நிவாரணத்தில் பூச்சுற்றல்!

வவுனியாவில் சேவாலங்காவினால் வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் வழங்கலில் முறைகேடு இடம் பெற்றுள்ளதாகத் தெரிய வருகிறது.

சேவாலங்காவினால் இடம்பெயர்ந்தோரிற்கென வவுனியாவில் வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் வழங்கலில் ஒரு சில கிராமங்களில் முறைகேடு நடை பெற்றுள்ளது. மகாறம்பைக்குளம் என்ற கிராமத்தில் 85 குடும்பங்களுக்கு சேவாலங்காவினால் இந்த நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன. நவ.16 அன்று கொண்டுவரப்பட்ட நிவாரணப் பொருட்களில் ஒரு தொகுதி நிவாரணப் பொருட்கள் மக்களுக்கு வழங்கப்பட்டன. அதிலும் பெரும்பாலும் இடம் பெயர்ந்தவர்களுக்கென ஒதுக்கப்பட்ட நிவாரணப் பொருட்கள் இடம் பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்படவில்லை. மிகுதிப் பொருட்களில் கணிசமான பொருட்களை அந்தப்பகுதியில் உள்ள வாசிகசாலையில் வைத்துள்ளனர். வாசிகசாலையில் வைக்கப்பட்ட பொருட்கள் நவ.20 அன்றிரவு களவாடப்பட்டுள்ளது. பொருட்களை வாசிகசாலைக்குள் வைத்தவர்கள் அதன் ஜன்னலின் உட்திறாங்கியை பூட்டவில்லை. கதவை மட்டும் பூட்டி அயல்வீட்டில் திறப்பைக் கொடுத்துள்ளனர். பொருட்கள் ஜன்னலினாலேயே களவு போயுள்ளது. ஆகவே இது திட்டமிட்ட செயலாக இருக்குமோ எனச் சந்தேகிக்கின்றனர் கிராம மக்கள். நிலைமை இப்படியிருக்க இந்தக் கிராம மக்களுக்கு வந்த பொருட்கள் அரிசி 1600 கிலோ, மா 800 கிலோ, பருப்பு 400 கிலோ, சீனி 400 கிலோ, நெத்தலிக்கருவாடு 200 கிலோ, மகீ, தேங்காய்ப்பால்மா பக்கற் 400 ஆகிய அனைத்தும் இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டு விட்டதாக மக்கள் பொருட்களைப் பெற்றுக் கொண்டதற்கான கையொப்பங்களுடன் வவுனியா பிரதேசசெயலகத்திற்கு விபரம் வழங்கப்பட்டுள்ளது. இதில் இன்னொரு துயரென்னவென்றால் இந்தப் பொருட்கள் கிடைக்காத மக்களும் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவில்லை, களவு போனது பற்றி அதிகாரிகளும் பொலிசாருக்கு முறையிடவில்லை.

இதேமுறையில் வழங்கப்பட வேண்டிய நிவாரணப் பொருட்கள் உரியவர்களுக்குக் கிடைக்கவில்லையென இராசேந்திரன்குளம் பகுதி மக்களும் தெரிவிக்கின்றனர். இந்த நிவாரண வழங்கல் முறைகேட்டை தடுக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டது அவர்களுக்கே போய்ச் சேர வேண்டும்.

கவனிக்க வேண்டியவர்கள் கவனிப்பார்களா?

– கே.ஆர்.

# மன்னார்: கப்பமும் சிற்றரசர்களும்

மன்னார் வியாபாரிகள் நீண்ட காலமாக பல்வேறுபட்ட அழுத்தங்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். மன்னாரில் பல்வேறு ஆயுதக் குழுக்கள் உள்ளன. இச்சிற்றரசர்களின் வரி வசூலிப்புகள் வியாபாரிகளை கசக்கிப் பிழிந்து விடுகின்றன.

அந்த வகையில் மன்னார் சந்தையில் கடை ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு புளொட் இயக்கத்தால் ரூபா 100உம், ஈ.பி.ஆர்.எல்.எப் (வரதர், சுரேஸ்) இரு அணிகளால் தலா ரூபா 150உம் அறவிடப்படுகின்றது. இது தவிர நகரப் பகுதியில் உள்ள கடைகள் ஒவ்வொன்றுக்கும் ஆயிரக் கணக்கில் வரி விதிக்கப்படுகின்றன.

அண்மையில் வரதரின் கூலிப்படையினரால் நகரில் உள்ள வர்த்தகர் அனைவரும் அழைக்கப்பட்டு ரூபா ஐம்பதாயிரம் தரும்படி கேட்கப்பட்டுள்ளனர். தேர்தல் திருவிழாவில் இவர்கள் முதலீடு செய்து இழந்த பணத்தை ஈடுசெய்யவே இவ்வரி அறவிடப்படுவதாக தெரிய வந்துள்ளது. தேர்தல் காலத்தில் இவ்வணி வேட்பாளர்களின் மோசடிகள் சொல்லி மாளாது.

இவ்வரி பற்றி வியாபாரி ஒருவரிடம் வினவிய போது அவர் சொன்னார். பொருட்கள் கொண்டு வர உள்ள தடையை நீக்க ஆள் இல்லை. வன்னிக்கு பொருட்கள் கொண்டு போக அனுமதி இல்லை. கப்பம் வாங்க மட்டும் வந்து விடுவார்கள்? யாரிடம் முறையிடுவது இதனை? நியாயமான கேள்வி தானே இது?

# வவுனியா:....

நிலையத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதும இன்னுமொரு முக்கிய அம்சமாக இருக்கிறது. இத்துடன் இடம் பெயர்ந்து வந்துள்ள மக்கள் தஞ்சமடைந்துள்ள வவுனியா இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள நலன்புரி நிலையங்களாகிய அகதி முகாம்கள் அடிக்கடி சுற்றி வளைக்கப்பட்டு இளைஞர்கள் கைது செய்யப்படுவதும் அதிகமாக இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. இளைஞர்களான தமது பிள்ளைகளை வீட்டுக் வெளியில் அனுப்புவது என்பது அச்சத்திற்குரிய காரியமாக இருப்பதாக காணாமல் போனவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றார்கள். குறிப்பாக பிள்ளைகளை வவுனியா நகருக்கு அனுப்புவதென்றால் பயமாகவே உள்ளதென்றும் அவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் கஸ்டப்படுத்தப்படுகிறார்கள். சுதந்திரமற்றவர்களாக இருக்கின்றார்கள் என்று கூறுகின்ற அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள வவுனியாவில் இவ்வாறு வகை தொகையற்ற நிலையில் இளைஞர்கள் காணாமல் போவது ஏன் என்று எழுகிற கேள்விக்கு எது வித பதிலையும் தர பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட எவராலும் முடியவில்லை என்பது தான் துயரம்.

பாலஸ்தீனம்
கிழக்கு திமோர்

* சர்வதேச அனுபவங்களிலிருந்து சில படிப்பினைகள்

கலந்துரையாடல்

* சாதாத் – பிரச்சினைகளுக்கான தீர்வு சர்வதேச முயற்சிகள் பற்றி...
* ராவா – ஆப்கானிஸ்தான் பெண்கள் பற்றி....



டிச. 12 செவ்வாய் இரவு 7.25 மணிக்கு
ரி.என்.எல் தொலைக்காட்சியில்

எரியும் இனப்பிரச்சினை ! மக்களின் அவலங்கள் போதும் !!

இன நல்லிணக்கம் மூலமான சமாதானத்திற்கு
இளையவர்களின் பணி !!!

சமஉரிமை, சகவாழ்வு, சமாதானம்

இலங்கையின் வரலாற்றில் இனப்பிரச்சினை தொடர்பான
முதலாவது தமிழ் தொலைக்காட்சி சஞ்சிகை நிகழ்ச்சி இது

ஆசிரியர் : பாலசுப்ரமணியம் வசந்தன், வெளியீட்டாசிரியர் : எஸ்.கே.விக்னேஸ்வரன், 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட. அச்சுப்பதிவு : நவமக, 66/04, தர்மாராம வீதி, இரத்மலானை. 06.12.2000